# கல்கி



KALKI டிசம்பர் 20, 1953 4 அணா


சீக்கிரமே நுரையும் ஸன்லைட் அடித்துத்துவைக்காமலே
வெண்மையாகவும் பிரகாசமாகவும் சலவை செய்யும்
"வாத்தியார் அம்மாள் என் சுத்தமான தோற்றத்தை புகழ்கிறாள். என் தாய் என் பிராக்குகளை ஸன்லைட் சோப்பினால் பளிச்சென்று வெண்மையாக சலவை செய்வதுதான் இதற்குக் காரணம்."
"என் வகுப்பில் நான் தான் அதிக சோபையுடன் விளங்குகிறேன். என் கலர் பிராக்கை ஸன்லைட் சோப் எவ்வளவு பிரகாசமாக சலவை செய்திருக்கிறதென்று பாருங்கள்!"
SUNLIGHT
ஸன்லைட் சோப்
துணிகளைக் காப்பாற்றுகிறது, சிரமத்தைக் குறைக்கிறது, பணத்தை மிச்சப்படுத்துகிறது

S. 219-50 TM

# கல்கி
# பொருளடக்கம்


மலர் 13 | இதழ் 21

**1953 டிசம்பர் 20**

விஜய ஞு | மார்கழி 5



| | | |
|---|---|---|
| ஆசியா கலங்குகின்றது | (தலையங்கம்) | ... 3 |
| மகிழ்ச்சி அளிக்கும் கபிட்சத் திட்டம் | ... | ... 4 |
| ஐம்பது வருஷக் கனவு நிறைவேறியது ! | ... | ... 5 |
| விவேகத்தைப் பாராட்டுகிறோம் | ... | ... 5 |
| எது வகுப்பு வாதம் ? | ரஜனி | ... 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... 7 |
| "ஆரியர்-திராவிடர் என்னும் அறிவீனம்!" | ... | ... 15 |
| எந்த வழி நல்ல வழி ! (கார்ட்டூன்) | ரகு | ... 16 |
| ராஜாஜி ஜயந்தி (படங்கள்) | ... | ... 18 |
| கடவுளர் தரிசனம் | பரதன் | ... 21 |
| பொல்லாத காதல் ! | பரதேசி | ... 29 |
| டாக்டரின் மனைவி | டி. எஸ். கோதண்டராமன் | ... 35 |
| எங்கள் வீட்டு லக்ஷ்மி | இந்திரா நடராஜன் | ... 40 |
| வாழ்வு மலர்ந்தது | கே. ஆர். கௌசல்யா | ... 45 |
| மனோரமா | ரமண்லால் வஸந்தலால் தேசாய்-ரா.வீ. | ... 51 |
| பாதையில் ஒரே குழப்பம் ! | டி. கே. சி. | ... 58 |
| பேசும் மரம் (பாப்பா மலர்) | சீதா | ... 61 |
| கீதமாலா | ... | ... 64 |
| சோஷலிஸம் ஏன் வேண்டும் ? | எம். கே. ராஜகோபாலன் | ... 67 |
| சிந்திய பால் | கே. வி. முருகன் | ... 74 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.


## இந்தியன் பைன் ஆர்ட்ஸ் ஸொஸைடி, மதராஸ் (ரிஜிஸ்டர்டு)

சங்கீதத் திருவிழா — கோகலே ஹாலில் — 23-12-53 முதல் 3-1-54 வரை

திறப்பாளர் : கவர்னர் ஸ்ரீ ஸ்ரீப்ரகாசா அவர்கள் தலைவர் : 'கல்கி' ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள்

திறப்பு விழா : புதன் 23-12-53 மாலை 5-30 மணிக்கு

கச்சேரி விவரம் (D. V.)

1. வியாழன் 24-12-53 மாலை 5-30 மணிக்கு
எம். எல். வஸந்தகுமாரி—பாட்டு

2. வெள்ளி 25-12-53 மாலை 6 மணிக்கு
குமாரி கமலா—பரதநாட்டியம்

3. சனி 26-12-53 மாலை 6 மணிக்கு
லலிதா, பத்மினி, ராகினி—இந்திய நடனங்கள்

4. ஞாயிறு 27-12-53 மாலை 5-30 மணிக்கு
எம். எஸ். சுப்புலக்ஷ்மி—பாட்டு

5. திங்கள் 28-12-53 மாலை 5-30 மணிக்கு
அரியக்குடி (கிருஷ்ணன், பழனி)—பாட்டு

6. செவ்வாய் 29-12-53 மாலை 5 மணிக்கு
சேர்மாதேவி சுப்பிரமணிய சாஸ்திரி—வீணை

செவ்வாய் 29-12-53 மாலை 6-30 மணிக்கு
ஸ்ரீமதி ரீதா—மணிபுரி நடனம்

7. புதன் 30-12-53 மாலை 5-30 மணிக்கு
கே. பி. சுந்தராம்பாள்—பாட்டு

8. வியாழன் 31-12-53 மாலை 5-30 மணிக்கு
மதுரை மணி (சௌடையா, பாலக்காடு மணி)—பாட்டு

9. வெள்ளி 1-1-54 மாலை 6 மணிக்கு
வைஜயந்திமாலா—பரதநாட்டியம்

10. சனி 2-1-54 மாலை 5-30 மணிக்கு
மணக்கால் ரங்கராஜன்—பாட்டு

11. ஞாயிறு 3-1-54 மாலை 6 மணிக்கு
கோபிநாத்-தங்கமணி—ஓரியண்டல் நடனம்

ஸீஸன் டிக்கெட்டுகள் : ஸ்பெஷல் ரிஸர்வ்டு ரூ. 50/- ரிஸர்வ்டு ரூ. 25/- முதல் வகுப்பு ரூ. 15/- இரண்டாம் வகுப்பு ரூ. 10/-

டிக்கெட்டுகள் கிடைக்குமிடம் : ஸொஸைடி ஆபீஸ், கோகலே ஹால், ஜி. டி., சென்னை (போன் : 3254)


டிஸம்பர்
19உ முதல்
சென்னை பாரகன், கிரௌன், ஸரஸ்வதி
மூன்று தியேட்டர்களிலும்
மற்றும்
கோயமுத்தூர் - ராயல்
திருநெல்வேலி - பாலஸ்
திருவனந்தபுரம் - நியூ தியேட்டர்
நாகர்கோவில் - கிருஷ்ண
ஈரோடு - ராஜாராம்
திண்டுக்கல் - N.V.G.B.
வேலூர் - கிரௌன்
காஞ்சீபுரம் - கண்ணன்
★
மதுரை
பழனி டாக்கீஸில்
26உ முதல்
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி பிலிம் கம்பெனியின்
லக்ஷ்மி
தமிழ்
கண்ணாம்பா · வனஜா · எம் ஸரோஜா · வீ கே சரஸ்வதி
மனோஹர் · ஸ்.நாராயண ராவ் · பிரண்ட் ராமசாமி · சந்திரபாபு
டி. வி. சேதுராமன்
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

கல்கி

மலர் 13 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 21

# ஆசியா கலங்குகின்றது

சில மாதங்களுக்கு முன் அமெரிக்கப் பிரமுகர் ஸ்ரீ அட்லாய் ஸ்டீவன்சன் ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுத் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்றது ஞாபகம் இருக்கலாம்.

சென்ற வருஷம் நடந்த அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜெனரல் ஐசன்ஹோவருக்குப் போட்டியாக நின்று தோல்வியுற்றவர் அவர்தான் என்பது யாவரும் அறிந்த விஷயம்.

அவர் தமது யாத்திரையின் போது இந்தியாவுக்கு வந்திருந்தார். பாகிஸ்தானுக்கும் சென்றார். காஷ்மீருக்குச் செல்லவும் அவர் மறக்க வில்லை.

போகிற போக்கில் அந்தப் பொல்லாத மனிதர் ஷேக் அப்துல்லாவின் மனத்தைக் கலைத்து என்னவோ விஷமம் செய்து விட்டதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறின.

அதிலிருந்துதான் காஷ்மீரில் நெருக்கடி ஆரம்பமாயிற்று.

அது போலவே சில தினங்களுக்கு முன் இந்தியா உள்படப் பல நாடுகளுக்கும் விஜயம் செய்த அமெரிக்க உதவி ஜனாதிபதி நிக்சன் பாகிஸ்தானுக்கும் சென்றார்.

அவரும், பாகிஸ்தானிலிருந்து போகிற போக்கிலே, எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றுவது போல விஷமத்தனமாகப் பேசி விட்டுச் சென்றிருக்கிறார்.

பாகிஸ்தானின் சுதந்திரத்துக்கு ஆபத்து ஏற்பட்டு வருவதாக நிக்சன் கராச்சியில் கூறினார். பாகிஸ்தானை அழித்துவிட முயற்சிப்போரைப் பாகிஸ்தானியர்கள் எதிர்த்து நிற்பதற்கு அமெரிக்கா எல்லாவித உதவியும் புரியத் தயாராக இருக்கிறது என்றும் அறிவித்தார்.

பாகிஸ்தானின் சுதந்திரத்துக்கு வெளியிலிருந்து ஏதோ ஆபத்து வந்து கொண்டிருப்பதாக நிக்சன் கூறுவது வெறும் கற்பனையேயன்றி வேறெதுவும் இல்லை.

அமெரிக்காவும் பாகிஸ்தானும் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ள முயற்சிப்பது நியாயம் என்று சாதிப்பதற்காக நிக்சன் அவ்விதம் கயிறு திரிக்க முற்பட்டிருக்கலாம்.

அமெரிக்காவில் ஜனாதிபதிக்கு அடுத்த ஸ்தானத்தை வகிக்கும் நிக்சன் பாகிஸ்தான் மக்களின் மனத்தில் சந்தேகத்தைத் தூண்டி விடும் வண்ணம் பேசியிருப்பது மிகவும் ஆட்சேபிக்கத் தக்கதாகும்.

அதிலிருந்து அமெரிக்க ராஜ தந்திரிகளின் மனப்போக்கு எவ்வளவு விபரீதமாக இருந்து வருகிறது என்பது தெரிகிறது அல்லவா?

*　　　　*　　　　*　　　　*

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் ராணுவ ஒப்பந்தம் ஏற்படப் போவதாக வெளியான செய்திக்கு ஆதாரம் இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி ஜெனரல் ஐசன்ஹோவர் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் கவர்னர் ஜெனரல் குலாம் முகமதுவும் மேற்படி செய்தியை ஒரே அடியாக மறுத்துள்ளார்.

எனினும் அவர்களுடைய கூற்று முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கும் வித்தையாக இருக்கிறது.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் ராணுவ ஒப்பந்தப் பேச்சு எதுவும் நடைபெறவில்லை; பாகிஸ்தானுக்குப் போர்த் தளவாடங்கள் அனுப்பும் விஷயமாக மாத்திரமே இரு நாடுகளுக்கும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்று பாகிஸ்தான் வெளி நாட்டு மந்திரி சர் ஜபருல்லாகான் ஒத்துக் கொண்டிருக்கிறார்.

பாகிஸ்தான் தலைவர்கள் உண்மையை எவ்வளவு தூரம் மறைத்தாலும் மழுப்பினாலும், போர்த் தளவாடங்களை அனுப்புவது ராணுவ ஒப்பந்தத்தின் முதற்படி என்பதை உலகம் அறிந்து கொள்ளத் தவறாது.

அமெரிக்க-பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தப் பேச்சு வார்த்தைகள் பற்றிப் பாகிஸ்தான் பத்திரிகைகள் குறிப்பிடுகின்றன. பிரிட்டன், அமெரிக்கா, துருக்கி

முதலிய நாடுகளில் உள்ள பத்திரிகைகளும் அவ்விஷயத்தை அம்பலப்படுத்தி யிருக்கின்றன.

இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேருவும் அம்முயற்சியைச் சென்ற ஒரு மாத காலமாக அடிக்கடி கண்டித்து வருகிறார்.

தகுந்த ஆதாரமின்றி நேருஜி அவ்விஷயத்தைப் பகிரங்கமாகக் கண்டிக்க முற்பட்டிருக்க மாட்டார் என்பது நிச்சயம்.

அமெரிக்காவுக்கும் பாகிஸ்தானுக்கும் ராணுவ ஒப்பந்தம் ஏற்படுமாயின், அதனால் தென்கிழக்கு ஆசியா முழுவதும் பெரும் கொந்தளிப்பு ஏற்படும்; இந்தியா அதை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்று நேருஜி எச்சரித்திருப்பதை அமெரிக்கா, பாகிஸ்தான் உள்பட உலகத்தில் உள்ள சகல நாடுகளும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

கொரியாப் போர் சம்பந்தமாக ஜவாஹர்லால்ஜியின் தீர்க்க தரிசனம் உண்மையாகியதை மேற்படி நாடுகள் மறந்திருக்க முடியாது.

அமெரிக்கா – பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்த முயற்சியை ருஷ்யா கண்டித்திருக்கிறது; சீனா ஆட்சேபித்திருக்கிறது; ஆப்கானிஸ்தான் உள்பட ஆசிய நாடுகளில் பல அதைக் கண்டித்திருக்கின்றன; அச்செய்தி சில அரபு நாடுகளிலும் பீதியை உண்டுபண்ணி யிருக்கிறது.

பாரத நாடு ராணுவத்தையோ, ராணுவச் செலவையோ பெருக்க முற்படவில்லை. அதற்கு மாறாகத் தன் முழு கவனத்தையும் சக்தியையும் ஆக்க வேலைகளிலும் அபிவிருத்தித் திட்டங்களிலும் பயன்படுத்தி வருகிறது.

அப்படி யிருக்க, தன் எல்லையை அடுத்துள்ள பாகிஸ்தான் ராணுவத்தைப் பெருக்க முற்பட்டிருப்பதை இந்தியா எவ்வாறு மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியும்!

உலக அமைதியையும் உலக சமாதானத்தையும் பாதுகாப்பதே தங்களுடைய லட்சியம் என்று பறைசாற்றி வரும் அமெரிக்கத் தலைவர்கள், பாகிஸ்தானுடன் ராணுவ ஒப்பந்தம் செய்து கொள்ள முற்பட்டிருப்பதன் மூலம் உலகத்தின் பெரும் பகுதியில் சந்தேகத்தையும் சஞ்சலத்தையும் உண்டாக்கி யிருக்கிறார்கள்; உலக அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் ஆசியா நாடுகள் யாவும் கவலையும் கலக்கமும் கொள்ளும்படி செய்திருக்கிறார்கள்.

# மகிழ்ச்சி அளிக்கும் சுபிட்சத் திட்டம்

சென்ற பல ஆண்டுகளாக, சென்னை ராஜ்ய சர்க்காருக்கு இரண்டு விஷயங்கள் இடைவிடாமல் பெரும் கலக்கத்தைக் கொடுத்து வந்தன. அவற்றில் ஒன்று உணவுப் பிரச்னை, மற்றொன்று பஞ்ச நிலைமை. இந்த இரண்டுவித துன்பங்களிலிருந்தும் சென்னை ராஜ்யம் விடுதலை பெறுவதற்கு வழி பிறந்திருக்கிறது என்ற நல்ல செய்தியைச் சென்னை சர்க்கார் நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

1953–54ம் வருஷத்தின் பின் பகுதி ஆறுமாத வரவு செலவுத் திட்டத்தைச் சென்னை சட்டசபையில் சமர்ப்பித்தபோது நிதி மந்திரி மேற்படி சந்தோஷகரமான செய்தியை அறிவித்தார். இதைக் கேட்டுச் சென்னை மகாஜனங்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சென்ற பல ஆண்டுகளாகப் பொய்த்துப் போயிருந்த பருவ மழைக்கு இவ் வருஷம் கருணை பிறந்ததால், உணவுப் பிரச்னை பற்றிய கவலை வெகுவாகக் குறைந்திருக்கிறது. உணவு தானியங்களின் விலைகளும் இறங்கு முகமாக இருந்து வருகின்றன. சென்ற மகா யுத்தம் முடிந்த பின், இப்போதுதான் முதல் தடவையாகக் கடைகளில் நியாய விலைக்கு வேண்டிய அளவு அரிசி கிடைக்கத் தொடங்கி யிருக்கிறது.

சட்டசபையில் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசிய நிதி மந்திரி, மழை காரணமாகச் சுபிட்ச நிலைமை ஏற்பட்டிருப்பதால் பஞ்ச நிவாரண வேலைகளை நிறுத்தும்படி நேரலாம் என்ற சந்தோஷச் செய்தியையும் அறிவித்தார்.

சென்ற சில வருஷங்களாகப் பஞ்சப் பேய் சர்க்கார் கஜானாவிலிருந்து லட்சக் கணக்கான ரூபாயை விழுங்கி வந்தது அல்லவா! இனி அத்தகைய செலவினம் மறைந்து விடும்.

உணவுப் பற்றாக் குறையும், பஞ்ச நிலைமையும் சென்னை ராஜ்ய மக்களின் வாழ்க்கையில் நிரந்தரமான அம்சங்களாகி விடுமோ என்று பயந்தவர்களுக்கு, சட்ட சபையில் நிதி மந்திரியின் அறிவிப்பு மிகுந்த ஆறுதலை அளிக்கும்.

சென்னையிலிருந்து ஆந்திரப் பிரதேசங்கள் தனி ராஜ்யமாகப் பிரிந்து விட்டதாலேயே 53–54ம் வருஷத்திய வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது ஆறுமாதப் பகுதியைத் தனியாகச் சமர்ப்பிக்கும்படியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த இடைக்காலத் திட்டம் சென்னை ராஜ்யத்தின் திருப்திகரமான நிதி நிலைமையைக் காட்டுவது குறிப்பிடத் தக்கது.

இந்தத் திட்டத்தின்படி சென்னை சர்க்காரின் பிற்பகுதி ஆறு மாதத்துக்கு வருமானம் சுமார் 23 கோடியே 71 லட்சம் ரூபாய் என்றும், செலவு 23 கோடியே 49 லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. எனவே உபரியாக 23 லட்சம் ரூபாய்க்கு மேல் கிடைக்கும் என்று தெரிகிறது.

இனி சர்க்காருக்கு உணவுப் பற்றாக் குறையை ஈடு செய்ய வேண்டிய கஷ்டமோ, பஞ்ச நிவாரண வேலைகளுக்குச் செலவு செய்ய வேண்டிய அவசியமோ ஏற்படாது என்ற நிலைமை உண்டாகி யிருப்பதால், செலவு போகச் சர்க்காருக்கு அதிக மிச்சம் ஏற்படவும் இடமிருக்கிறது.

சமீபத்தில் பார்லிமெண்டிலே நிறைவேறிய சொத்து வாரிசு மசோதாவின் மூலம் கிடைக்கும் வருமானத்தில் சென்னை சர்க்காருக்கும் பங்கு இருக்குமாதலால், சர்க்காரின் நிதி நிலைமை மேற்கொண்டு அபிவிருத்தி அடைவதற்கு வழி உண்டாகி யிருக்கிறது.

புதிதாகத் தேசிய அபிவிருத்தித் திட்டம், தண்ணீர் விநியோகத் திட்டம், நீர்ப்பாசனத் திட்டம், மின்சார விஸ்தரிப்புத் திட்டம், கல்வி ஸ்தாபனங்களுக்கு மான்யம் அளிக்கும் திட்டம் முதலிய பல்வேறு ஆக்கத் திட்டங்களையும் சென்னை சர்க்கார் கைக் கொள்ள முற்பட்டிருப்பதும் வரவு செலவுத் திட்டத்தின் போற்றத்தக்க அம்சமாகும். எனவே, ஆந்திர மாகாணப் பிரிவினை காரணமாக, சென்னை சட்ட சபையில் இட நெருக்கடி குறைந்திருக்கிறது என்ற ஒரு குறையைத் தவிர, அதனால் சென்னை ராஜ்யத்துக்கு வேறு எவ்விதக் குறையும் இராது என்பது நிதர்சனமாகி யிருக்கிறது!

# ஐம்பது வருஷக் கனவு நிறைவேறியது!

சென்னையில் காங்கிரஸ் சர்க்காரின் ஆட்சி ஏற்பட்டு ஐந்து ஆறு ஆண்டுகளுக்குள் எத்தனையோ நீர்ப்பாசனத் திட்டங்கள் அமுலுக்கு வந்துள்ளன. வறண்டு கிடந்த எத்தனையோ ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்கள் குளிர்ந்து பொன் விளையும் பூமியாக மாறி யிருக்கின்றன. சென்ற வாரத்தில் ராஜாஜியால் அங்குரார்ப் பணம் செய்யப்பட்ட அமராவதி அணைத்திட்டமும் அத்தகைய சுபிட்சத் திட்டங்களில் ஒன்றாக விளங்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

கோயம்புத்தூர் ஜில்லாவில் செல்லும் அமராவதி நதிக்கு அணைகட்டி நீர்ப்பாசன வசதி செய்ய வேண்டும் என்ற யோசனை சென்ற அரை நூற்றாண்டுக்கு மேலாக இருந்து வருகிறது. எனினும் இந்த ஐம்பது வருஷக் கனவு காங்கிரஸ் சர்க்கார் ஏற்பட்டு ஆறு வருஷ காலத்துக்குள் நிறைவேறியது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும்.

அந்த அணைக்கட்டு இன்னும் நாலு வருஷங்களில் கட்டப்பட்டு முடிந்து விடும் என்று தெரிகிறது. அதன் பலனாக ஏற்கெனவே பயிரிடப் பட்டு வரும் முப்பத்திரண்டாயிரம் ஏக்கர்களுக்குத் தங்கு தடையின்றி நிரந்தரமான நீர்ப்பாசன வசதி கிடைப்பதற்கு வழி உண்டாகும். புதிதாகவும் பதினையாயிரம் ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப்பாசன வசதி ஏற்படும். அந்த நிலங்களிலிருந்து ஆயிரக்கணக்கான டன் அரிசியும் தினையும் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

சென்ற பல ஆண்டுகளாகப் பஞ்சத்தினால் கஷ்டத்துக்கு உள்ளாகி வந்த சில ஜில்லாக்களில் கோயம்புத்தூரும் ஒன்று. முக்கியமாக அந்த ஜில்லாவைச் சேர்ந்த உடுமலைப் பேட்டை, தாராபுரம் தாலூகாக்கள் பஞ்சத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற வழியில்லாமல் இருந்தது. மேற்படி பஞ்ச நிவாரண வேலைகளுக்காகச் சர்க்கார் லட்சக் கணக்கில் செலவு செய்ய வேண்டி யிருந்தது. ஆனால் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள அமராவதி அணைக்கட்டு நிர்மாணத்தின் மூலம் அடிக்கடி ஏற்படும் அத்தகைய பரிதாபகரமான நிலைமைக்குப் பரிகாரம் உண்டாகும்.

# விவேகத்தைப் பாராட்டுகிறோம்

'விடுதலை செய்வதே விவேகம்' என்ற தலைப்பில் சென்ற வாரத்திய "கல்கி" இதழில் நாம் எழுதி யிருந்ததை, அதற்குள் யாரும் மறந்திருக்க முடியாது. பம்பாயில் நடந்த பார்டி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுச் சிறைத் தண்டனை அடைந்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஸ்ரீ அசோக் மேத்தா முதலியோரைத் தாமதமின்றி விடுதலை செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தோம். பார்டி சத்தியாக்கிரக சம்பந்தமாக மொத்தம் ஆயிரத்து அறுநூறு பேர்கள் வரையில் தண்டனை அடைந்தனர். இதிலிருந்து மேற்படி சத்தியாக்கிரகத்தின் தீவிரத்தைத் தெரிந்து கொள்ளலாம்.

ஆனால் பம்பாய் சர்க்கார் இப்போது பிறப்பித்துள்ள உத்தரவில், பார்டி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டுத் தண்டனை அடைந்த சகலரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்கள். அவ்விஷயமாக நடந்து வரும் வழக்குகளையும் நிறுத்திவிட வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். சத்தியாக்கிரகிகளுக்கு விதிக்கப்பட்டிருந்த அபராதத் தொகைகளையும் முற்றிலும் வஜா செய்திருக்கிறார்கள்.

பார்டி சத்தியாக்கிரகத்தின் நியாயத்தைப் பம்பாய் சர்க்கார் இவ்வளவு சீக்கிரத்தில் உணர்ந்தது போற்றத்தக்கது. அதை உணர்ந்ததும், சிறிதும் காலம் கடத்தாமல் அதற்குப் பரிகாரம் செய்ய முற்பட்டது அவர்களுக்குப் பெருமையை உண்டாக்கி யிருக்கிறது.

மேற்படி சர்க்காரின் உத்தரவுக்கு இணங்க, ஸ்ரீ அசோக் மேத்தா முதலிய பலரும் தாங்கள் தண்டனை அடைந்த சில நாட்களுக்குள் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம் ஆகும்.

பம்பாய் அரசாங்கம் வீண் கௌரவத்தைப் பாராட்டாமல், காலதாமதமின்றி பார்டி சத்தியாக்கிரகிகளை விடுதலை செய்ததை மிகவும் பாராட்டுகிறோம். மேற்படி செய்கையின் மூலம் பம்பாய் சர்க்கார் தாங்கள் விவேகிகள் என்பதைச் சந்தேகமின்றி நிரூபித்திருக்கிறார்கள்.

# நீலகண்டர் இருவர்!

குபேரனால் சாப மடைந்து விந்தியமலைச் சாரலில் வசிக்க நேர்ந்த யக்ஷன் ஒருவன் தன் காதலிக்கு மேகத்தையே தூது விடுகிறான். அளகாபுரிக்குச் செல்லும் அந்த மேகங்களுக்கு அங்கே தன் காதலியை அடையாளம் புரிந்து கொள்ள வேண்டிச் சில குறிப்புக்களையும் கூறுகிறான் :

"மேகமே! நீ செல்லும் வழியில் லீலா பர்வதம் இருக்கிறது. அங்கே ஒரு மாதவிக் கொடி வீடிருக்கிறது. அதன் அருகில் அசோக மரமும் வகுள மரமும் இருக்கின்றன. அவைகள் அழகும் மணமும் நிரம்பிய புஷ்பங்களைப் பூத்துச் சொரியும். அவற்றினிடையில் பச்சை வர்ண மணிகள் கோத்த, ஸ்படிகக் கல் மேடையொன்று தங்கத் தூண்கள் தாங்கி நிற்கும். அங்கேதான் எங்கள் வீட்டு அழகிய நீலக்கழுத்து கொண்ட மயில் இரவு நேரங்களில் தங்கும்.

"மேகமே! பொதுவாக மயில்கள் எல்லாமே உன் உற்ற நண்பர்கள்தாம். உன்னைக் கண்ட வுடனேயே அவைகளுக்கு மகிழ்ச்சி பொங்கி நடனம் புரியத் தொடங்கிவிடும். ஆனால் எங்கள் வீட்டு மயிலின் நடனத்தில் தனி விசேஷம் உண்டு. என் காதலி தன் கைகளால் தாளம்போட அதற்கு ஏற்ப எங்கள் மயில் நடனம் ஆட அதற்குக் கற்றுக் கொடுத்திருக்கிறாள். அந்த நீலமயிலின் அற்புத நடனத்தைப் பார்க்கும்போது நீலகண்டப் பெருமானின் நடனத்தைப் பார்ப்பதுபோலவே இருக்கும்."

யக்ஷனின் காதலி, மயிலுக்கு நடனப் பயிற்சி யளிக்கும் காட்சியை நமது ஓவியர் சந்திரா இவ்வாறு அட்டைக்கு அற்புதச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்.

*[காளிதாசனுடைய மேகதூதன் என்னும் காவியத்திலிருந்து எடுத்தது. லெப்டினண்ட் கவர்னர் ஸ்ரீ க. சந்தானம் அவர்களின் மொழிபெயர்ப்பைத் தழுவியது.]*

# எது வகுப்புவாதம்?

கொழும்பு, டிசம்பர் மீ 12உ.

சுமார் முப்பது வருடங்களுக்கு அதிகமாகச் சிங்களத் தலைவர்களுக்கு விசுவாசமாகவும் பிறந்த பொன் நாட்டுக்குச் சிறப்பாகவும் சேவை செய்த தம்மைப் பார்த்து வகுப்புவாதி யென்றும், இன உணர்ச்சிகளைக் கிளப்பி விடுவதாகவும் புகார் செய்த வகுப்புவாதிகளுக்குக் கைத்தொழில் வீடமைப்பு இலாகா மந்திரி ஸர் கந்தையா வைத்தியநாதன் பதில் கொடுத்திருக்கிறார். இவ்வாரம் அவர் நிகழ்த்திய பிரசங்கம் மிக முக்கியமானது.

சாதாரணமாக இரண்டு சங்கங்கள் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்வதென்றால் அதிசயம். பல்வேறு சமய கலாசார சமூகத் துறைகளில் இயங்கும் தமிழர்களின் முப்பது சங்கங்கள் ஒன்று சேர்ந்து கொழும்பு நகர மண்டபத்தில் ஸர் கந்தையாவுக்கு ஒரு வரவேற்பு உபசாரம் நடத்தியபொழுது முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயகா, பல வெளிநாட்டு ஸ்தானிகர்கள், நீதிபதிகள், பார்லிமெண்ட் மெம்பர்கள், ஒவ்வொரு சமயத்தையும் வகுப்பையும் சேர்ந்த பிரபலஸ்தர்கள் முதலான அவ்வளவு பேர்களும் திரண்டு வந்து ஸர் கந்தையாவைக் கௌரவித்தது தமிழ் மக்கள் அனைவருக்குமே பெருமை தரும் வைபவமாயிருந்தது. ஸர் கந்தையாவிடம்தான் மக்களுக்கு எவ்வளவு அபிமானம்!

இவ்வளவு காலமும் அரசாங்க சேவையில் வாய் மூடி மௌனியாயிருந்த ஸர் கந்தையா அன்று அடை மழை பொழிவதைப் போலப் பொழிந்து கொட்டியதைக் கேட்டு அத்தனை பேர்களும் ஆச்சரியக் கடலில் மூழ்கிப் போனார்கள். மாபெரும் சிங்களத் தலைவர்களுக்கெல்லாம் பக்கபலமாகவும் அந்தரங்க ஆலோசகராகவும் இருந்ததை ஸர் கந்தையா சுட்டிக் காட்டி ''தமிழன் வாயைத் திறந்தால் வகுப்புவாதம்; தமிழரின் பண்பாட்டைக் குறிப்பிட்டால் வகுப்புவாதம்! இப்படிச் சொல்லித் தமிழன் வாய் திறக்கவொட்டாமல் ஒடுக்குவதாயிருந்தால் அது ஒருபோதும் நடவாது'' என்று எச்சரித்தார் ஸர் கந்தையா.

''எது ஐயா வகுப்புவாதம்! நமது அரசியல் திட்டமும் ஜனநாயகமும் வழங்கும் உரிமைகளை ஒவ்வொருவரும் பெறவேண்டுமென்று கூறுவதா வகுப்புவாதம்! ஒடுக்கப்பட்ட மக்களை அஞ்சாமல் நிமிர்ந்து நின்று 'உன் உரிமைகளைக் கேள்' என்று சொல்லுவதா வகுப்புவாதம்! ஒருவர் குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவரென்பதற்காக அவருடைய உரிமைகளைப் பறிக்க முயற்சிப்பது வகுப்புவாதம். ஒரு வகுப்பார் மற்ற வகுப்பினருக்கு இல்லாத உரிமைகளையும் சலுகைகளையும் பெற முயற்சிப்பது வகுப்புவாதம். ஒருவர் குறிப்பிட்ட ஒரு வகுப்பைச் சேர்ந்தவரென்பதற்காக அவருடைய புகழையும் கீர்த்தியையும் பாழ்படுத்த முயற்சிப்பது வகுப்புவாதம்! இதை விட்டு மனம் போனபடி ஒரு சிலர் வகுப்புவாதப் புகார்களை அள்ளி வீசுவது அவர்களது ஞான சூன்யத்தையே அம்பலப் படுத்துகிறது.''

இவ்விதம் ஸர் கந்தையா கொட்டி முழக்கிய பொழுது சபையில் ஒரு குண்டூசி கீழே விழுந்தால் கிணீரென்று சப்தம் கேட்கும். அவ்வளவு கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு ஏதோ ஒரு புது உலகத்தில் சஞ்சரிப்பதைப் போலத் தோன்றியிருக்க வேண்டும். இப்படிப் பேசிய மனிதர் தமக்குத் தமிழர்களின் தலைவராயிருக்க வேண்டுமென்ற ஆசை யில்லை யென்றும் தலைமைப் பதவிக்குரிய போட்டியிலிருந்து தம்மை விடுவித்து விடவேண்டுமென்றும் கூறினார். எப்படி இருக்கிறது கதை! இது அவர் இஷ்டமா அல்லது தமிழ் மக்களின் இஷ்டமா! வேண்டா மென்பவர்களைச் சும்மா விட்டு விடுவது தமிழர்களின் வழக்கமில்லை. அதிலும் தமிழ் மக்களின் சோதனை மிக்க இக்காலத்தில் ஸர் கந்தையாவைப் போன்ற ஒரு சிறந்த அறிவாளியை அவருடைய இஷ்டம்போல ஒதுங்கி நிற்க யார் விடுவார்கள்!

இந்தியர் பிரச்னையிலும் ஸர் கந்தையாவுக்கு மனமாற்றம் ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. மேற்படி கூட்டத்தில் ஸ்ரீ கே. பி. ஹரன் பேசிய பொழுது இலங்கைக்கும் இந்தியாவுக்கு மிடையே நல்லுறவை ஏற்படுத்த அடுத்து நடக்கப் போகும் புது டில்லி பிரதமர்கள் சம்பாஷணையில் ஸர் கந்தையா தீவிர முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

டில்லி சம்பாஷணைகளைப் பற்றிப் பிரஸ்தாபிக்கும் பொழுது இந்தியர்களுக்குப் பிரஜாவுரிமை மறுக்கச் சில பிற்போக்கு கண்டியத் தலைவர்கள் ஒரு புதிய காரணத்தைச் சொல்ல இப்பொழுது கிளம்பியிருப்பதையும் குறிப்பிட வேண்டும். இந்தியத் தமிழர்களுக்கு ஓட்டுரிமை யளித்தால் அவர்களும் யாழ்ப்பாணத் தமிழர்களும் ஒரு ஐக்கிய முன்னணியில் சேர்ந்து அரசியல் அதிகாரத்தைச் சிங்களவர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டு விடுவார்களாம். இதற்காகத் தற்போதைய பிரஜாவுரிமைச் சட்டத்தை ரத்து செய்து விட்டு இன்னும் கடுமையான புதிய சட்டத்தை இயற்ற வேண்டுமென்று பிரதம மந்திரியிடம் கண்டியத் தலைவர்கள் கோரியதாயும் ஆனால் அவர்களுடைய அநீதியான போக்கைப் பிரதமர் ஆதரிக்கத் தயாராயில்லை யென்றும் தெரிய வருகிறது.

தீவிர சிங்களவாதிகள் இலங்கையைத் தங்களுடைய பாட்டன் வீட்டுச் சொத்துமாதிரி நினைத்துப் பேசும்பொழுது தமிழ் மக்கள் கவலை யடைவதில் நியாயமில்லாமலென்ன! இந்தியர்களை நாடு கடத்த நினைப்பதும் பிரஜா வுரிமை மறுப்பதும் தமிழர்களை ஒடுக்கும் முயற்சி யென்றும் ஒரு இந்தியர் கூட இலங்கையிலிருந்து நாடு கடத்தப் படுவதைத் தாங்கள் ஆதரிக்க முடியாதென்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். அவ்வறிக்கையில் இலங்கையிலிருக்கும் இந்தியர்களை இந்தியாவுக்குத் திரும்பி வருமாறு அழைக்க இந்திய அரசாங்கத்துக்கு உரிமை கிடையா தென்பதையும் வலியுறுத்தி யிருக்கிறார்.

புது டில்லியில் இரு தேசப் பிரதமர்களும் சந்தித்துப் பேசும் சமயத்தில் இலங்கை இந்திய காங்கிரஸும் அங்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்பி வைக்க உத்தேசித்து, இது பற்றி இம் மாதம் இருபத்தாறும் தேதி இறுதியான முடிவு செய்ய விருக்கிறது. இலங்கை இந்திய காங்கிரஸின் சம்மதத்தின் மீதே எவ்வித உடன்பாடும் செய்யப் பட வேண்டுமென்றும் காங்கிரஸைக் கேளாமல் இலங்கை இந்தியர்களின் தலைவிதியை இரு அரசாங்கங்களுமாகச் சேர்ந்து பைசல் செய்ய அவர்கள் அஃறிணைப் பொருள்களல்லவென்றும் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ தொண்டமான் இவ்வாரம் ஒரு கூட்டத்தில் வலியுறுத்தினார்.

— ரஜனி

# பொன்னியின் செல்வன்

கல்கி

## அத்தியாயம் 61

## நிச்சயதார்த்தம்

வெளியில் காலடிச் சத்தம் கேட்டதும் பூங்குழலி அச்சிறு குடிலின் வாசற் கதவை நோக்கிப் போனாள்.

அவள் தன்னை விட்டு விட்டு அடியோடு போய் விடப் போகிறாள் என்று சேந்தன் அமுதன் எண்ணிப் பெருமூச்சு விட்டான். அவள் அவ்வாசற்படி வழியாக வெளியேறும்போது தன் உயிரும் தன் உடலை விட்டு வெளியேறி விடும் என்று கருதினான்.

பூங்குழலி கதவைச் சற்றுத் திறந்து வெளியே பார்த்து விட்டு மறுபடியும் கதவை அடைத்துத் தாளிட்டதை சேந்தன் அமுதன் பார்த்தான். இது என்ன விந்தை? தாளிட்டது மட்டுமல்லாமல் திரும்பவும் தன்னை நோக்கி வருகிறாளே?

அவளுடைய உள்ளம் சிறிது இளகி விட்டதோ! இளகினால்தான் என்ன? மறுபடியும் தன்னை வீரனாக வேண்டும் என்றும், இராஜ்யத்தைப் பிடிக்க வேண்டும் என்றும், சிங்காதனம் ஏறி அரசாள வேண்டும் என்றும், — இவ்வாறு போதனை செய்து கொண்டுதானிருப்பாள். உலக ஆசைகள் என்னும் புயற் காற்றினால் அலை வீசிக் கொந்தளிக்கும் கடல் அவளுடைய உள்ளம். சிவபெருமானுடைய பக்தியில் திளைத்து அமைதியுற்றிருக்கும் இனிய புனல் வாவியை ஒத்தது தன் மனம். அதில் எழுந்த சிறிய கொந்தளிப்பு இவளால் நேர்ந்ததுதான். பூங்குழலிக்கும் தனக்கும் ஒருநாளும் ஒத்து வரப் போவதில்லை. அதைப் பற்றி வீண் மனோராஜ்யம் செய்வதில் என்ன பயன்?

பூங்குழலி அவன் அருகில் வந்ததும் அவனைத் தன் குவளை மலர்க் கண்களால் உற்றுப் பார்த்தாள். சேந்தன் அமுதனின் நெஞ்சம் தத்தளித்தது.

"கதவை ஏன் சாத்தினாய்? யார் வந்தனர்? ஒருவேளை அம்மாதானோ, என்னமோ?" என்றான் அமுதன்.

"யாரா யிருந்தாலும் சிறிது நேரம் காத்திருக்கட்டும். நம்முடைய பேச்சு முடியும் வரையில் வெளியில் இருக்கட்டும். ராஜாவும் ராணியும் அந்தரங்கமாகப் பேசிக்கொண் டிருக்கும்போது குறுக்கே வந்து யாரும் தடை செய்யக் கூடாது அல்லவா?" என்றாள்.

"ராஜா - ராணி - யார் ராஜா? யார் ராணி?" என்று தடுமாறினான் அமுதன்.

"நீ ராஜா; நான் ராணி! இத்தனை நேரம் சொன்னதெல்லாம் உன் மனத்தில் ஏறவே இல்லையா?"

"இல்லை, பூங்குழலி! எனக்கு நீ போதனை செய்வதில் சிறிதும் பயனில்லை என்றுதான் சொன்னேனே? உன் உள்ளப் போக்கும் என் உள்ளப் போக்கும் முற்றும் மாறானவை. அவை ஒத்துவர மாட்டா!" என்றான் அமுதன்.

"ஒத்து வரும்படி நாம்தான் செய்ய வேண்டும்" என்றாள் பூங்குழலி.

"அது முடியாத காரியம்!"

"உன்னால் முடியாவிட்டால், என்னால் முடியும். அமுதா! நான் தீர்மானம் செய்து விட்டேன். அரச குமாரனைக் கலியாணம் செய்து கொண்டு அரியாசனம் ஏறும் எண்ணத்தை விட்டு விட்டேன். அரண்மனை வாழ்வையும் அரச போகத்தையும் காட்டிலும் உன்னுடைய அன்பு கோடி மடங்கு எனக்குப் பெரிது. நீ என் வழிக்கு வர மறுப்பதால், நான்

உன்னுடைய வழிக்கு வருவேன். உன்னையே நான் மணந்து கொள்வேன் ..."

சேந்தன் அமுதன் பரவச நிலையை அடைந்தான். "பூங்குழலி! பூங்குழலி! எனக்கு இப்போது சுரம் அடிக்கவில்லையே? நான் கனவு காணவில்லையே? இப்போது நீ சொன்ன வார்த்தைகள் என் காதில் தவறாக விழவில்லையே? நான் தவறாகப் பொருள் கொள்ளவில்லையே?" என்றான்.

"இன்னொரு தடவை சொல்கிறேன். கேள்! நீ என் வழிக்கு வர மறுப்பதால் நான் உன்னுடைய வழிக்கு வரத் தீர்மானித்து விட்டேன். உன்னையே நான் மணந்து கொள்வேன். என் பெரிய அத்தையின் வாழ்க்கையைப் பற்றி நான் அறிந்து கொண்டிருந்த விவரங்கள் என் உள்ளத்தில் வீண் ஆசைகளை உண்டாக்கியிருந்தன. நியாயமாக அவள் சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டியவள் என்று அடிக்கடி எண்ணி, நானும் ஏன் சிங்காதனம் ஏறக்கூடாது என்ற ஆத்திரத்தை எனக்கும் உண்டாக்கி விட்டது. என் அத்தை கொலைகாரனுடைய வேலினால் மரணமடைந்த போது, என்னுடைய ஆசையும் மடிந்து விட்டது. அரண்மனையில் வாழ்கிறவர்கள் படும் அவதிகளையும் வேதனைகளையும் அறிந்து கொண்டேன். அலைகடலில் படகுஓட்டிக் கொண்டு ஆனந்தமாகக் கழிக்கும் வாழ்க்கைக்கு அரண்மனை வாழ்வு ஒருநாளும் இணையாகாது என்று அறிந்தேன். அமுதா! உனக்கு உடம்பு சரியானதும் இருவரும் கோடிக்கரை செல்வோம். அங்கே காட்டுக்கு நடுவில் உன்ன



கோயிலில் குழகர் தன்னந் தனியாகத் துணை எவருமின்றி இருக்கிறார். நாம் இருவரும் கோடிக்கரைக் குழகருக்குப் புஷ்பத்திருப்பணி செய்வோம். சிலசமயம் படகில் ஏறிக் கடலில் செல்வோம். ஈழ நாட்டின் ஓரத்தில் இனிய தீவுகள் எத்தனையோ இருக்கின்றன. அந்தத் தீவுகளில் ஒன்றில் சில சமயம் இறங்குவோம். அங்கே நீ ராஜாவாகவும் நான் ராணியாகவும் இருப்போம். அந்த ராஜ்யத்துக்கு யாரும் போட்டிக்கு வர மாட்டார்கள். அமுதா! இதற்கெல்லாம் உனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே?"

"ஒரே ஆட்சேபந்தான், பூங்குழலி! இவ்வளவு பெரிய பாக்கியத்துக்கு நான் அருகதை உள்ளவனா என்னும் ஆட்சேபந்தான். இதையெல்லாம் நீ உண்மையாகத்தானே சொல்லுகிறாய்? பிறகு பெரிய ஏமாற்றத்துக்கு என்னை உள்ளாக்குவதற்காகச் சொல்லவில்லையே? இல்லை, இல்லை! நீ உண்மையாகத்தான் சொல்கிறாய். எப்போது கோடிக்கரைக்குப் புறப்படலாம்?"

"உனக்கு உடம்பு நேரான உடனே புறப்படலாம்."

"எனக்கு உடம்பு நேராகி விட்டது, பூங்குழலி! நான் வேணுமானால் இப்போது எழுந்து நடக்கிறேன், பார்க்கிறாயா?" என்று கூறி விட்டுச் சேந்தன் அமுதன் எழுந்திருக்க முயன்றான்.

பூங்குழலி அவன் கையைப் பிடித்து எழுந்திருக்காமல் தடுத்து, "வேண்டாம்; இன்று ஒரு நாள் மட்டும் பொறுத்துக் கொள்!" என்றாள்.

'வாசற் கதவை யாரோ இலேசாகத் தட்டும் சத்தம் கேட்டது.

"அம்மா கதவைத் தட்டுகிறாள். திறந்து விடு! அம்மாவிடம் இந்தச் சந்தோஷ சமாசாரத்தைச் சொல்வோம்" என்றான் அமுதன்.

பூங்குழலி போய்க் கதவைத் திறந்தாள். வாசலில் கண்ட காட்சி அவளைச் சிறிது வியப்புறச் செய்தது.

அவள் எதிர்பார்த்தபடி கதவைத் தட்டியவள் வாணி அம்மை அல்ல.

அரண்மனைச் சேவகன் ஒருவன் கதவைத் தட்டியிருக்க வேண்டுமென்று தோன்றியது. கதவு திறந்ததும் சேவகன் ஒதுங்கி நின்றான்.

அப்பால், செம்பியன் மாதேவியும் இளவரசர் மதுராந்தகரும் நின்றார்கள்.

இன்னும் சிறிது தூரத்துக்கு அப்பால், பல்லக்குகள் இரண்டு இறக்கி வைக்கப்பட்டிருந்தன. சிவிகை தூக்கிகளும் காவலர்களும் மரத்தடியில் நின்றார்கள். அவர்களில் ஒருவன் பிடித்துக் கொண்டிருந்த தீவர்த்தி வெளிச்சத்தில் இவ்வளவு காட்சியையும் கண்ட பூங்குழலி செம்பியன் மாதேவியின் முன்னால்



தலை வணங்கிக் கும்பிட்டு, "தாயே! வர வேண்டும்!" என்றாள்.

"உன் அத்தை மகனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது, பூங்குழலி! வாணி அம்மை எங்கே?" என்று கேட்டுக் கொண்டே மழவரையன் மகளாகிய முதிய எம்பெருமாட்டி அந்தக் குடிசைக்குள்ளே பிரவேசித்தாள்.

மதுராந்தகன் வெளியிலேயே நின்றான். ஆனால் அவனுடைய குரோதம் ததும்பிய கண்கள் ஆர்வத்துடன் குடிசைக்கு உள்ளே நோக்கின.

வருகிறவர் சிவபக்த சிரோமணியும் தங்களுக்கு மானியம் அளித்துக் காப்பாற்றி வருகிறவளுமான செம்பியன் மாதேவி என்று அறிந்ததும் சேந்தன் அமுதனும் எழுந்தான்.

"தாயே! நல்ல சமயத்தில் வந்தீர்கள். முதன் முதல் சந்தோஷமான செய்தியைத் தங்களிடம் தெரிவித்து ஆசி பெறும் பாக்கியம் எங்களுக்குக் கிட்டியிருக்கிறது. சிவபெருமானுடைய திருவருளாலேயே இது நடந்திருக்க வேண்டும். இன்னும் என் அன்னையிடம்கூடச் சொல்லவில்லை. அன்னையே! இத்தனை காலங் கழித்துப் பூங்குழலி மனமிரங்கி என்னை மணம் புரிந்து கொள்ள இசைந்திருக்கிறாள். தாங்கள் தான் கூட இருந்து எங்கள் திருமணத்தை நடத்தி வைக்க வேண்டும். நாங்கள் திருமணம் செய்து கொண்ட பிறகு கோடிக்கரைக் குழகர் கோயிலுக்குப் போய் அங்கே பூ மாலைக் கைங்கரியம் செய்ய எண்ணியிருக்கிறோம்!" என்றான்.

செம்பியன் மாதேவியின் முகத்தோற்றம் இச் செய்தியினால் அந்த மாதரசி மகிழ்ச்சி அடைந்தாளா, கலக்கமடைந்தாளா என்பதைத் தெரிந்து கொள்ள முடியாமலிருந்தது. அவருடைய இதழ்களில் மகிழ்ச்சிப் புன்னகை தோன்றியது. ஆனால் கண்களிலோ கண்ணீர் ததும்பி நின்றது.

அமுதனும் பூங்குழலியும் அவர் முன்னால் வணங்கிய போது, மாதரசி தழு தழுத்த குரலில், "குழந்தைகளே! இறைவன் அருளால் உங்கள் இல்வாழ்க்கை இன்ப மயமாக இருக்கட்டும்!" என்று ஆசி கூறினார்.

அந்தச் சமயம் வாணி அம்மை அங்கு வந்து சேர்ந்தாள். அவளிடம் செம்பியன் மாதேவி சமிக்ஞையினால் அமுதனுடைய உடம்பைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்ததாகக் கூறினார். வந்த இடத்தில் அவர்களுக்குத் திருமணம் நடக்கப் போகிற செய்தியை அறிந்து மகிழ்ச்சி அடைந்ததாகவும் தெரிவித்தார்.

அச் சமயம் வாணி அம்மையின் முக பாவமும் கலக்கத்தையும் களிப்பையும் ஒருங்கே காட்டுவதா யிருந்தது.

மேலும் சிறிது நேரம் சேந்தன் அமுதனுடனும் பூங்குழலியுடனும் பேசிக் கொண்டிருந்த பிறகு செம்பியன்மாதேவி வெளிக் கிளம்பினார்.

அவரும் மதுராந்தகனும் பல்லக்குகள் இரண்டும் இறக்கி வைத்திருந்த இடம் நோக்கிச் சென்றார்கள்.

வழியில் ஒரு மரத்தடியில் முதிய பிராட்டியார் நின்று, சுற்றும் முற்றும் பார்த்தார். அருகில் ஒருவரும் இல்லை என்பதைக் கண்ட பிறகு, மதுராந்தகனை நோக்கி, "பார்த்தாயா, மதுராந்தகா! என் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த மகன் அதோ அக் குடிசையில் வாழும் சேந்தன் அமுதன். அவனுக்கு ஐந்து வயதானபோதே எனக்கு இச் செய்தி தெரிந்து விட்டது. அவன் எட்டு நாள் குழந்தையா யிருந்தபோது மூச்சுப் பேச்சற்றுக் கிடந்ததைப் பார்த்து இறந்து விட்டதாக எண்ணினேன். பிள்ளைப் பாசத்தினால் உன்னை என் குழந்தையாக ஏற்றுக் கொண்டு இவனைக் கொண்டு போய்ப் புதைத்து விடச் சொன்னேன். இவனை எடுத்துப் போன வாணி வெகு காலம் திரும்பி வரவே இல்லை. ஐந்து ஆண்டு கழிந்த பிறகு இவனையும் இப் பிள்ளையையும் பார்த்ததும் உண்மை தெரிந்து கொண்டேன். ஆயினும், உன்னை நான் கைவிடவில்லை. அவன் என் வயிற்றில் பிறந்த மகன் என்பதற்காக அவனை அரண்மனைக்கு வரவழைத்துக் கொள்ளவுமில்லை. எல்லாம் இறைவன் திருவிளையாடல் என்று எண்ணி உன்னை என் வயிற்றில் பிறந்த மகனைக் காட்டிலும் பதின் மடங்கு அருமையாக வளர்த்து வந்தேன். அதற்காக வெல்லாம் எனக்கு இப்போது இந்த வரத்தை நீ கொடு! சோழ சிங்காதனம் வேண்டாம் என்று சொல்லி விடு! நீ சிங்காதனம் ஏறுவதற்குக் கூட நான் ஆட்சேபிக்க மாட்டேன். ஆனால் உன் வம்சத்தில் பிறக்கும் பிள்ளைகள் ஊமைகளாக இருந்து விட்டால் என்ன செய்கிறது என்றுதான் அஞ்சுகிறேன்!" என்றார்.

இவ்விதம் செம்பியன் மாதேவி கூறி வந்தபோது மதுராந்தகனுடைய முகம் பேயடித்த முகமாகக் காணப்பட்டது.

அவன் மணம் செய்து கொண்டிருந்த சின்னப் பழுவேட்டரையரின் மகளுக்கு ஒரு பெண் மகவு பிறந்திருந்தது. அதற்கு இரண்டு பிராயம் ஆகியும் இன்னும் பேசத் தொடங்கவில்லை என்பது அவனுடைய நினைவுக்கு வந்தது.

பிரமை பிடித்து மரத்தோடு மரமாக நின்ற மதுராந்தகனைப் பார்த்து அவனை வளர்த்த அன்னையாகிய மாதரசி, "குழந்தாய்! ஏன் இப்படியே நின்று விட்டாய்? வா, போகலாம்! அரண்மனைக்குப் போய் நன்றாக யோசித்து நாளைக்குப் பதில் சொல்லு!" என்றாள்.

மதுராந்தகன் தட்டுத் தடுமாறி, "தாயே! யோசிப்பதற்கு இனி என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை. தாங்கள் போங்கள்! என்னுடைய இடத்தில் அரண்மனையில் வளர்ந்திருக்க வேண்டிய தங்கள் குமாரனிடம் சிறிது பேசிவிட்டுப் பிறகு வருகிறேன்!" என்றான்.

"அப்படியே செய்! வரும்போது பல்லக்கின் திரைகளை நன்றாக மூடிக் கொண்டு வா! கொடும்பாளூர் வீரர்கள் உன்னைப் பார்த்து விட்டால் ஏதேனும் கூச்சல் போட்டாலும் போடுவார்கள்!" என்று சொல்லி விட்டு அம்மாதரசி மேலே பல்லக்கை நோக்கி நடந்தார்.

மதுராந்தகனுடைய முகம் முன்னை விடக் குரோதமும் மாற்சரியமும் நிறைந்த பயங்கர மாறுதலை அடைந்ததை அப்பெருமாட்டி கவனியாமலே அங்கிருந்து சென்று விட்டார்.

## அத்தியாயம் 62

# சட்டி பாய்ந்தது!

சற்று நேரம் நின்ற இடத்திலேயே நின்றான் மதுராந்தகன். குடிசைக்குப் போகலாமா, கோட்டைக்குப் போகலாமா என்று அவன் உள்ளத்தில் சிவிகை

அடுத்த கணம் மதுராந்தகன் சிவிகையிலிருந்து எடுத்து வந்த கூரிய குத்து வாளை ஓங்கினான்.

கிறாய்? உனக்கு என்ன தெரியும்? எப்படித் தெரியும்? விரைவிலே சொல்லு! இல்லாவிடில்......" என்று கையிலிருந்த குத்து வாளை ஓங்கினான்.

"ஐயா! வாளை ஓங்க வேண்டாம். தங்கள் பகைவர்கள் எதிர்ப்படும்போது உபயோகிப்பதற்குத் தீட்டி வைத்துக் கொள்ளுங்கள். சற்று முன் தாங்களும் தங்களை வளர்த்த பெரிய மகாராணியும் இந்த மரத்தடியில் நின்று பேசிக் கொண்டிருந்தீர்கள். நான் மரத்தின் பின்னால் நின்றதை நீங்கள் இருவரும் கவனிக்கவில்லை......"

"ஆகா! ஒட்டுக் கேட்டு இரகசியத்தை அறிந்து கொண்டாயா? அந்தத் துணிச்சலுடனே தான் என்னை வழி மறித்து நிறுத்தினாயா?"

"இல்லை, இல்லை! மகாராணி தங்களிடம் சொன்ன செய்தி எனக்கு முன்னமே தெரியும். அதைவிட அதிகமாகவும் தெரியும். அந்த மாதரசி தங்களை வயிற்றில் வைத்து வளர்த்த அன்னை அல்லவென்றும், கண்டராதித்தர் தங்கள் தந்தை அல்லவென்றும் அவர் தங்களிடம் கூறினார். தங்களுடைய அன்னை யார் என்றும் சொல்லி இருப்பார். ஆனால், தங்கள் தந்தை யார் என்று சொல்லியிருக்க மாட்டார்."

மதுராந்தகன் அவனை வெறித்து நோக்கி, "உனக்கு அது தெரியுமா?" என்று கேட்டான்.

"ஆம், தெரியும்."

மதுராந்தகன் அந்தப் பைத்தியக்காரத் தோற்றமுடையவன்தான் அவன் தந்தை என்று உரிமை கொண்டாடப் போகிறானோ என்று பீதி அடைந்தான். அருவருப்பும் ஆத்திரமும் நிறைந்த குரலில் "உனக்கு எப்படித் தெரியும்? நீ யார்?" என்று கேட்டான்.

"நான் தங்கள் தந்தையின் ஊழியன்!" என்று கருத்திருமன் கூறியதும், மதுராந்தகன் முகம் தெளிவு பெற்றது.

கருத்திருமன் சற்று அருகில் நகர்ந்து வந்து "ஐயா! தங்கள் தந்தை........." என்று மெல்லிய குரலில் கூறினான்.

மதுராந்தகன் காதில் அவன் கூறியது விழுந்தது. மதுராந்தகனுடைய தலை சுற்றியது. கீழே விழப் பார்த்தவன் சமாளித்துக் கொண்டு, கருத்திருமனுடைய புஜங்களை உறுதியாகப் பற்றிக் கொண்டு, "நீ கூறியது உண்மைதானா? உண்மையாகவே நான் இராஜகுமாரன் தானா?" என்று கேட்டான்.

"ஆம், ஐயா! இதைத் தங்களிடம் சொல்வதற்காகவே பல வருஷங்களுக்கு முன்பு நான் இங்கு வந்தேன். தங்களை அந்தரங்கமாகப் பார்த்துப்பேசுவதற்குச் சமயம் நோக்கிக் கொண்டிருந்தேன். துரதிர்ஷ்டவசமாகச் சின்னப் பழுவேட்டரையர் என்னை அரண்மனைத் தோட்டத்தில் பார்த்து விட்டார். பிடித்துப் பாதாளச் சிறையில் போட்டு விட்டார்."

"எப்போது தப்பினாய்? எப்படி?"

"இன்றைக்குத்தான் வந்தியத்தேவன் என்னும் வாலிபன் ஒருவனுடைய உதவியினால் தப்பித்து வெளிவந்தேன்..."

"ஆகா! நானும் கேள்விப்பட்டேன். கரிகாலரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டவன் அல்லவா அவன்?"

"ஆம்; ஐயா! ஆனால் உண்மையில் ஆதித்த கரிகாலரைக் கொன்றவன் அந்த வாலிபன் அல்ல!"

"அதைப் பற்றி நமக்கு என்ன கவலை? கொன்றவனாகவே தான் இருக்கட்டுமே? இப்போது எங்கே அவன்?"

"அதோ சற்றுத் தூரத்தில் தெரியும் வேலியின் மறைவில் இருக்கிறான். எனக்கும் அவனுக்கும் இரண்டு குதிரைகளுடன் காத்திருக்கிறான். நான் நேரம் செய்வது பற்றி அவன் இப்போது கோபம் அடைந்திருப்பான். அதைப் பற்றி நான் சிறிதும் கவலைப்படவில்லை. எதிர்பாராத விதத்தில் தங்களைச் சந்தித்து விட்டேன்."

"எப்போது நீங்கள் இங்கே வந்தீர்கள்?" என்றான் மதுராந்தகன்.

"சற்று முன்னாலேதான் வந்தோம். இந்தக் குடிசைக்கு அருகில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன என்று தெரிந்து கொண்டு வந்தோம். குதிரைகளைத் தேடிக் கொண்டிருந்த போது தாங்களும் தங்களை வளர்த்த அன்னையும் தீவர்த்திகளுடன் சாலையில் வந்தீர்கள். அந்த வெளிச்சத்தில் குதிரைகளைக் கண்டு பிடித்தோம். நான் பல வருஷங்களுக்குப் பிறகு வாணியைப் பார்த்தேன். அவளுடன் ஊமைப் பாஷையில் பேசிக் கொண்டிருக்கும் போதே நீங்கள் இந்தக் குடிசைப் பக்கம் திரும்பி வந்தீர்கள். நீங்கள் இந்தக் குடிசைக்குத்தான் வருகிறீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. வந்தியத்தேவன் வேலி மறைவுக்கு ஓடி விட்டான். நானும் வாணியும் இம் மரத்தின் பின்னால் சிறிது நேரம் நின்றோம். பிறகு அவளும் குடிசைக்குள் போய்விட்டாள். நான் மட்டும் இங்கு நின்று கொண்டிருக்

தேன். அதன் பலனாகத் தங்களைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது...''

''சரி, இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''தாங்கள் எவ்விதம் சொல்லுகிறீர்களோ, அவ்விதம் செய்கிறேன், ஐயா! தங்கள் பிறப்பைக் குறித்த உண்மையை அறிந்த பிறகும் தஞ்சை அரண்மனைக்குத் திரும்பிப் போகப் போகிறீர்களா? ஒன்று ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். தாங்கள் சோழ குலத்து இளவரசர் அல்ல வென்பது இன்னும் சிலருக்கும் தெரியும். முதன் மந்திரிக்கும் அவருடைய ஒற்றன் ஆழ்வார்க்கடியான் என்பவனுக்கும் தெரியும். என்றைக்காவது ஒரு நாள்......''

''ஆமாம், ஆமாம்! தஞ்சை அரண்மனைக்குப் போக எனக்கும் விருப்பமில்லைதான். நீ என்ன யோசனை சொல்லுகிறாய்?''

''அந்த வேலி மறைவில் இரண்டு குதிரைகள் இருக்கின்றன. தாங்கள் குடிசைக்குள் போவது போல் போய் விட்டு அந்த வேலிப் பக்கம் வாருங்கள். நான் வந்தியத்தேவனுடன் சிறிது பேசிக் காலந் தாழ்த்திக் கொண்டிருக்கிறேன். தங்கள் கையிலுள்ள வாளை அவன் மீது எறிந்து கொன்று விடுங்கள். இரண்டு குதிரைகள் மீது நாம் இருவரும் ஏறிப் போய்விடுவோம். கோடிக்கரை சென்று இலங்கைக்குப் போவோம். இலங்கை அரசர், சோழகுலத்தின் பகைவர்; பாண்டிய குலத்துக்குப் பரம்பரை சிநேகிதர். நான் இலங்கை மன்னரை நன்கு அறிவேன். பாண்டிய குலத்தின் மணி மகுடமும் இரத்தின ஹாரமும் இருக்குமிடமும் அறிவேன். என்ன சொல்லுகிறீர்கள்?''

**ம**துராந்தகன் சிறிது நேரம் யோசனை செய்தான். அவனுடைய உள்ளம் அந்தச் சில விநாடி நேரத்தில் எத்தனையோ கோட்டைகள் கட்டியது.

''ஐயா! நேரம் போகிறது. தங்கள் முடிவு என்ன? வந்தியத்தேவன் இனி இங்கேயே வந்து விடுவான்.''

''அவனைக் கொல்ல வேண்டும் என்றா சொல்லுகிறாய்?''

''தங்களுக்குத் தயக்கமாயிருந்தால் தங்கள் கையிலுள்ள குத்து வாளை என்னிடம் கொடுங்கள்!''

''வேண்டாம்; இந்த வாளுக்கு வேறு வேலை இருக்கிறது. வந்தியத் தேவனைப் பற்றி எனக்குத் தெரியும். அவன் நல்ல வீரன். அவனையும் நம்முடன் அழைத்துக் கொண்டு போகலாமே?''

''அழைத்துப் போகலாம்; ஆனால் இன்னொரு குதிரை?''

''குதிரைக்கு என்ன குறைவு? நான் இன்னமும் பட்டத்து இளவரசன் மதுராந்தகன்தானே!'' என்று கூறி விட்டுக் கோபச் சிரிப்புச் சிரித்தான்.

பிறகு, ''நீ போ! அவனைச் சற்று நேரம் பொறுமையாக இருக்கச் சொல்! இந்தக் குடிசைக்காரனைப் பார்த்து ஒரு வார்த்தை பேசிவிட்டு விரைவில் வந்து விடுகிறேன்!'' என்றான்.

கருத்திருமன், வந்தியத் தேவன் மறைந்து நின்ற வேலியைத் தேடிக் கொண்டு போனான். நல்ல இருட்டு. தூரத்தில் இராஜ பாட்டையில் அவ்வப்போது சிலர் தீவர்த்தி பிடித்துக்கொண்டு போனபோது சிறிது வெளிச்சம் வந்தது. வெகு தூரத்திலிருந்து வந்த அந்த மங்கலான வெளிச்சத்தில் இரண்டு கம்பீரமான புரவிகள் வேலிகளில் கட்டப்பட்டு நிற்பது தெரிந்தது. ஆனால் வந்தியத் தேவனைக் காணவில்லை. மெல்லிய குரலில் கூப்பிட்டும் பார்த்தான். பதிலுக்குக் குரல் கேட்கவில்லை.

''சரி; அவனாகத் தொலைந்து போனால் நல்லதாய்ப் போயிற்று'' என்று கருத்திருமன் எண்ணிக் கொண்டான்.

* * *

**வ**ந்தியத் தேவனும் கருத்திருமனும் முதலில் நந்தவனக் குடிசையருகில் வந்த போது அங்கே இருள் சூழ்ந்திருந்தது. குடிசைக்குள் எரிந்த சிறிய விளக்கிலிருந்து சில ஒளிக் கிரணங்கள் வெளியே எட்டிப் பார்த்தன.

தாமரைக் குளத்திற்குத் தண்ணீர் மொள்ளச் சென்ற வாணி அம்மை யாரோ இருவர் இருட்டில் வருவதைக் கண்டு தயங்கி நின்றாள். முதலில் வந்தியத் தேவனுடைய முகம் அவள் பார்வையில் தென்பட்டது. உடனே அவளுடைய முகம் மலர்ந்தது. முன்னொரு தடவை சேந்தன் அமுதன் அவனை அழைத்து வந்ததை அவள் மறந்து விடவில்லை. வரவேற்புக்கு அறிகுறியாகத் தலையை அசைத்தாள்.

பின்னால் தொடர்ந்து வந்த கருத்திருமனைக் கண்டதும் பேய் பிசாசைக் கண்டவளைப் போல் பீதிஅடைந்து செயலற்றுப் பிரமித்து நின்றாள்.

கருத்திருமன் அவளுடன் சமிக்ஞை பாஷையில் பேச முயன்று, அவளுடைய பீதியை ஒருவாறு போக்கினான்.

அவர்களிருவரையும் தனியாக விட்டு விட்டு வந்தியத்தேவன் குடிசையை அணுகினான். வாசற் கதவு அப்போது தான் தாளிடப் பட்டது. பலகணி வழியாக எட்டிப் பார்த்தான். சேந்தன் அமுதன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருப்பதற்குப் பதிலாக முக மலர்ச்சியுடன் பூங்குழலியுடன் பேசிக் கொண்டிருப்பதைப் பார்த்து அவனுக்குச் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

அவர்களுடைய பேச்சினிடையில்குறுக்கிட்டு விடைபெற்றுக் கொண்டு போக முயல்வது உசிதமா என்று யோசித்துக் கொண்டிருக்கையிலேயே, செம்பியன்மாதேவியும் மதுராந்தகனும் அவர்களுடைய பரிவாரங்களும் வந்து விட்டார்கள்.

உடனே அவன் குடிசையை விட்டு நகர்ந்து வேலியைத் தாண்டி அப்பால் குதித்தான். அங்கே கட்டியிருந்த குதிரைகளைக் கண்டதும் ஆழ்வார்க் கடியான் அந்த வரைக்கும் தன்னை ஏமாற்றி மோசம் செய்ய வில்லையென்று உறுதி பெற்றான். கருத்திருமன் வரவுக்காக அங்கேயே காத்திருந்தான்.

சிவிகைகள், பரிவாரங்கள், தீவர்த்திகள் எல்லாம் போன பிறகும் கருத்திருமன் வராதிருக்கவே, வந்தியத்தேவன் பொறுமை இழந்தான்.

மீண்டும் வேலியைத் தாண்டிக் குதித்து வந்தான். மரத்தடியில் மதுராந்தகனும் கருத்திருமனும் பேசிக் கொண்டிருப்பதைக் கவனித்தான். மதுராந்தகன் கண்ணில் பட அவன் விரும்ப வில்லை. கருத்திருமனுக்கும் மதுராந்தகனுக்கும் என்ன அந்தரங்கப் பேச்சு என்ற ஐயமும் அவன் உள்ளத்தில் உதித்தது. அவர்களுடைய பேச்சில் ஒரு பகுதி அவன் காதில் விழுந்தது.

மதுராந்தகன் குடிசையை நோக்கிப் போனபோது, அவனை யறியாமல் வந்தியத்தேவனும் பின் தொடர்ந்து போனான்.

மதுராந்தகன் குடிசை வாசலில் சென்று கதவை இடிக்கலாமா, வேண்டாமா என்று தயங்கி நின்றான். அப்போது உள்ளிருந்து கல, கல வென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. அந்தச் சிரிப்பின் ஒலியினால் மதுராந்தகனுடைய மனம் மாறிவிட்டதோ, அல்லது எண்ணி வந்த காரியத்துக்குத் துணிவு வரவில்லையோ, தெரியாது. உடனே திரும்பிக் கருத்திருமன் சென்ற திசையை நோக்கிச் செல்லத் தொடங்கினான்.

வந்தியத் தேவன் அவன் கண்ணில் படாமல் தப்புவதற்காக அப்பாலிருந்த ஒரு மரத்தின் மறைவுக்குப் பாய்ந்தான். அப்படிப் பாயும்போது அவன் கண்ணில் ஒரு விபரீதமான காட்சி தென்பட்டது. குடிசைக்குப் பின்புறச் சுவரில் ஒரு பலகணி இருந்தது. அதன் வழியாகக் குடிசையில் எரிந்த விளக்கின் ஒளி சிறிது வெளியே வந்து கொண்டிருந்தது. அந்த ஒளியில் ஒரு மனித உருவம் கையில் ஒரு குட்டையான ஈட்டியுடன் பயங்கரமாக நிற்பதைக் கண்டான்.

குடிசையின் பலகணி வழியாக அந்த உருவம் உள்ளே உற்றுப் பார்த்தது.

பின்னர், ஈட்டியைப் பலகணி வழியாக உள்ளே எறியும் நோக்குடன் குறி பார்க்கத் தொடங்கியது. ஆனால் உடனே எறிந்து விடவில்லை. குறி பார்ப்பதும் மறுபடி கீழே தழைப்பதுமாக இருந்தது.

அதே சமயத்தில் குதிரைகள் புறப்படும் காலடிச் சத்தம் கேட்டது.

வந்தியத்தேவன் ஒரு கண நேரம் தத்தளித்தான். குதிரைகள் இரண்டும் போய்விட்டால் அவன் தப்பிச் செல்வது அசாத்தியமாகி விடும்.

குதிரையைக் காப்பாற்றிக் கொள்வதற்காகப் போனால் இங்கே இந்தக் கரிய நிழல் உருவம் என்ன கொடிய காரியம் செய்ய எண்ணுகிறதோ, அதைத் தடுக்க முடியாமற் போகும்.

வந்தியத்தேவனுடைய தத்தளிப்பு ஒரு நிமிட நேரத்துக்கு மேல் நீடிக்க வில்லை.

குதிரைகள் போனால் போகட்டும்; அவன் கடமை இப்போது இங்கேதான்.

கையில் ஈட்டியுடன் நின்ற கரிய உருவத்தை நோக்கி மெள்ளச் சென்றான்.

குடிசைக்குள்ளிருந்து 'வீல்' என்று ஒரு குரல்,—பீதி நிறைந்த பெண் குரல், தெளிவாகக் கேட்டது.

வந்தியத்தேவன் ஜாக்கிரதையைவிட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான்.

ஈட்டியை உள்ளே எறிய இருந்தவன் வந்தியத்தேவன் ஓடிவரும் சத்தம் கேட்டுத் திரும்பினான்.

திரும்பிய வேகத்துடன் அவன் மீது ஈட்டியை எறிந்தான்.

ஈட்டி வந்தியத் தேவனுடைய விலாவில் பாய்ந்தது. அவன் கீழே விழுந்தான்.

அவன் என்ன ஆனான் என்றுகூடப் பாராமல் ஈட்டியை எறிந்தவன் அங்கிருந்து ஓட்டம் எடுத்தான். (தொடரும்)

# "ஆரியர் – திராவிடர் என்னும் அறிவீனம்!"

தமிழ் நாட்டில் சிலர், விஷ சக்திகளைப் பரப்பி, அதன் பயனாக அரசியலில் தங்களுக்குத் அரித காலத்தில் லாபம் தேடிக் கொள்ளும் கருத்துடன், 'தமிழ் மக்கள் ஏமாந்தவர்கள்தானே! வலைத்தில் தங்கள் வலையில் விழுந்து விடுவார்கள்' எனக் கருதி, "ஆரியரை விரட்டுங்கள்!" என்ற கூச்சலைக் கிளப்பிப் பொய்ப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவர்களின் முகமூடி கிழிந்தெறியப்பட்டு விட்டது—தங்கள் கட்டுரைகளினால்!

இவர்களுக்கு அழித்தல் வேலையில்தான் புத்தி போகுமே தவிர, ஆக்கல் வேலையில் இவர்கள் மூளை உபயோகப்பட்டதே இல்லை. தமிழ் நாட்டைப் பிடித்த சாபக்கேடு; இத் தீய கும்பலின் செயல்களைத் தாங்க வேண்டியிருக்கிறது.

"ஆரியர்களை விரட்டுகிறோம்" என்கின்றனர்! இதற்குக் காரணம், ஆரியர்கள் பற்பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கே இருந்து வந்து குடியேறினர் என்கின்றனர். சரி, இவர்கள் கூறுவதுபோல் ஆரியர்களை விரட்டி விடுவதாக வைத்துக் கொள்வோம். இவர்கள் பிராமணரைத்தான் ஆரியர் என்று கூறுகின்றனர்!

சமீபத்தில் ஸ்தல ஸ்தாபன மந்திரி ஸ்ரீ ராஜாராம் நாயுடு மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில், வேடிக்கையாகப் பின்வருமாறு கூறினர்.

"தமிழ் நாட்டில் முல்லை நில மக்கள், மருத நில மக்கள், நெய்தல் நில மக்கள், குறிஞ்சி நில மக்கள் என்ற வேறுபாட்டுடன்தான் வாழ்ந்து வந்தனர். ஆரியர்கள் வந்தனர். பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திர என்ற நான்கு வருணங்களைத் தங்களுடன் கொண்டு வந்தனர். இவர்களால் கூறப்படும் திராவிடத்தில் க்ஷத்திரியர் என்றே முன்பு கிடையாது. இதை உண்மை என்று வைத்துக்கொண்டு பார்த்தால் இன்று தாங்கள்தான் க்ஷத்திரியர்கள் என நாடார்கள் கூறிக் கொள்கின்றனர். அப்படியாயின் நாடார்களும் ஆரியர்கள்தான்!" என்று குறிப்பிட்டார்!

இந்தச் சித்தாந்தப்படி பார்த்தால் நாடார்களும் விரட்டப்பட வேண்டியவர்களே!

அடுத்தபடியாக வெளியிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தவர்கள் என்று கூறும்போது, செட்டியாரும், ரெட்டியாரும், நாயுடுவும், ராஜுக்களும் விரட்டப்பட வேண்டியவர்களே!

இன்னும் தீவிரமாகப் போகும்போது இந்தக் கும்பல்களினால், திராவிடர்கள் என்று அழைக்கப்படுபவர்களும், வடக்கே இருந்து தெற்கே வந்தவர்கள்தான்! ஆகவே இவர்களையும் தமிழ் நாட்டை விட்டே விரட்டிவிட வேண்டியதுதான்!

அப்புறம் கடைசியாக, இந்தத் தெய்வத் தமிழ் நாட்டை வன விலங்குகளும், ஊர்வன, பறப்பன முதலியவைகளும் ஆனந்தமாகக் கட்டி ஆள வேண்டியதுதான்!

சீர்திருத்தங்களை வானளாவப் பேசும் இந்தக் கூட்டத்தார், செயலில் இறங்கி ஏதாவது சீர்திருத்தம் செய்திருக்கின்றனரா என்றால் "இல்லை!" என்றுதான் கூறவேண்டியிருக்கிறது.

வரட்டும் இவர்கள் வரிந்து கட்டிக் கொண்டு! வரவேற்கிறோம்! தமிழ் நாட்டில் சாதிப் பிரிவினையைப் போக்கும் முயற்சியில் ஈடுபடட்டும்! இன்ன சாதி உயர்வு, இன்ன சாதி தாழ்வு என்பதை நீக்கப் பாடுபடட்டும். ஏற்றத் தாழ்வில்லாத சமுதாயத்தை உண்டாக்க முன் வரட்டும்!

இதையெல்லாம் விட்டுவிட்டு, வீணாகக் குட்டிக் கலகம்தான் செய்வோம் என்றால் இவர்கள் தேவை இல்லை. இவர்களைத்தான் முதலில் தமிழ் நாட்டை விட்டே விரட்ட வேண்டும்! தமிழ் மக்கள் இதைச் செய்ய ஆரம்பிப்பதற்கு முன்னரே இவர்கள் திருந்தி விடுவார்களா!

உசிலம்பட்டி.
8—12—53

கே. வி முருகன்

★

ஆரியர்—திராவிடர் என்ற இனப் பிரிவை இந்தியாவுக்குள் முதன் முதலில் புகுத்தியவர் வெள்ளைக்கார ஆராய்ச்சியாளரே என்று தாங்கள் கூறியிருப்பது மிகவும் சரியே.

1857 ம் ஆண்டில் நடந்த சிப்பாய்க் கலகத்தில் இஸ்லாமியரும் இந்துக்களும் தோளோடு தோள் நின்று வெள்ளையரை எதிர்த்துப் போராடிய பின்னர், ஆங்கிலேய இராஜ தந்திரிகள் இஸ்லாமியரை இந்துக்களிடமிருந்து வேறு படுத்திப் பிரித்து வைக்க முயன்றதும் அதில் வெற்றி அடைந்ததும் சரித்திரம் கூறும் உண்மை. நிற்க.

இந்து மதம் தமிழுடனும், தமிழ் இந்து மதத்துடனும் ஆதி காலத்திலேயே, சரித்திராசிரியர் கண்ணுக்கு எட்டாத காலத்திலேயே, இரண்டறக் கலந்து விட்டதைத் தாங்கள் மிகவும் அழகாக எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். சிந்துநதிப் பள்



னத்தாக்கில் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்னரே, ஆரியர் வருகைக்கு முன்னரே கூட மொகஞ் ஜோதரோவில் சிவ வழிபாடு விளங்கிற்று என்பது சில ஆராய்ச்சியாளரின் கொள்கை. இது உண்மையாயின், சைவ சமயமும் இந்து மதமும் ஆரியர் சிருட்டித்தவை என்று திராவிடக் கட்சியினர் கூறுவது எவ்வளவு பொருத்தமற்றதாகும்! தமிழராகிய நாம் எப்போதுமே கடவுள் பக்தி கொண்டவர்கள். பகுத்தறிவு உடையவர், பெருந் தன்மையுடையவர் இதை மறந்துவிட வேண்டாம்! புத்த மதம் வட இந்தியாவில் தோன்றியது. தமிழ் நாட்டில் தோன்றிய மணிமேகலை என்னும் அற்புத காவியம் புத்த மதத்தை, ஓர் வடநாட்டு மதத்தைத் தழுவி நிற்பதால் மணிமேகலையைத் தீயில் இடவேண்டுமா! தமிழ் இலக்கியத்தில் பெரும்பகுதி மதப்பற்றுக் கொண்டவை. ஆகையால் அப்பெரும் பகுதியை அழித்துவிட வேண்டுமா! தொல்காப்பியரும் பாரதியாரும் தமிழர் அல்லர் என்று கூறிக்கொண்டு அவர்கள் நமக்கு ஈந்த சிறந்த இலக்கியச் செல்வத்தை அழித்துவிட வேண்டுமா! திராவிடக் கட்சியினர் காட்டும் பாதையை நாம் பின்பற்றிக்கொண்டு போனால் தமிழ் நாகரிகத்தில் எஞ்சி நிற்பது ஒன்று மல்லாமல் முழுவதையுமே அழித்துவிடுவோம். இதற்குத் தமிழ்ப் பெரு மக்கள் சம்மதமா! தமிழ் நாட்டுச் சிற்பிகளின் திறமை, சித்திரம் வரைந்தவரின் திறமை பெரும்பாலும் இந்து ஆலயங்களிலேயே காணலாம். ஆலயங்களை அழிப்போமாயின் சிற்பத்தையும் சித்திரத்தையும் அழித்தவர் ஆவோம். நாம் பாடும் கீர்த்தனங்களும் பிடிக்கும் அபிநயங்களும் பெரும்பாலும் மதத்தோடு, அதுவும் இந்து மதத்தோடு சம்பந்தப்பட்டவை ஆகும். இந்து மதம் நமக்குப் புறம்பானதானால், நமது சங்கீதமும் நாட்டியமும் கூட நமக்குப் புறம்பானதாகும். இது நிற்க.

இந்தியாவுக்கு இடைக் காலத்தில் வந்த இராஜபுத்திரர் ஆரியரும் அல்லர் திராவிடரும் அல்லர், மங்கோலிய வகுப்பைச் சேர்ந்த ஹூணர் என்பவர் என்று வெள்ளைக்காரர் எழுதிய சரித்திர நூல்கள் கூறுகின்றன. இது போலவே ஆங்கிலேயர்கள் எழுதிய ஒவ்வொரு சரித்திர நூலும் நமக்குள் பிரிவினையை உண்டுபண்ணி யிருக்கின்றன.

கொழும்பு
7—12—53

கே. சிவபாலன்


★

"ஆரியர்-திராவிடர் என்னும் அறிவீனம்" "யார்யாரை விரட்டுவது!" என்ற இரு தலைப்பைத் தாங்கித் தாங்கள் எழுதி இருக்கும் சரித்திரச் சான்று நுணுக்கங்களைக் கண்ணுற்றேன். என்றும் இந் நாட்டு மக்கள் பொன்னேட்டில் பொறிக்க வேண்டியவை. தங்கள் சான்றுகள் குருடனுக்கு ஊன்றுகோலாகவும், செவிடனுக்கு உரத்த குரலாகவும், ஊமைக்குக் கை ஜாடையாகவும் விளங்குகின்றன. ஆனால், மரத்த உடலுக்கும், மழுங்கிய அறிவுக்கும் உணர்ச்சி யூட்டும் வகையில் தீட்டி விட்டீர். மக்களை ஒன்றாகக் கூட்டி விட்டீர். உண்மை எதுவென்றும் காட்டி விட்டீர். பண்புடைய மக்கள்—யாவரும் பல்லாயிர ஆண்டுகளானாலும் மத பேதம், இன பேதம் இல்லாது வாழ வழி வகுத்து விட்டீர்கள்.

காரைக்கால்
9—12—53


எஸ். கனகசபாபதி

## எந்த வலை நல்ல வலை?




முன்னொரு சமயம் பாகிஸ்தான் ருஷியாவுடன் இராணுவ உறவு கொள்வதற்குப் பிரயத்தனம் செய்தது. இப்போது அமெரிக்கா விரிக்கும் இராணுவ 'உதவி' வலையில் விழப் பார்க்கிறது!


PRECISION
"Plus"
நேரத்தைச் சரியாக அறிவிப்பதற்கு கடிகாரமே உகந்த கருவி. ஒரு நாளோ, வாரமோ இன்றி வருஷக் கணக்கில் பிசகின்றி நேரத்தை அறிவிப்பதே அதன் சிறந்த பணி.
வெஸ்ட் என்டு கைக்கடிகாரங்களின் முக்கிய அம்சம் சரியான மணியைக்காட்டுவதுதான். அவை தயாரிக்கப்படும் போது ஒவ்வொரு கட்டத்திலும் திறமையான அநுபவமிருந்த மேற்பார்வையாளர்களின் கீழ், தயாரிக்கப்படுவதால் அவைகள் நாடு முழுவதும் நல்ல சிறந்த பொருளாக மதிக்கப்படுகிறது. நீடித்த உழைப்பு, சரியாக நேரம் காட்டுவது, கவர்ச்சிகரமான டிசைன்கள் எல்லாம் சேர்ந்து "வெஸ்ட் என்டு" கடிகாரங்களை நாம் கொடுக்கும் பணத்திற்கு மிகச் சிறந்த பொருளாக விளங்கச் செய்கிறது.
8¾" SECUNDUS MODERN CENTRE-SECOND (Top)
Rolled Gold, with Steel Back ... Rs. 162
10½" SECUNDUS MODERN CENTRE-SECOND (Bottom)
Nickel Silver, with Steel Back ... Rs. 112
Rolled Gold, 20 Micron Quality Rs. 155
The WEST END WATCH Co.
BOMBAY . . . CALCUTTA



# ராஜாஜி ஜயந்தி

சென்னை தேசிய வாலிபர் காங்கிரஸ் முத்தியாலுப்பேட்டை யுவர் காங்கிரஸ் ஆகிய இரு ஸ்தாபனங்களும் டிசம்பர் மீ 10உ ராஜாஜி பிறந்த தின விழாவை மிக விமரிசையாகக் கொண்டாடினார்கள். இந்த முயற்சி ராஜாஜிக்கு முன்னால் தெரிந்தால் அவர் தடை செய்து விடக் கூடும் என்று எண்ணி, ராஜாஜி புது டில்லிக்குப் பிரயாணப்படும் வரையில் விழா ஏற்பாடுகளை இரகசியமாகச் 'சதியாலோசனை' செய்வதுபோலச் செய்துவந்தார்கள். 10உ காலை லிங்கச் செட்டித் தெரு, தம்புச் செட்டித் தெருக்களின் வழியாக ராஜாஜியின் படத்தை விமானத்தில் வைத்து அலங்கரித்து நாதஸ்வர முழக்கத்துடன் ஊர்வலம் நடத்தினார்கள். ஸ்ரீ கச்சாலீசுவரர் ஆலயத்துக்கு முன்னால் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம் செய்தார்கள். மாலையில் ஸெயின்ட் மேரீஸ் மண்டபத்தில் ராஜாஜியின் 75வது பிறந்த தினத்தில் அவருக்கு வாழ்த்துக் கூறுவதற்குப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. மண்டபம் இடம் கொள்ளாமல் நிறைந்திருந்ததுடன் வெளியிலும் ஜனங்கள் ஏராளமாகக் கூடியிருந்து ஒலி பெருக்கி மூலம் நடவடிக்கைகளைக் கேட்டனர். சபாநாயகர் கனம் ஜே. சிவசண்முகம் பிள்ளை கூட்டத்துக்குத் தலைமை வகித்துச் சிறப்பாக நடத்தி வைத்தார். ஸ்ரீ எம். பக்தவத்சலம், ஸ்ரீ லால்சந்த் தாதா, டாக்டர் கிருஷ்ணா ராவ், ஸ்ரீ சிவஞான கிராமணியார், ஸ்ரீ டி. செங்கல்வராயன், ஸ்ரீமதி அனந்தநாயகி, ஸ்ரீ கே. வெங்கடசாமி நாயுடு, "கல்கி" ஆசிரியர், ஸ்ரீ சின்ன அண்ணாமலை ஆகியோர் ராஜாஜியின் குண நலன்களைப் பற்றியும், தமிழ் நாட்டுக்கு இச்சமயம் அவருடைய சேவை எவ்வளவு அவசியம் என்பது பற்றியும் பேசினார்கள். பிரபல நகை வியாபாரியான ஸ்ரீ கோவிந்த ராஜுலு நாயுடு அவர்கள் அன்று விழாவில் கலந்து கொண்டவர்களுக் கெல்லாம் சரிகை மாலை அணிந்து சபையோரைக் களிப்புக் கடலில் ஆழ்த்தியதுடன், வேலை யிழந்து கஷ்டப்படும் கைத்தறியாளரின் உதவிக்கு ரூ 101/- நன்கொடை அளித்து, ராஜாஜியிடம் சேர்ப்பிக்கும்படி கேட்டுக் கொண்டார். ஸ்ரீ எம் எல். வஸந்தகுமாரி, (ஸ்ரீ எஸ். கோபாலகிருஷ்ணன் வயலின், ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி ராவ் மிருதங்கம், ஸ்ரீ வில்வாத்ரி ஐயர் கடம் ஆகிய) பக்க வாத்தியங்களுடன் இன்னிசைக் கச்சேரி நடத்திய பிறகு, ராஜாஜி ஜயந்தி விழா குதூகலமாக முடிவுற்றது.

1. கூட்டத் தலைவர் ஸ்ரீ ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்களுக்கு ஸ்ரீ கோவிந்தராஜுலு நாயுடு சரிகை மாலை அணிந்து மகிழ்கிறார். 2. வயோதிகர்கள், குழந்தைகள், பெண்கள் அடங்கிய ஏழை எளியவர்கள் பலருக்கு அன்னம் அளிக்கப்பட்டது. இரு வாலிபர் காங்கிரஸ் நிர்வாகிகளும் அன்புடன் பரிமாறும் தொண்டு செய்தார்கள். 3. ராஜாஜியின் உருவப் படத்தை அலங்கரித்த விமானத்தில் வைத்து ஊர்வலம் நடத்தப் பட்டது. 4. ஸெயின்ட் மேரீஸ் மண்டபத்தில் அறிஞர்களின் கூட்டம் நிறைந்து ததும்பியது. 5. பிரசங்க மேடை: ஸ்ரீ லால்சந்த் தாதா பேசுகிறார்.



3



4



5

# தமிழ் இசைச் சங்கம், சென்னை

## பதினொன்றாவது தமிழ் இசை விழா 1953-54

## சென்னை அண்ணாமலை மன்றத்தில்

**25-12-53 முதல் 3-1-54 முடிய**

*திறப்பாளர்:* **கனம் சி. சுப்பிரமணியம் அவர்கள்**
*சென்னை அரசாங்க நிதி, கல்வி அமைச்சர்*

*தலைவர்:* **திரு. பி. எஸ். குமாரசாமி ராஜா அவர்கள்**
*சென்னை அரசாங்க முன்னாள் முதல் அமைச்சர்*

★

| | மாலை 5-30 மணி | இரவு 9-30—11 மணி வரை |
|---|---|---|
| 25-12-53 வெள்ளி | தண்டபாணி தேசிகர் - பாட்டு | |
| 26-12-53 சனி | சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை - பாட்டு | கக்காயி நடராஜ சுந்தரம் - நாகஸ்வரம் |
| 27-12-53 ஞாயிறு | தியாகராஜ பாகவதர் - பாட்டு | வீருசாமி பிள்ளை - நாகஸ்வரம் |
| 28-12-53 திங்கள் | குமாரி கமலா - பரதநாட்டியம் | |
| 29-12-53 செவ்வாய் | வசந்தகுமாரி - பாட்டு | சிலோன் ரஞ்சனா தேவி - பரதநாட்டியம் |
| 30-12-53 புதன் | செம்மங்குடி சீனிவாசய்யர் - பாட்டு | |
| 31-12-53 வியாழன் | எம். எஸ். சுப்புலக்ஷ்மி - பாட்டு | திருவெண்காடு சுப்பிரமணியம் - நாகஸ்வரம் |
| 1-1-54 வெள்ளி | மதுரை மணி ஐயர் - பாட்டு | குளிக்கரை பிச்சையப்பா - நாகஸ்வரம் |
| 2-1-54 சனி | வைஜயந்திமாலா - பரதநாட்டியம் | டி. என். ராஜரத்தினம் - நாகஸ்வரம் |
| 3-1-54 ஞாயிறு | தமிழ்ச் செல்வம் - நாடகம்<br>டி. கே. எஸ். சகோதரர்கள் | |

**(நிகழ்ச்சிகள் மாற்றத்திற்குரியன)**

*சீசன் டிக்கெட்டுகள்:*

**ரிசர்வ்டு ரூ. 25/- முதல் வகுப்பு ரூ. 15/- இரண்டாம் வகுப்பு ரூ. 10/-**

*சீசன் டிக்கெட்டுகள் அண்ணாமலை மன்றத்தில் கிடைக்கும் :: போன்: 55465*

இரவு கச்சேரி முடிந்ததும் போக்குவரத்திற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது

# கடவுளர் தரிசனம்

பகீரதன்

சென்ற ஆறாம் தேதி ஞாயிற்றுக்கிழமையன்று விழுப்புரம் போயிருந்தேன். அங்கே ஓர் அபூர்வமான காட்சியைக் கண்டேன்.

நூற்றுக் கணக்கான கடவுளர்கள் அங்கு மகா நாடு கூடியிருந்தார்கள்.

என்ன! என்ன! கடவுளர் மகாநாடா! நூற்றுக் கணக்கான கடவுளர்களா!

ஆச்சரியப் படுவதற்கு ஒன்றுமில்லை. "எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்" என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள் அல்லவா! விழுப்புரத்தில் டிசம்பர் 6-ல் மகாத்மா காந்தி பாடசாலையில் கூடியிருந்த மாபெரும் சபையில் பெரும்பாலோர் ஆரம்ப ஆசிரியர்கள்.

அதாவது எழுத்து அறிவிக்கும் இறைவர்கள். இந்தத் தேசத்தின் குழந்தைகளுக்கு எழுதப் படிக்கச் சொல்லிக் கொடுத்து, எதிர் காலத்தில் இந்த நாட்டை ஆளும் தகுதி படைத்தவர்களாக அவர்களை உருவாக்கும் உயர்ந்த பணியை மேற்கொண்டு உழைப்பவர்கள்.

உபாத்தியாயர்கள் ஒரு இடத்தில் ஒன்று கூடி விட்டார்களானால், தங்களுடைய அந்தஸ்து எத்தகையது என்பதை உணர்ந்து விட்டார்களானால், உணர்ந்து அதைச் சரியான வழியில் உபயோகிக்க ஆரம்பித்து விட்டார்களானால் சுதந்திரம் பெற்றுள்ள நம் தேசத்தைப் பிடித்திருக்கும் அறியாமை என்ற பேய் இருக்கும் இடம் தெரியாமல் ஓடி மறைந்து போய் விடும்.

எழுத்தறிவுத் துறையில் இன்னும் அதல பாதாளத்தில் கிடக்கும் நம் தேசத்தை உபாத்தியாயர்களால் மகோன்னத நிலைக்குக் கொண்டுவர முடியும். தரித்திரம் பிடுங்கித் தின்னும் நம் பாரத நாட்டைச் செல்வம் கொழிக்கும் தேசமாக மாற்றும் திறன்படைத்த மக்களைத் தயார் செய்ய முடியும். எப்பேர்ப்பட்ட பொய்ப் பிரசாரங்களையும், குழப்பங்களையும், ஏமாற்றுகளையும் எதிர்த்து நின்று நாட்டைக் காப்பாற்றும் உறுதி உடையவர்களாக மக்களை மாற்ற முடியும்.

ஆரம்பக் கல்வி உபாத்தியாயர்கள் இந்த மாதிரி அற்புதங்களைச் சாதிக்கும்படி பால் மணம் மாறா பச்சிளம் குழந்தைகளின் மனத்தைப் பண்படுத்திவிட முடியும்.

** ** **

விழுப்புரத்தில் நடந்த 'விழுப்புரம் வட்டத் துவக்கப் பள்ளி ஆசிரியர் மகா நாட்'டுக்குக் கல்வி மந்திரி கனம் சி. சுப்பிரமணியம் தலைமை வகித்தார். வரி வசூல் மந்திரி ஸ்ரீ மாணிக்கவேலு நாயக்கர் மகாநாட்டைத் திறந்து வைத்தார்.

இம்மாதிரி ஒரு தாலுகாவின் ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டுக்கு இரண்டு மந்திரிகள் விஜயம் செய்திருக்கிறதே. தற்போதைய ராஜாஜி மந்திரி சபை ஆரம்ப ஆசிரியர்களின் பணிக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறது என்பதை ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

விழுப்புரம் வட்டத் துவக்கப் பள்ளி ஆசிரியர்கள் சங்கம் மிக நல்ல முறையில் அமைக்கப்பட்டு நடந்து வருகிறது என்பதைத் தெரிந்து கொள்ளும்படி மகாநாடு சிறந்த முறையில் நடந்தது. பிற்பகல் மூன்று மணிக்கு ஆரம்பித்த மகாநாடு மாலை ஆறு மணி வரையில் நடைபெற்றது. மகாநாட்டில் மூன்று மணி நேரமும் ஆசிரியர்களின் உரிமைகள், கடமைகளைப் பற்றியும், புதுக் கல்வித் திட்டத்தின் சிறப்பைப் பற்றியும் பேசினார்கள். கூட்டத்தில் உற்சாகத்துடன் வந்து கூடியிருந்த ஆசிரியர்களும், ஆசிரியைகளும், பொது மக்களும் அமைதியாக இருந்து கரகோஷம் செய்ய வேண்டிய இடத்தில் செய்து, சிரித்து மகிழ வேண்டிய இடத்தில் கலகலவென்று சிரித்துப் பிரசங்கமாரியில் மூழ்கித் திளைத்தார்கள்.

மந்திரிகள் இருவருக்கும், மகாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த ஆசிரியர் கல்கி அவர்களுக்கும் விழுப்புரம் வட்டம் துவக்கப் பள்ளி ஆசிரியர் ஒற்றுமைக் கழகங்கள் சார்பாக ஸ்ரீ ஆர். திருவேங்கடம் பிள்ளை வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்தார். பிறகு விழுப்புரம் தாலுக்கா ஆசிரியர்கள் சார்பாக ஸ்ரீ ஆர். வெங்கடேசன் மந்திரிகளுக்கும் கல்கி ஆசிரியருக்கும் பூமாலைகளும் பாமாலைகளும் சூட்டி வரவேற்றார்.

வரவேற்புப் பத்திர பாமாலைகளை ஆக்கி உதவியவர் லால்குடி ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி என்பதையறிந்து மகிழ்ந்தேன். கவிதை நயத்துடனும், கருத்துச் செறிவுடனும், ஹாஸ்யச் சுவையுடனும் கவிதைகள் புனைந்திருந்தார்.

** ** **

"எனக்கு நல்ல மாதிரியாகத் தமிழ் பேசத் தெரியாது" என்ற அவையடக்கத்துடன் மந்திரி

விழுப்புரம் காந்தி பாடசாலை உதவி நிதிக்காகக் குமாரி கமலா நடனமாடினார்.





விழுப்புரம் வட்டம் துவக்கப் பள்ளி மகாநாட்டுக்கு வந்திருந்த பிரதிநிதிகளின் ஒரு பகுதி.

ஸ்ரீ மாணிக்கவேல் நாயக்கர் ஆரம்பித்து எளிய தமிழில் நிதானமாகப் பேசினார். உபாத்தியாயர்களின் சம்பளம் குறைவுதான் என்பதை ஒத்துக் கொண்டு இரக்கப்பட்டார். உபாத்தியாயர்கள் தங்கள் குடும்ப வரவு செலவுத் திட்டத்தைத் தாங்கள் வாங்கும் சம்பளத்துக்கு ஏற்றபடி தயார் செய்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அதற்கான சில யோசனைகளையும் கூறினார். காப்பி குடிப்பதையும், கலர் சோடா அருந்துவதையும் ஒழித்துக் கட்டி விட்டுக் கைக் குத்தல் அரிசியை உபயோகிக்கும்படி யோசனை சொன்னார் கதரை வாங்க முடியா விட்டால் கைத்தறித் துணிகளையாவது கட்டாயம் வாங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஆசிரியர்கள் மகாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

அவருக்குப் பின் அழகான தமிழில் தங்கு தடையின்றிப் பேசிய கல்வி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் அவர்கள் "நீங்கள் எல்லாரும் உபாத்தியாயர்கள், நான் மாணவன்" என்று ஆரம்பித்துப் பேசினார். "உபாத்தியாயர்கள் குறைந்த சம்பளத்தைப் பெற்று வந்தாலும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தை வகிப்பவர்கள். அந்த அந்தஸ்து மேலும் உயருவதற்கான வழி வகைகள் செய்ய முயன்று வருகிறேன். உபாத்தியாயர்களும் அதற்கு உதவ வேண்டும். எந்த அரசியல் கட்சிகளிலும் பங்கு கொள்ளாமல் கட்சிகளுக்கெல்லாம் மேலே உபாத்தியாயராகவே இருந்து தொண்டாற்ற வேண்டும்" என்று கூறி விட்டு, "இந்த நாட்டில் இப்போது பூமி தான இயக்கம் தீவிரமாக நடைபெறுகிறது. அதில் ஒரு பகுதியைப் பள்ளிக்கூடங்களுக்கும் திருப்பிவிட வேண்டும். ஒவ்வொரு கிராமப் பள்ளிக் கூடத்துக்கும் பத்து ஏக்கரா நிலம் பூமி தானமாகக் கிடைத்தால் பிள்ளைகளின் விவசாயப் பயிற்சிக்கு நிலங்கள் உதவியாயிருக்கும். ஆசிரியர்களின் நிலைமையையும் சிறிதளவு உயர்த்த முடியும்" என்றார்.

வட ஆற்காடு மாவட்ட உபாத்தியாயர்கள் சங்கத் தலைவர் ஸ்ரீ வி. சி.



மகாநாட்டுத் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியம் பேசுகிறார். பின்னால் நிற்பவர் தான் விழுப்புரம் காந்தி பாடசாலையின் நிர்வாகி ஸ்ரீ லட்சுமணசாமி.



விழுப்புரம் ஜோதி தியேட்டரில் கூடியிருந்த ரசிகர் மகாசபையின் ஒரு தோற்றம்.

காளியப்பன் அவர்கள் உபாத்தியாயர்களின் சார்பாகப் புதுக் கல்வித் திட்டத்தை வரவேற்று அனுபவரீதியாக ஆவேசத்துடன் பேசினார். இந்தக் கல்வி முறையால் மாணவர்களைப் போலவே உபாத்தியாயர்களும் மகிழ்ச்சியுடன் இருப்பதாக இதய பூர்வமாக ஒவ்வொரு உபாத்தியாயரும் அனுபவிக்கிறார்கள் என்பதை உற்சாகமாகக் கூறினார். அதை ஏற்றுக் கொண்டு உபாத்தியாயர்கள் நிறைந்த அந்த மகாசபை மகிழ்ச்சி தெரிவித்தது.

"இதோ பாருங்கள்! புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றி ஒரு மாணவன் கூறுகிறான்" என்று சொல்லிக் கணீரென்ற குரலில் கம்பீரமாகப் பாட ஆரம்பித்து விட்டார். அந்தப் பாடல் வருமாறு:

மனமகிழ்ந்து பள்ளிக்கூடம்
போய் வருவோமே!
மதியம் காலே தொழில் பெறவே
வீடு சேர்வோமே!

நாட்டுக் கேற்ற கல்வி முறை
வந்தது பாரு!
நாம் படித்து மேன்மையுற
நடப்பது நேரு!

உடலும் மனமும் ஒன்றாய் வேலை
செய்யுது பாரு!
உகந்த கல்வி நாம் பெறவே
உடையது சீரு!

குமாஸ்தா படிப்பு முறை
நமக்கினி வேண்டாம்
குணம் குறைக்கும் கல்விப் பெருமை
சொல்லவே வேண்டாம்

மெக்காலே துரை கொண்டுவந்த
மேட்டிமைப் படிப்பை
மெதுவாகத் தள்ளிவிடுவோம்
ஆங்கில உடுப்பை

ராஜாஜி ஆட்சியிலே
வந்தது கல்வி—நம்
ராஜ்யத்தின் மூலமாகப்
பெருகுது கல்வி

காந்தி பாடசாலையின் சார்பாக மந்திரி மாணிக்கவேலர் நாட்டியமாடிய குமாரி கமலாவுக்கு வெள்ளிக் கோப்பை வழங்கினார்.



# மியூஸிக் அகாடமி, மதராஸ்

## இருபத்தேழாவது சங்கீத மகாநாடும் சங்கீதக் கச்சேரிகளும்

(மியூஸிக் அகாடமியைச் சேர்ந்த ஸ்தாபனங்களின் ஒத்துழைப்புடன் நடைபெறுகிறது)

**21 - 12 - 1953 முதல் 1 - 1 - 1954 வரை**

கனம் டாக்டர் பி. வி. கேஸ்கர் (இந்திய செய்தி, விளம்பர இலாகா மந்திரி) அவர்கள் திறந்து வைப்பார்கள். வித்வான் திருப்பாம்பரம் என். சுவாமிநாத பிள்ளை அவர்கள் மகாநாட்டிற்குத் தலைமை வகிப்பார்கள். நீதி, கல்வி மந்திரி கனம் ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் 'சதஸ்'ஸிற்குத் தலைமை வகிப்பார்கள்.

மயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலில் :: ஆரம்ப தினக் கச்சேரி 21-12-1953 மாலை 6-15 மணிக்கு

வித்வான் திருப்பாம்பரம் என். சுவாமிநாத பிள்ளை — புல்லாங்குழல்
திருப்பாற்கடல் வீரராகவன் — வயலின்
மதராஸ் கண்ணன் — மிருதங்கம்

பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில் காலை 8 முதல் 10 மணிவரை சங்கீத சர்ச்சைகளும் 12 முதல் மாலை 2 மணிவரை சங்கீதப் போட்டிகளும் நடைபெறும்

தினசரி நிகழ்ச்சி விவரங்கள் (D. V.)

| பி. எஸ். ஹைஸ்கூல் ஹாலில் | மயிலாப்பூர் சுந்தரேஸ்வரர் ஹாலில் | |
|---|---|---|
| | **22 - 12 - 53 செவ்வாய்க்கிழமை** | |
| மாலை 3 முதல் 4-30 வரை | மாலை 5-30 முதல் 8-30 வரை | இரவு 9-30 முதல் 11-30 வரை |
| அபிஷேகம் கிருஷ்ணன்<br>டி. என். மணி<br>பி. சீனிவாசன்<br>டி. என். தியாகராஜன் | மகாராஜபுரம்<br>டி. சௌடையா<br>முருகபூபதி | எஸ். பாலசந்தர் — வீணை<br>வேலூர் ராமபத்ரன் |
| | **23 - 12 - 53 புதன்கிழமை** | |
| ஓ. வி. சுப்ரமணியம்<br>கோவை ராமச்சந்திர ராவ்<br>ஏ. கிருஷ்ண அய்யங்கார் | மதுரை மணி அய்யர்<br>லால்குடி ஜெயராமன்<br>மாஸ்டர் ரகு<br>வைத்தியநாதன் | ஏ. கே. சுப்பய்யர் — ஜலதரங்கம்<br>ஏ. எஸ். தண்டபாணி<br>திருவாரூர் நாகராஜன் |
| | **24 - 12 - 53 வியாழக்கிழமை** | |
| முடிகொண்டான் கிருஷ்ணமூர்த்தி<br>திருக்கோடிகாவல் கிருஷ்ணமூர்த்தி<br>மயில்சாமி | அரியக்குடி<br>பாப்பா<br>மணி | டி. விஸ்வநாதன் — புல்லாங்குழல்<br>வி. தியாகராஜன்<br>டி. ரங்கநாதன் |
| | **25 - 12 - 53 வெள்ளிக்கிழமை** | |
| போமுகுடி சகோதரர்கள்<br>எஸ். வி. அச்சுதன்<br>பி. எஸ். தேவராஜன்<br>பாலக்காடு ஸௌந்தரம் | எம். எஸ். சுப்புலக்ஷ்மி<br>டி. என். கந்தரேசய்யர்<br>டி. கே. மூர்த்தி<br>கோதண்டராமய்யர் | D. T. ஜோஷி<br>— ஸிதார் |

**26 - 12 - 53 சனிக்கிழமை**

என். லலிதா
பாபநாசம் பாலசரஸ்வதி
கே. வி. கனகாம்புஜம்

ஜி. என். பாலசுப்பிரமணியம்
டி. என். கிருஷ்ணன்
பழனி
வில்வாத்திரி அய்யர்

அண்ணாசாமி பாகவதர்
(குசேலோபாக்யானம்) — ஹரிகதை

**27 - 12 - 53 ஞாயிற்றுக்கிழமை**

மதுரை என். கிருஷ்ணன்
கும்பகோணம் சீனிவாசன்
வி. நாகராஜன், பாலக்காடு ஸுந்தரம்

குமாரி கமலா
— பரதநாட்டியம்

பிருந்தா, முக்தா
அபிராமி
டி. என் ராம்தாஸ் ராவ்

**28 - 12 - 53 திங்கட்கிழமை**

வி. ரங்கநாயகி
கோமளவல்லி சீனிவாசன்
வி. எஸ். ஜானகி

செம்மங்குடி
ராஜமாணிக்கம் பிள்ளை
மணி
கோதண்டராமய்யர்

துவாரம் — பிடில்
மதுரை கிருஷ்ண அய்யங்கார்

**29 - 12 - 53 செவ்வாய்க்கிழமை**

எஸ். பி. நடராஜன்
— புல்லாங்குழல்
கோவை பி. தக்ஷிணாமூர்த்தி
கும்பகோணம் என். கணேசன்

டி. கே. பட்டம்மாள்
திருவள்ளூர் சுப்ரமண்யம்
குஞ்சுமணி
வைத்தியநாதன்

சுசீலா நஞ்சுண்டய்யா & பார்ட்டி
(ஹைதராபாத்) — ஹிந்துஸ்தானி

**30 - 12 - 53 புதன்கிழமை**

திருவாரூர் டி. வி. நமசிவாயம்
சாலக்குடி நாராயணசாமி
மார்த்தாண்டபுரம் மணி அய்யர்
டி. என். தியாகராஜன்

ஆலத்தூர்
கோவிந்தராஜப் பிள்ளை
பழனி
வில்வாத்திரி

கே. சாவித்திரி — கோட்டு வாத்தியம்
சி. வி. தனலக்ஷ்மி
திருச்சூர் அப்புவய்யர்

**31 - 12 - 53 வியாழக்கிழமை**

கௌரிகுமாரி — வீணை
குருவாயூர் துரை

அமினுதீன் தாகர் &
மொஹினுதீன் தாகர் — ஹிந்துஸ்தானி

டி. என். ராஜரத்தினம் பிள்ளை
என். ராகவ பிள்ளை — நாகஸ்வரம்

**1 - 1 - 54 வெள்ளிக்கிழமை**

5 - 15 மணிக்கு
சதஸ்

6 - 30 மணிக்கு
பாலசரஸ்வதி — பரதநாட்டியம்

சீஸன் டிக்கெட்டுகள் : ஸ்பெஷல் ரிசர்வ்டு ரூ. 60/- (பிட்), ரூ. 50/- (மேடை), முதல் வகுப்பு ரூ. 20/- இரண்டாம் வகுப்பு ரூ. 15
ரூ. 5/- கொடுத்து முதல் வகுப்பு ரிசர்வ் செய்து கொள்ளலாம்.

சீஸன் டிக்கெட்டுகள் கிடைக்குமிடங்கள் :

1. மியூஸிக் அகாடமி ஆபீஸ், 115-E, மௌபரீஸ் ரோடு, மதராஸ்-14. 2. ரஸிக ரஞ்சனி சபா, மயிலாப்பூர், மதராஸ்

இந்தப் பாட்டை ஸ்ரீ காளியப்பன் பாடும்போது மகா நாட்டுப் பந்தலில் கூடியிருந்தவர்கள் எல்லாம் பந்தல் அதிரும்படி கைகொட்டி மகிழ்ந்தனர்.

உணர்ச்சியும் உற்சாகமும் பொங்கப் புதுக் கல்வித் திட்டத்தை வரவேற்று மன்னார்குடியி லிருந்து வந்திருந்த ஆசிரியர் ஒருவர் சரமாரி போன்ற வேகத்துடன் பேசினர். உபாத்தியாயர்கள் எல்லோரும் சேர்ந்து புதுக் கல்வித் திட்டத்தை வெற்றிகரமாக நடத்தித் தீருவோம் என்று அவர் கூறியபோது எல்லா உபாத்தியாயர்களும் கரகோஷம் செய்து ஆவாரித்து அதை உற்சாகமாக வரவேற்றனர்.

மகாத்மா காந்தி பாடசாலை நிர்வாகி ஸ்ரீ பெ. க. லட்சுமணசாமி அவர்கள் ஆசிரியர்கள் சம்பள உயர்வு, வகுப்பு முறையில் மாறுதல், வாத்தியார்களின் வீட்டு வசதி முதலியவைகள் பற்றிய மூன்று தீர்மானங்களைக் கொண்டு வந்து நிறைவேற்றினர். கடைசியில் ஸ்ரீ சுவாமி பால சிவானந்தர் மகாநாட்டின் வெற்றிக்கு உழைத்த ஒவ்வொருவருக்கும் நல்ல முறையில் வந்தனோபசாரம் கூறிய பிறகு, தேசிய கீதத்துடன் மகாநாடு குதூகலமாக முடிந்தது.

** ** **

விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலையின் கூரைக் கட்டிடங்கள் சென்ற வருஷத்தில் தீபாவளிப் பட்டாசினால் தீப்பிடித்து எரிந்து போனதைப் பற்றியும், அந்தப் பள்ளிக் கூடத்தை மீண்டும் நல்ல முறையில் கட்டுவதற்காகக் குமாரி கமலாவின் பரத நாட்டியக் கச்சேரி ஏற்பாடு ஆகியிருப்பது பற்றியும் "கல்கி"யில் வெளியாகி யிருந்த செய்திகளை நேயர்கள் கவனித்திருப்பார்கள்.

அன்று மாலை விழுப்புரம் ஜோதி தியேட்டரில் குமாரி கமலாவின் பரதநாட்டியக் கச்சேரி கனம் மாணிக்கவேலு நாயக்கரின் தலைமையிலும், கனம் சி. சுப்பிரமணியம் அவர்களின் முன்னிலையிலும் வெகு சிறப்பாக நடைபெற்றது.

"விழுப்புரத்தில் எந்தக் கச்சேரிக்கும் பிரபல ஸினிமாவுக்கும் கூட இவ்வளவு கூட்டம் திரண்டு வந்து பார்த்ததில்லை" என்று அவ்வூர் வாசிகள் பலரும் வியப்புடன் சொன்னார்கள்.

இந்தக் கச்சேரியின் மூலம், நன்கொடைகளையும் சேர்த்து, ஐயாயிரத்து ஐந்நூறு ரூபாய் வசூலானதாகக் கச்சேரியின் போது தெரிவிக்கப் பட்டது.

விழுப்புரம் போன்ற ஊரில் இவ்வளவு வசூல் ஆனது பெரிய காரியந்தான். மகாத்மா காந்தி பாடசாலைக் கைங்கரியத்துக்கு அவ்வூர் வாசிகளின் ஆதரவும், குமாரி கமலாவின் நாட்டியக் கச்சேரியை அவர்கள் எவ்வளவு ஆர்வத்துடன் எதிர்பார்த்தார்கள் என்பதும் மேற்படி வசூல் மூலம் நன்கு வெளியாயிற்று.



ஸ்ரீ வி.சி. காளியப்பன்

குமாரி கமலாவின் பரதநாட்டியத்தில் அன்று ஒரு புதிய பாவமும் எக்களிப்பும் பொங்கித் ததும்புவதாகவே தோன்றியது.

நாட்டிய குமாரி அதி விரைவான காலங்களில் ஜதிகள் ஆடும்போதும், நடன ஆசிரியர் ஸ்ரீ வழுவூர் ராமய்யாப் பிள்ளை நிமிர்ந்து உட்கார்ந்து, அதற்கு ஏற்றாற்போல் தாளம் போட்டு ஜதிகள் கூறியபோதும் சபையோர் மிக்க உற்சாகமடைந்தார்கள். அலாரிப்பு, ஜதிஸ்வரம், சப்தம், வர்ணம் இவற்றுக்குப் பிறகு "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே", "தாயே யசோதா", "மாலைப் பொழுதினிலே", "நாதர் முடிமேல்", "நல்ல பெண்மணி", "நடனமாடினார்" முதலிய பாடல்களுக்குக் குமாரி கமலாவின் அபிநய நாட்டியங்கள் மிகச் சிறப்பாக அமைந்தன.

கடைசியில் குறத்தி வேடத்தில் வந்து ஆடிய குற்றாலக் குறவஞ்சி நடனமும், நடுநடுவில் வந்து ஆடிய சிறுமி ராதாவின் கிருஷ்ண நடனம், செம்படவன் நடனம் முதலிய ஒவ்வொன்றிலும் புதிய வேகமும், சாயலும் அமைந்திருந்தன. பார்ப்பதில் சோர்வே ஏற்படவில்லை.

குமாரி கமலாவின் அன்றைய உதவி நாட்டியத்துக்குத் தங்கள் நன்றியைக் காண்பித்துக் கொள்வதற்காக, நாட்டிய குமாரிக்கும், நடன ஆசிரியருக்கும் மகாத்மா காந்தி பாடசாலை நிர்வாகி ஸ்ரீ லட்சுமணசுவாமி அவர்கள் பாடலாக அமைந்திருந்த வாழ்த்துப் பத்திரங்களை வழங்கினர்.


தலைமை வகித்த மந்திரி ஸ்ரீ மாணிக்கவேல் நாயக்கர் அவர்கள் ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையை விழுப்புரம் மகாத்மா காந்தி பாடசாலையின் சார்பாக நாட்டிய குமாரி கமலாவுக்கு வழங்கி, நாட்டியத்தின் சிறப்பைப் புகழ்ந்து பாராட்டினர்.

ஸ்ரீ லட்சுமணசாமி ஊக்கத்துடன் பாடுபட்டு ஆர்வத்துடன் உழைத்து வரும் கல்வித் தொண்டுக்கும், பாடசாலை கட்டும் புனித கைங்கரியத்துக்கும் ஐயாயிரம் ரூபாய் போதவே போதாது என்று சொல்ல வேண்டிய தில்லை. மகாத்மா காந்தி பாடசாலைக் கட்டிடம் கட்டி முடிப்பதற்கு மேற்கொண்டு பெரும் நிதி வசூலாக வேண்டியது மிகவும் அவசியம்.

எனவே விழுப்புரம் வாசிகளும் அக்கம் பக்கத்தில் வசித்து வரும் பெற்றோர்களும் பணம் படைத்த பெரிய மனிதர்களும் கல்வி வளர்ச்சியில் ஆர்வம் படைத்த அன்பர்களும் இந்த உத்தமத் தொண்டுக்கு மேலும் பொருள் உதவி செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும்.



மகா நாட்டில் பேசிய மன்னார்குடி ஆசிரியர்




உபரி விடமின் சத்து சேர்க்கப்பட்ட பிரிட்டானியா பிஸ்கோத்துகள், இளைஞர், முதியோர் யாவராலும் விரும்பப்படுகிறது.


'பிக்ஸ்' இனசை ருசி பாருங்கள். கரகரப்பாகவும், உப்பிட்டு ருசிகரமாயுள்ள இந்த பிஸ்கோத்துகளை விரும்புவீர்கள்.

சிறந்த பிஸ்கோத்துகள்


# பிரிட்டானியா

FBMI

BBX ITM



ரம்மியமான
நறுமணமுள்ளது
சிறியோருக்கும்
முதியோருக்கும்
ஒருங்கே ஒப்பற்றது
'ZEPHROL'
COUGH SYRUP
சக்தி, விரைவாக வேலை செய்யும் திறன், சாப்பிடுவதற்கு ருசி ஆகிய எல்லாம் சேர்ந்து "ஜெப்ராலு"க்கு நாடு முழுவதிலும் நல்ல பிரசித்தியை அளிக்கிறது.
M&B
manufactured by
MAY & BAKER LTD
distributed by: MAY & BAKER (INDIA) LTD
BOMBAY-CALCUTTA-MADRAS
NEW DELHI-GAUHATI

டிசம்பர்
25ல்
முதல்
ஆர். என். ஆர்.
பிக்சர்ஸ்
ஜாதகம்
தமிழ்
ஹாஸ்ய சமூகச் சித்திரம்
ஆர். நாகேந்திர ராவ்.
ஏவிஎம்

# பொல்லாத காதல்!

**பரதேசி**

பெண்களுக்கென்று ஒதுக்கப் பட்ட 'ஸீட்' வரிசையில் முதல் ஸீட்டில் மணி அமருவான்; சொல்லி வைத்தாற் போல் இரண்டாம் ஸீட்டில் மமதா அமருவாள். பஸ்ஸைத் துரத்திக் கொண்டு பின் புறமாகப் படையெடுக்கும் பிளஷர் காரையோ லாரியையோ கண்டு பிடித்துக் கொடுக்கும் சிறு கண்ணாடியில் அவன் காற்றில் அலையும் தன் நெற்றி மயிரைக் கோதிக் கொள்வான். பத்மினியைக் கண்ணாடியில் கண்டு மோகித்த மொகலாய மன்னனைப் போல் மணி திகைத் திருப்பான். பின் புறத்திலிருந்து டிக்கெட் கொடுத்து வரும் கண்டக்டர் மணியையோ மமதாவையோ தனித் தனியாகப் பாவிக்க மாட்டார். சில நாள் மணியிடம் இரண்டு டிக்கெட்டைக் கிழித்துக் கொடுத்து வசூல் செய்வார். சில நாள் மமதாவினிடம் வசூல் செய்வார். பஸ்ஸில் இட நெருக்கடி ஏற்படும் போதெல்லாம் மமதையை மணியின் அருகிலோ அல்லது மணியை மமதையின் அருகிலோ உட்காரும்படி உத்தர விடுவார். இப்படியாகத் தானே இந்த மௌன நாடகம் மாதக் கணக்கில் நடந்து கொண்டிருந்தது. போதிய கல்வியறிவும் நல்ல நாகரிகச் சூழ்நிலையும், சுதந்திரமும் படைத்த மணியும் மமதாவும் இதைத் தவறாகவே கருத வில்லை.

மமதா பெண்களின் ஆரம்பப் பள்ளி யொன்றில் சம்பளம் வாங்காத கௌரவ ஆசிரியை. மணி வைகதேயா மளிகைப் பண்டக சாலையில் கணக்குப் பிள்ளை. இருவரும் கிட்டத் தட்ட ஒரே சமயத்தில் வீட்டை விட்டுப் புறப்பட்டு வருவார்கள். சில நாட்கள் அவன் முன்னே வருவான்! சில நாட்கள் அவள் முன்னே வருவாள்! யார் முன்னதாக வந்தாலும் இன்னொருவர் வரும் வரைக்கும் எந்த பஸ்ஸிலும் ஏற மாட்டார்கள்.

சாயங்கிரம் திரும்பும் போது கூடச் சிற்சில சமயங்களில் இருவரும் சந்தித்துவிடுவார்கள். ஆனால் காலையில் வரும்போது உட்கார்ந்த அதே இடம் கிடைக்காது. சில சமயம் நின்றுகொண்டே கூட வர வேண்டியிருக்கும்.

தினந்தோறும் இருவரும் சகப் பிரயாணிகளாகச் செல்கிறார்கள் என்பதைத் தவிர அவர்களிடையே வேறு எவ்விதத் தொடர்பு மில்லை. இந்த நிலை இப்படியே பல நாட்கள் நீடித்துக் கொண்டிருந்தது.

வைகதேயா மளிகைப் பண்டகசாலை நகர மக்களிடையே நல்ல பெயரெடுத்து வந்தது. அவர்கள் வாடிக்கைக்காரர்களைக் கவர விதவிதமான முயற்சிகள் எடுத்து வந்தார்கள். திடீரென்று ஒரு நாள் கடை திறந்ததும் திறக்காததும் இப்படி ஒரு 'போர்டு' எழுதி வைப்பார்கள்!

**நேயர்களே! மன்னிக்கவும்!**

**நேற்று மாலை தவறுதலாக எங்கள் வாடிக்கைக் காரர் ஒருவருக்கு உளுத்த பயறு வழங்கி விட்டோம். பின்பு தான் அது கோயில் மாட்டுக்காக ஒதுக்கி வைத்த மூட்டை என்பது தெரிந்தது. தயவு செய்து அந்த நேயர் நல்ல பயறு வாங்கிச் செல்லும்படி கோரப்படுகிறார்.**

— இப்படி விளம்பரம் செய்தால் வாடிக்கைக்காரர்கள் பெருகாமல் குறையவா செய்வார்கள்? உண்மையில் முதல் நாள் பயறு யாரும் வாங்கிச் சென்றிருக்க மாட்டார்கள். என்றாலும் வைகதேயாவின் நலனில் அக்கறையுள்ள மணி இப்படி ஒரு விளம்பரம் செய்து வைப்பான்.

மணியின் யோசனைப் படியே பத்திரிகைகளில் மற்றொரு விளம்பரம் வெளி வந்தது:



மாதர்களுக்கோர் மகிழ்ச்சி தரும் செய்தி!

> நாங்கள் எங்கள் கடைக்கு வரும் மாதர்களை வரவேற்று அவர்களின் தேவையை உணர்ந்து சரக்கு சப்ளை செய்ய ஒரு மாதர் பகுதியை விரைவில் ஆரம்பிக்க விரும்புகிறோம். இந்தப் பகுதியில் விசாரணைக் குமாஸ்தாவாக வேலை பார்க்கப் போதிய பொறுமையுள்ள இளம் பெண் தேவை. மாதச் சம்பளம் ரூ. 100. வேலை நேரம் காலை 10 முதல் 12 வரை, மாலை 3 முதல் 5 வரை.

இந்த விளம்பரத்தின் பயனாகப் படித்த பெண்கள் பலர் அங்கே வர ஆரம்பித்தனர். ஆனால் மணி எதிர் பார்த்தபடி மமதா வரவில்லை. அவசரப்பட்டு முதலாளி யாரையாவது நியமனம் செய்து விட்டால் என்ன செய்வது என்று அவனுக்கு உள்ளூற நடுக்கம். பஸ்ஸில் வரும்போது இது சம்பந்தமாக நேரில் அவளிடம் கேட்கலாமென்றால் அவள் ஒரு வேளை முகத்திலடித்தாற்போல் மறுத்து விட்டால் என்ன செய்வது என்ற பயம்.

கௌரி சங்கர் அனாதைப் பள்ளியில் மமதா கௌரவப் பணி புரிந்து வந்தாள். ஒரு வருஷ காலமாக அங்கே சேவை செய்து வந்தாள். அதை ஒரு தகுதியாகக் கொண்டு அவளுக்கு மேற்படிப்புக்கு வேண்டிய பண உதவி கிடைக்கும்படி செய்வதாக மேற்படி பள்ளியின் நிர்வாகி ஆசை காட்டியிருந்தார். ஆனால் வருஷம் ஒன்றான பின்பும் அவரொன்றும் அப்படி உதவி கிடைக்கச் செய்யவில்லை. இந்த நிலையில் சின்னஞ் சிறு வயதிலேயே தந்தையை இழந்து விதவைத் தாயின் ஒரே ஜீவநாடியாக இருந்து வரும் மமதா என்ன செய்வதென்று யோசித்தாள். கல்யாணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே காலங் கழிக்க வேண்டுமென்று அவள் ஒன்றும் பிரதிக்ஞை செய்து கொள்ளவில்லை. ஆனால் தனக்கும் விவாகம் செய்து கொள்ளும் உரிமையுண்டு என்பதை எண்ணிப் பார்க்க முடியாத நிலையிலிருந்தாள் அவள். வரனைத் தருகிறவர்கள் தட்சிணை கேட்கும் கெட்ட வழக்கத்தை விட்டொழித்து வரனுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்கும் வரை ஆகும் செலவை ஏற்க முடியுமா என்றும், மேலே அவனைப் படிக்கவைக்க முடியுமா என்றும் கேட்கத் தொடங்கிவிட்ட காலமல்லவா இது! எனவே கல்யாண யோசனையை ஒரு பக்கம் ஒதுக்கி வைத்து விட்டு வாத்தியாரம்மாவாகவே வாழ்நாளை ஓட்டி விடலாம் எனும் தீர்மானத்துக்கு அவள் வந்திருந்தாள். இந்த நிலையில் பெண் குடும்பப் பொறுப்பை ஏற்கும் மட்டும் வேறு வழியின்றி அவளுடைய தாயார் பெரிய மனிதர் ஒருவர் வீட்டில் சமையல் வேலை செய்து வந்தாள்.

வைநதேயா மளிகைப் பண்டகசாலை விளம்பரம் அகஸ்மாத்தாகப் பொட்டணம் கட்டி வந்த பத்திரிகையின் மூலம் மமதாவின் அன்னையின் கவனத்தைக் கவர்ந்தது. சாயந்திரம் மமதா வீட்டுக்கு வந்ததும் அது விஷயமாகப் பிரஸ்தாபித்தாள்.

"சம்பளம் என்னவோ நூறு ரூபாய் கிடைக்கும்; ஆனால் ஊரில் நாலு பேர் நாலு சொல்லுவார்கள்! என்ன தான் பெண்கள் பகுதியென்றாலும் அங்கே ஆண்களும் விசாரணைக்கு வரத்தான் செய்வார்கள்! இல்லையென்றாலும் ஸ்டோர் சம்பந்தப்பட்ட ஆண்களுடன் பேசவும் பழகவும்தான் வேண்டியிருக்கும். ஆயிரம் இருந்தாலும் ஆசிரியை வேலையைப் போல் இது ஆகாது அம்மா!" என்று மமதா ஒரேயடியாக மறுத்துக் கூறிவிட்டாள்.

"இப்போதே நீ ஒன்றும் முடிவு செய்து விடாதே! நான் நாளைய தினம் போய் விசாரித்துக் கொண்டு வருகிறேன். என் மனத்துக்குப் பிடித்திருந்தால் அப்புறம் நீ போய்ப் பார்த்து வரலாம்" என்றாள் அம்மா.

* * *

வைநதேயா மளிகைப் பண்டகசாலை விளம்பரத்தைக் கண்டு வேலை தேடி வந்த பெண்களில் பெரும்பாலோர் அங்கே ஒரு பிரம்மச்சாரி கணக்குப் பிள்ளையாக இருக்கிறானென்பதையும் விசாரணைப் பெண் குமாஸ்தா அவனுடன் நெருங்கிப் பேசவும் பழகவும் வேண்டியிருக்குமென்பதையும் உணர்ந்து வேலை பார்க்கச் சம்மதிக்கவில்லை. தங்கள் கருத்தைப் பட்டவர்த்தனமாக ஸ்டோரின் முதலாளிக்குத் தெரிவித்தும் விட்டனர். வேறு விஷயமாக இருந்தால் ஸ்டோரின் முதலாளியும் அலட்சியம் செய்திருப்பார். ஆனால் பெண்கள் பகுதி ஒன்று திறப்பதால் வியாபாரத்தில் விசேஷ அபிவிருத்தி ஏற்படும் என்பது நிச்சயமாகத் தெரியும் போது, அந்த யோசனையைச் சொன்னவனாயிருந்த போதிலும் மணியைப் பெருந் தடையாகவே கருதினார். எனவே மணியைத் தனிமையில் அழைத்து, "என்னதான் நீங்கள் நல்லவரென்றாலும் இப்படிப் பிரம்மச்சாரியாக இருப்பது நம்ம கடை வியாபாரத்தைப் பொறுத்த வரையில் சரிப் பட்டு வராது. உங்களுக்கு இரண்டு மாதம் லீவு வேண்டுமானாலும் தருகிறேன். முதலில் எங்கேயாவது ஒரு பெண்ணைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொண்டு இந்தப் பிரம்மச்சாரி அபவாதத்துக்கு ஒரு முழுக்குப் போட்டு விட்டு வாருங்கள்" என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

"நாளை முதல் நாம் கடைக்குப் போவதற்கில்லை" என்ற உணர்வு வந்ததும் மணி மமதாவிடம் அந்தக் கேள்வியைக் கேட்கத் தீர்மானித்து விட்டான். மறு நாள் வழக்கத்தை விட வெகு முன்னதாகவே குறிப்பிட்ட பஸ் நிற்குமிடத்தில் போய் நின்றான். அவளும் இப்படி ஒரு முன்னேற்பாட்டுடன் வந்தவளைப் போல் முன்னதாகவே அங்கு வந்து சேர்ந்தாள். பார்வையும் புன்னகையும் பரிமாறிக் கொள்ள முடிந்ததே தவிர இந்




நோவுகள், தலைவலி, ஜலதோஷம், ஜுரம்

இவற்றிலின்று துரிதமாக நிவர்த்திபெற

---

# சாம்பியன் & அசோக் பேனுக்கள்

எல்லோரும் விரும்புவது



சிறந்த வேலைப்பாடு
நல்ல ரகம் உத்திரவாதமுள்ளது

தயாரிப்பவர்கள் : **குஜராத் இண்டஸ்ட்ரீஸ்**

லோஹர் சவுல், லால்ஜிமான்சிங் பில்டிங், பம்பாய்-2

எல்லா பேனு வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

தரப்பிலும் பேச்சை எங்கிருந்து தொடங்குவது என்பது புரியவில்லை.

தொடங்குகிற முதல் பேச்சே முடிவான பேச்சாகி விடப் போகிறதே என்ற விஸ்மயம் இரு உள்ளங்களிலும் பொங்கி வந்து கொண்டிருந்தது.

கடைசியில் மணி ஒருவாறு துணிந்து விட்டான். "ஒன்றுமில்லை! வெகு நாளாகக் கேட்க வேண்டும் என்பது......" மேலே வார்த்தைகள் வரவில்லை.

"நானும்தான் கேட்க வேண்டுமென்றிருந்தேன்" என்று அவள் ஆரம்பித்தாள்.

"வேறே ஒண்ணுமில்லே...! உத்தியோக விஷயம் வந்து......"

"நானும்கூட அது விஷயமாகத்தான்..."

"முதலாளி வந்து கல்யாணமாகாதவர்களை வேலைக்கு வைத்துக் கொள்ள முடியாதென்கிறார்" என்றான் மணி.

"ஐயையோ! அங்கே நான் வேலை கிடைக்குமென்று நினைத்தேனே!"

"இது வரையில் பார்த்துக் கொண்டு தானே வருகிறேன். திடீரென்று இந்தப் பெண்கள் பகுதி ஆரம்பிக்க நினைத்தது முதல்......!" என்று இழுத்தான் மணி.

மமதா ஒருவாறு புரிந்து கொண்டாள்.

"ஓஹோ...! உங்களைக் கல்யாணம் செய்து கொள்ளச் சொல்கிறாரோ?"— இப்படிச் சொன்னவள் திடீரென்று எதையோ சொல்லக் கூடாததைச் சொல்லி விட்டவளைப் போல் வாயைப் பொத்திக் கொண்டாள்.

"ஆமாம், அது விஷயமாகத்தான் உங்கள் உதவியை நாடுகிறேன்."

அவன் அனாவசியமாக வெட்கித் தலையைக் குனிந்தான். ஆனால் அவன் அவளைத் தடை சொல்லாமல் பெண்கள் பகுதி வேலையை ஏற்கும்படி சொல்லத்தான் விரும்பினான். ஆகவே "என்ன உங்களுக்குச் சம்மதந் தானே?" என்று பொதுவாகக் கேட்டான்.

"என்றாலும் முறைக்கு ஒரு தடவை அம்மாவைக் கேட்டு விடுவது நல்லதில்லையா" என்று தலை நிமிராமலே பதில் சொன்னாள்.

"இதில் அம்மாவை என்ன கேட்க இருக்கிறது? உங்களுக்குச் சம்மதம் என்றால் அம்மா வேண்டாமென்று சொல்லப் போகிறாள்!" என்றான் மணி.

இந்தச் சமயத்தில் பஸ் வந்து நின்றது. இருவரும் வழக்கப்படி அதே இடத்தில் அமர்ந்தனர். அதே மௌனம், அதே புன்னகை. ஆனால் வழக்கத்திற்கு விரோதமாக மணி கடையை நோக்கிச் செல்லாமல் அவளைப் பின் தொடர்ந்து சென்றான்.

"இப்போது நான் பள்ளிக் கூடத்துக்குப் போகிறேன்!" என்றாள் அவள்.

"நானும்தான் வருகிறேனே!" என்று கூறினான் மணி.

"மானேஜர் ஏதாவது நினைத்துக் கொள்வார்!" என்று கூறினாள் மமதா.

"நான் அவரையேதான் பார்க்க வருகிறேன்!" என்றான் மணி.

"ஏன்? எதற்கு?" — மமதா புரியாமல் தான் கேட்டாள்.

"நீங்கள் இந்த வேலையை விட்டுப் பண்டகசாலையில் சேர்ந்ததும் இந்த வேலையை ஒரு வேளை நான் பார்க்க முடியுமல்லவா?"

மமதாவுக்கு மூளையே குழம்பி விடும்போலிருந்தது — 'ஏன்? நீங்கள் கடை வேலையை விட்டு விட்டீர்களா?" என்றாள்.

"விடத்தானே வேண்டும்! முதலாளிதான் பிரம்மச்சாரி கூடாதென்கிறாரே!"

"ஆமாம்! இப்போதுதான் பிரம்மச்சாரி! கல்யாணமானாலும் பிரம்மச்சாரிதானா?"

திடீரென்று மணியின் மூளையில் ஏதோ ஒரு நரம்பு சுருதி கூட்டிற்று. — "என்ன சொன்னாய்? நீ உன் அம்மாவிடம் என்ன கேட்பதாகச் சொன்னாய்?" என்றான் அவன். அவள் பதில் சொல்லாமல் முகத்தைத் தோள் பட்டையில் இடித்துக் காட்டினாள்!

இப்பொழுதெல்லாம் வைகுந்தயா பண்டகசாலையில் மணியும், மமதாவும் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம் என்பதைச் சம்பளப் பட்டியலில் நிரூபித்து வருகிறார்கள்!


ஸ்ரீ சுவாதி திருநாள் சங்கீத சபா ஆதரவில்

**ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி**

சங்கீதக் கச்சேரி

**திருவனந்தபுரம்**

விக்டோரியா ஜூபிலி டவுன் ஹாலில்

18-12-1953 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு



இந்த விவேகமான வங்காளப் பெண்மணி கூறுகிறாள்:
"உங்கள்
பணத்திற்கு அதிகமான
லாபம் பெற புத்தம்புதிய
சுத்தமான தேயிலையை
வாங்குங்கள்"
தேயிலைத் தொழிலில் தேர்ந்தவர்களால் தயாரிக்கப்பட்டு, சரம் கெட்டுப்போகாதபடி சிறந்த முறையில் பாக் செய்யப்பட்டு, தோட்டத்திலிருந்து கடைகளுக்கு அதி வேகமாக அனுப்பப்படுவதால் ப்ரூக் பாண்ட் தேயிலை காலங்கடந்து புத்தம் புதியதாகவும், கலப்படமற்று, சுத்தமானதாகவும் இருக்கிறது.
Darjeeling
Brooke Bond Tea
Blend
Brooke
Bond
Tea
எப்பொழுதும்
ப்ரூக்
பாண்ட்
பாக்கெட்
தேயிலையை
வாங்குங்கள்
BB ISD



ஆரோக்கியமும்
அழகும்
சேர்ந்து போகிறது
வெற்றிக்கு முக்
கியமானது திட
ஆரோக்கியம். மந்தமான
லிவர் மலச்சிக்கல், வாயுப்
பொருமல், அஜீரணம், ஞாப
கயீன்மை, மயக்கம் முதலிய
வற்றை உண்டாக்குகிறது. லிவர்
ஜென தொடர்ந்து சாப்பிட்டால்
அது லிவரை பலப்படுத்தி பூர்ண
ஆரோக்கியத்தைக்
கொடுக்கும்.
லிவர்ஜென்
லிவர் தொந்தரவுக
ளுக்கு நிவாரணி
ஸ்டான்டர்ட்
பார்மஸூடிகல்
வொர்க்ஸ் லிமிடெட்,
கல்கத்தா.




SCISSORS
SPECIAL ARMY QUALITY ✲ SPECIAL
SCISSORS
W.D.&H.O.WILLS.
மூன்று தலைமுறைகளாக பிரசித்தி பெற்றவை



# டாக்டரின் மனைவி

டி. எஸ். கோதண்டராமன்

லீலா தன்னை அலங்காரம் செய்து கொண்டு தயாராக இருந்தாள். தன் கணவனுக்குப் பிடித்தமான ஜார்ஜெட் புடவையும் அதற்கு ஒத்த நிறத்தில் சோளியும் அணிந்து கொண்டு, கழுத்தில் இரட்டை வடம் முத்துமாலை ஒளி வீச, இடது கையில் கருப்பு நிறப் பட்டுக் கயிற்றில் கட்டப்பட்ட கைக் கடிகாரத்தில் மணியைப் பார்த்த வாறே, கணவனின் வருகையை ஆவலுடன் எதிர் பார்த்து வழிமேல் விழி வைத்துக் காத்துக் கொண்டிருந்தாள். லீலாவின் அலங் காரத்துக்கும் ஆவலுக்கும் காரணம் அவளுடைய கணவன் தியாகராஜன், அன்றைய தினம் அவளைச் சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போவதாகக் கூறியிருந்ததுதான்.


பல வாரங்களுக்குப் பிறகு தியாகராஜனுடன் சினிமா பார்க்கப் போகிறோம் என்ற நினைப்பு அவளைப் பெருமிதம் கொள்ளச் செய்தது. வாரந் தவறாது லீலாவுடன் சினிமாவுக்கோ, நாடகத்துக்கோ அல்லது கடற் கரைக்கோ சென்று உல்லாஸமாகப் பொழுது போக்கத் தியாகராஜனுக்கும் விருப்பம்தான். ஆனால், அவனுக்குத்தான் ஓய்வே கிடைப்ப தில்லையே?

தியாகராஜன் ஒரு டாக்டர். கை ராசியுள்ள டாக்டர். அவன் வயது குறைவாயிருந்த போதிலும் அவன் செய்யும் வைத்தியம் நல்ல பலனளிக்கக் கூடியதாயிருந்தது. ஆகவே, அவனுடைய 'டிஸ்பென்ஸரி'யில் எப்போதும் நோயாளிகளின் கூட்டம்தான். அவ்வளவு நோயாளிகளையும் அன்புடன் விசாரித்து, அவர்களது வியாதியைத் தீர்மானித்து, வேண்டிய மருந்தை எழுதிக் கொடுத்து, வியாதியஸ்தர்களின் வீட்டுக்கே சென்று பார்க்க வேண்டிய கேசுகளையும் பார்த்து விட்டு, வீட்டுக்குத் திரும்பும்போது இரவு வெகு நேரமாகி விடுகிறது. அப்புறம், சினிமாவும் டிராமாவும் பார்க்க நேரம் எங்கே?

ஒரு டாக்டரை மணம் செய்து கொள்ள லீலா ஒப்புக் கொண்டபோது, டாக்டருக்கு இவ்வளவு 'ஜோலி' இருக்குமென்று எதிர் பார்க்கவேயில்லை. வைத்தியசாலையில் ஆலோசனை நேரத்தில் மட்டும் இருந்து விட்டு மற்ற சமயங்களில் வீட்டிற்கு வந்து தன்னுடன் தியாகராஜன் சல்லாபம் செய்து கொண்டிருப்பான் என்று தான் அவள் நினைத் தாள். ஆனால், அவள் நினைத்தபடி பின்னால் நடக்கவில்லை.

வைத்தியசாலைக்குப் போகும் போதுதான் தியாகராஜன் மணிக் கணக்குப்படி போவானே தவிர, திரும்பி வருவதற்குக் காலவரையறையே கிடையாது.

என்றேனும் ஒருநாள், சற்றுச் சீக்கிரமாகவே வீட்டிற்கு வந்து விட்டால், வந்த பின்பாவது நிம்மதியாக இருக்க முடியுமா என்றால் அதுவும் முடிவதில்லை. லீலாவைக் கடற்கரைக்கு அழைத்துக் கொண்டு போவதாகக் கூறி, அவளை உடை தரித்துக் கொள்ளச் சொல்வான் தியாகராஜன். அவளுக்குச் சந்தோஷம் அணைபோட முடியாது. 'அடடா, இன்று எவ்வளவு புனிதமான தினம்' என்று புளகாங்கிதமடைந்தவாறே மாடியில் உள்ள



வாலாஜாபாத் இந்துமத பாடசாலைப் புதுக் கட்டிடத்தை நவம்பர் மீ 28உ அன்று கல்வி-நிதி மந்திரி ஸ்ரீ சுப்பிரமணியம் திறந்து வைத்து, மேற்படி பாடசாலையின் தலைவர் ஸ்ரீ மாசிலாமணி முதலியார் அவர்களின் கல்வித் தொண்டைப் பாராட்டிப் பேசினார். பின்னர் கல்வி மந்திரி பள்ளிக்கூடத்தில் மாணவர்கள் செய்யும் வேலைகளைப் பார்வையிட்டார். மாணவர்கள் தாங்களே ஒருவருக்கு ஒருவர் தலைமயிர் வெட்டிக் கொள்வதைப் பார்த்து மந்திரி வியப்பதை மேலேயுள்ள படத்தில் காணலாம். ★ ★ ★ ★ ★ ★

தன் அறைக்குச் செல்வாள்; மாற்று உடை தரித்துக் கொள்ளச் சிறிது நேரம் செல்வதற்குள் தியாகராஜனே அவளைத் தேடி மாடி அறைக்கு வந்து விடுவான்.

"அப்பப்பா, என்ன அவசரம் உங்களுக்கு? இன்னும் ஒரு ஐந்து நிமிஷம் பொறுத்துக் கொள்ளுங்கள். நான் 'ரெடி'யாகி விடுவேன்......" என்பாள் லீலா.

"லீலா, உன்னை அழைத்துப் போக நான் வரவில்லை. டிஸ்பென்ஸரியிலிருந்து ஒரு 'அர்ஜண்ட் போன் கால்' வந்திருக்கு...நான் போய்க் காரை அனுப்புகிறேன். நீ மட்டும் மெரீனுவுக்குப் போய் வருகிருயா...?" என்று குளறியபடியே கூறுவான் அவன். பாவம், அவள் ஆசையைத் தூண்டி விட்டுப் பிறகு ஏமாற்ற வேண்டியிருக்கிறதே என்ற ஆதங்கம் அவனுக்கு.

லீலாவின் கண்கள் உடைப்பெடுத்துக் கொள்ளத் தயாராக இருக்கும். முகம், மருதோன்றிச் செடியின் இளந்தளிர்கள் மாதிரி செக்கச் செவேல் என்று மாறும்.

"ஆஸ்பத்திரியில் கூப்பிட்டால், இப்போது வரமுடியாது என்று கூறிவிடுவதுதானே?..."

"அதெப்படி முடியும், லீலா? ஒருவன் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும்போது, நான் அவனுக்குச் சிகிச்சை அளிப்பேன் என்று தைரியமாக என்னை நம்பி வந்திருக்கும்போது, நாம் மெரீனுவுக்குப் போகவேண்டும் என்பதற்காக அவன் கோரிக்கையைப் புறக்கணிப்பது நியாயமா?......"

"இந்தாருங்கள், இந்த வேதாந்தங்களையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்க நான் தயாராக இல்லை......ஆஸ்பத்திரிக்கோ, எங்கே வேண்டுமானுலும் போய் வாருங்கள்.." என்று லீலா பதில் கூறும்போதே அவள் குரல் கம்மி விடும். பலவிதமாக அவளுக்குச் சமாதானம் கூறியபடியே தியாகராஜன் வைத்திய சாலைக்குச் சென்று விடுவான்.

இந்த மாதிரியான நிகழ்ச்சிகள்தான் சாதாரணமாக நடைபெறும். ஆனுல், இன்றைய தினம் அப்படியில்லை. அன்று மாலை ஐந்து மணிக்கே வீட்டிற்கு வந்து விடுவதாகவும், முதல் காட்சி திரைப்படத்திற்குப் போகலாமென்றும் தியாகராஜன் காலையிலேயே வாக்குக் கொடுத்திருந்தான். ஆகவே அவன் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தாள்.

இதற்கு முன்பு தன் கணவனுடன் சினிமாவுக்குச் சென்ற சம்பவம் லீலாவின் மனத்திரையில் நிழலாட்டம் ஆடியது.

எல்லோராலும் புகழ்ந்துரைக்கப்பட்ட ஒரு திரைப்படத்தின் கடைசி நாள் காட்சி அன்று. அந்தப் படத்தைப் பார்க்க வேண்டுமென்று தியாகராஜனை லீலா ஆரம்பம் முதற்கொண்டே நச்சரித்துக் கொண்டிருந்தாள். ஆனுல், படம் பார்க்கச் சந்தர்ப்பமே கிடைக்கவில்லை. கடைசி தினத்தன்று மாலை ஐந்தரை மணிக்கு அவசரமாக வீட்டுக்கு வந்த தியாகராஜன், சினிமாவுக்குப் போகத் தயாராகும்படி லீலாவை அவசரப்படுத்தினுன். நேரங் கழித்துச் சென்ருல் படம் ஆரம்பமாகி விடுமோ அல்லது டிக்கட் கிடைக்காமல் போய் விடுமோ என்ற சந்தேகங்களில் சிக்குண்ட லீலா, மாற்று உடை தரிக்காமலேயே அவனுடன் காரில் ஏறிவிட்டாள். அன்றைய தினம் அவளுக்குச் சினிமா பார்த்தது போலவே இல்லை. காரணம், அவள் நன்ருக உடை தரித்துக் கொண்டு வர முடியவில்லையே என்ற எண்ணம் அவள் மனசைத் துன்புறுத்திக் கொண்டிருந்ததுதான்!

ஆனுல், இன்றைய தினம் அப்படியில்லை. அவர்கள் சினிமாவுக்குப் போவது முன்னதாகவே தீர்மானிக்கப் பட்டு விட்டதால், தன் மனசுக் கிசைந்த உடை தரித்துக் கொண்டு காத்துக் கிடக்கிருள் லீலா.

வாசலில் வந்து நின்ற காரைக் கண்டதும் அவளது சிந்தனைப் பின்னல் தடைப் பட்டது. அவசர அவசரமாகத் தியாகராஜன் உள்ளே வந்தான்.

"என்ன லீலா, நீ தயாரா?"

"நான் நாலு மணிக்கே தயார்! சீக்கிரம் டிரஸ் செய்து கொண்டு வாருங்கள். நீங்கள் ஐந்து மணிக்கு வருவதாகக் கூறி விட்டு ஐந்தரை மணிக்கு வந்திருக்கிறீர்களே...?"—பொய்க் கோபத்துடன் கேட்டாள் லீலா.

"லீலா, உன் பொய்க் கோபம் கூட உனக்கு ஒரு அழகைத்தான் கொடுக்கிறது" என்று புன்னகைக் கிடையில் கூறிய தியாகராஜன் தன் அறையை நோக்கிச் சென்றான்.

அவன் அறைக்குள் நுழைந்ததுதான் தாமதம், முன் ஹாலில் இருந்த டெலிபோன் 'டிரிங், டிரிங்' என்று ஒலித்தது.

லீலா ஒரு கணம் செயலிழந்து நின்றாள். பின், டெலிபோனை உற்றுக் கவனித்தாள். அவளுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வந்தது. இந்த டெலிபோன் இருப்பதால்தானே அவள் நிம்மதியற்றிருக்க வேண்டியிருக்கிறது?

டெலிபோனின் அருகில் சென்ற சமயத்தில் அவள் கோபம் ஓரளவு தணிந்திருந்தது. போனைக் கையிலெடுத்து "ஹலோ" என்றாள்.

பதில் வந்தது.

"டாக்டர் தியாகராஜன் வீடா? இங்கே, சுப்பு முதலித் தெருவில் ஒரு விபத்து. ஒரு சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டு விட்டன. அடிபட்டவன்......"

"மிகவும் வருந்துகிறேன். ஆனால், டாக்டர் ஊரில் இல்லையே......"

"ஊரில்...இல்லையா...? எக்ஸ்கியூஸ் மீ..."

டெலிபோனைக் கீழே வைத்த லீலா, தன்னைத் தானே மானசீகமாகப் புகழ்ந்து கொண்டிருந்தாள். எப்படிப்பட்ட யோசனை! கரு மேகங்கள் நிறைந்த ஆகாயத்தில் பளிரிடும் மின்னலைப் போல, கவலைகள் சூழ்ந்து கொண்டிருந்த அவள் மனதில் இந்த அற்புதமான யோசனை திடீரென்று தோன்றியதே! விபத்து நிகழ்ந்தால், வைத்தியம் செய்வதற்கு டாக்டர் தியாகராஜன் ஒருவர்தானா இருக்கிறார்? வேறு எவரையாவது கூப்பிட்டுக் கொள்ளட்டுமே?

நல்ல வேளை, அவள் பொய் கூறியதைத் தியாகராஜன் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. அவனுக்குத் தெரிந்தால் நிச்சயம் லீலாவைக் கோபித்துக் கொள்வான். எப்போது பார்த்தாலும் ஊருக்கு உழைத்துக் கொண்டிருந்தால் அவர்கள் எப்போதுதான் சந்தோஷமாக இருப்பது? ஐம்பத்தைந்து வயதிற்குப் பின்பா? காலா காலத்தில் சந்தோஷத்தை அனுபவிக்க வேண்டாமா?

"லீலா, டெலிபோனில் யாரோ கூப்பிட்டார்களே என்ன விஷயம்?"

சிந்தனை கலைந்த லீலா, உடை தரித்துக் கொண்டு வந்து நிற்கும் தியாகராஜனின் இந்தக் கேள்வியைக் கேட்டுத் திடுக்கிட்டாள். ஆனால், அவளுடைய சமயோசித புத்தி அவளைக் கைவிட்டு விடவில்லை.

"அட்வகேட் அனவரத நாயகம் பிள்ளையின் டெலிபோன் எண்ணும் நம்முடைய டெலிபோன் எண்ணும் ஒன்றேதானா......?"

"ஏன்? அப்படி யிருக்க முடியாதே..."

"இல்லை, அட்வகேட் அனவரத நாயகம் பிள்ளையை யாரோ டெலிபோனில் கூப்பிடப் போக, நம் வீட்டில் போன் ஒலித்ததே!"

லீலாவின் ஹாஸ்யத்தைத் தியாகராஜன் புரிந்து கொண்டு விட்டான். "ஓகோ, தவறான எண்ணோ......?" என்று கூறிய அவன் தொடர்ந்தான்: "என்ன, புறப்படலாமா...?"

"ஆகா, நான்தான் அப்பொழுதே 'ரெடி' என்று சொல்லி விட்டேனே......!"

தியாகராஜனும் லீலாவும் வீடு திரும்பும் போது இரவு மணி பத்தேகால் ஆகிவிட்டது. அவர்கள் உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக, லீலாவின் தந்தையிடமிருந்து போனில் அழைப்பு வந்ததாக வேலைக்காரன் கூறினான்.

கோட்டைக் கழற்றி லீலாவிடம் நீட்டிய தியாகராஜன் லீலாவின் தந்தை வீட்டிற்கு டெலிபோனில் பேசினான்.

"ஹலோ...யாரு பேசறது?"

"நான்தான் தியாகராஜன்."

"தியாகுவா? எங்கிருந்து பேசுகிறீர்கள்?"

"ஏன்? வீட்டிலிருந்துதான்!"

"வீட்டிலிருந்தா? நீங்கள் ஊரில் இல்லை என்று சொன்னார்களே?"

"நான் ஊரில் இல்லை என்றா? உங்களுக்கு யார் சொன்னது?"


"அப்போ, உங்களுக்கு விஷயமே தெரியாதா?"

"என்ன நடந்தது? சொல்லுங்கள்!"

லீலாவின் தந்தை ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். தியாகராஜனின் முகத்தில் சந்தோஷக் குறிகள் மறைந்து கவலைக் குறிகள் தோன்றலாயின. அதைக் கவனித்த லீலா பதறிக் கொண்டிருந்தாள்.

"சரி, நானும் லீலாவும் உடனே அங்கே வருகிறோம்" என்று கூறிப் போனைக் கீழே வைத்த தியாகராஜன் லீலாவிடம் கூறினான்: "லீலா, உன் தம்பி ராஜு, அவன் நண்பன் ஒருவருடன் நம் வீட்டிற்குச் சைக்கிளில் வந்து கொண்டிருக்கும்போது சுப்பு முதலித் தெருவில் மோட்டார் சைக்கிளில் அடிபட்டு மூர்ச்சையாகி விட்டானாம். அந்த நண்பர் உடனே நம் வீட்டுக்குப் போன் செய்தாராம். ஆனால், நான் ஊரில் இல்லை என்று யாரோ பதில் கொடுத்தார்களாம்! அப்புறம், வேறு ஒரு டாக்டருக்குப் போன் செய்து, அவர் சற்று நேரம் கழித்து வந்து அவனுக்குச் சிகிச்சை செய்தாராம். அதற்குள் அதிக ரத்தம் வீணாகி விட்டதாம். மூன்று மணி நேரத்திற்குப் பின், சற்று முன்புதான் ராஜு கண் விழித்தானாம். அவன் நண்பர் போன் செய்தது எந்த டாக்டரின் வீட்டுக்கோ? நாம்தான் ஐந்தரை மணிக்கு இங்கு இருந்தோமே? சரி, நாம் உடனே சென்று ராஜுவை......"

வாக்கியத்தை முடிக்காமலேயே நாற்காலியிலிருந்து எழுந்த டாக்டர் தியாகராஜன், தன் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குலுங்கக் குலுங்க லீலா அழுவதைக் கண்டு திகைத்து நின்றார்!





தஞ்சை ஜில்லா ஸ்ரீ சத்தி விலாஸ் பஸ் சொந்தக்காரரான ஸ்ரீ ஜீ. வீரப்ப பிள்ளை அவர்களின் குமாரத்தி செள. கிருஷ்ண வேணிக்கும், சென்னை ஸ்ரீ என். ஆராவமுதம் பிள்ளை பி. ஏ. அவர்களின் குமாரன் சிரஞ்சீவி ஏ. தம்பிராஜுக்கும் சமீபத்தில் வெகு விமரிசையாக திருமணம் நடந்தேறியது. அந்தத் திருமணக் காட்சிகளை இவ்விரு பக்கங்களிலும் காணலாம். வாழ்க, மணமக்கள் !



# எங்கள் வீட்டு லக்ஷ்மி

இந்திரா நடராஜன்

அன்று சாயங்காலம் வழக்கத்துக்கு மாறாகச் சற்று முன்பாகவே ஆபீஸிலிருந்து திரும்பி விட்டேன். எப்பொழுதும் மலர்ந்த முகத்துடன் என்னை வரவேற்கும் என் மனைவி பானு அன்று வீட்டில் எந்த அறையிலும் காணவில்லை. ஒரு வேளை எங்காவது வெளியில் புறப்பட்டுப் போய் இருப்பாளோ என்று சமையற்காரனைக் கேட்கப் பின் பக்கம் சமையலறையில் பார்த்தால் அதுவும் காலியாயிருந்தது. வீட்டில் எல்லோரும் ஒரே மட்டாக எங்கு சென்றிருப்பார்கள் என்று புரியாமல் தோட்டத்தில் தேடிக் கொண்டு போனேன். தோட்டத்தின் கடைசியில் சுவர் ஓரமாக ஒரு சிறு கும்பல் நின்று கொண்டிருந்தது. ஏதாவது பாம்பை அடித்து அதை வேடிக்கை பார்த்துக் கொண்டு எல்லோரும் நின்றிருக்கிறார்களோ என்று விசாரிக்க அருகில் சென்று பார்த்தேன். பானு பிரமாதமாக ஏதோ கணக்குப் போட்டு இன்ஜினியருக்கு மேல் பிளான் போட்டுக் கொண்டிருந்தாள். தோட்டக்காரன் மண் வெட்டியும் கையுமாக நின்றான். சமையல்காரர் ஒரு பக்கம் குழி தோண்டிக் கொண்டிருந்தார். வேலைக்காரி கூடையில் மண்ணை எடுத்து ஒருபுறம் கொட்டிக் கொண்டிருந்தாள். அவள் நான்கு வயதுப் பெண் கூட ஏதோ ரொம்பப் பெரிய வேலையில் ஈடுபட்டிருப்பவள் போல் குப்பையைப் பொறுக்கி அப்பால் போட்டுக் கொண்டிருந்தாள்.

நான் அதிசயத்துடன் பானுவை "என்ன பானு, ஏதாவது கட்டிட வேலை நடக்கப் போகிறதா? என்ன விசேஷம்?" என்று வினவினேன். "ஒன்றுமில்லை, நான் மாடு வாங்குவதாக இருக்கிறேன். அதற்குக் கொட்டகை போடுகிறோம்" என்றாள் நிதானமாய். "ஏது! நம் வீட்டிற்கா! பசுவா? எப்பொழுது இந்தத் தீர்மானம் ஆயிற்று? நமக்கு எதற்காக இப்பொழுது பசு வேண்டும்? அதெல்லாம் நம்மால் பார்த்துச் சரியாய்க் காப்பாற்ற முடியாது. நமக்கு அது ஒன்றும் தெரியவும் தெரியாது" என்றேன்.

"இந்தாங்கோன்னா, அபசகுனம் மாதிரி லக்ஷ்மி (பசு) வாங்குவதற்கு வேண்டாமென்று சொல்ல வேண்டாம். அதெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் சும்மா இருங்கள்" என்றாள்.

"ஆமாம் சாமி, ஒரு பசு நம் வீட்டுக்கு இருப்பது ரொம்ப நல்லதுங்க" என்று அம்மாவுடன் ஒத்துப் பாடினான் தோட்டக்காரன்.

"எல்லாம் அது பார்த்துக் கொள்ளும்." இது வேலைக்காரி பொரிசு. "சரி, எப்படி வேண்டுமானாலும் செய்யுங்கள். பிறகு நம்மை ஒன்றும் தொந்தரவு செய்யக் கூடாது" என்றேன். "உங்களுக்கு என்ன சிரமம் இருக்கப் போகிறது? எல்லாம் நல்ல பாலும், தயிரும், காப்பி சாப்பிடும்பொழுது அப்பொழுது தெரியும். நீங்கள் தான் எல்லாம் பிரமாதமாய் நடத்துவதாக எல்லோரிடமும் சொல்லிக் கொள்வீர்கள்" என்றாள் பானு.

"எனக்கு அந்தப் பெருமையே வேண்டாம். நீ ஒன்றும் என் காதில் போடாமலிருந்தால் தேவலை" என்று அப்பால் நகர்ந்தேன். இரவு ஏழரை மணிவரை தோட்டத்தில் விளக்கை வைத்துக் கொண்டு வேலை மும்முரமாக நடந்தது. ஒருவரும் அதுவரை வீட்டுக்குள் வரவில்லை.

மறுநாள் காலை தோட்டக்காரன் ஒரு கை வண்டியில் மூங்கில், ஓலை, கயிறு இன்னும் சில சாமான்களை ஏற்றிக் கொண்டு பின் பக்கம் கொண்டு வந்து நிறுத்தினான். பானு ஓலைகளையும் மூங்கில்களையும் எண்ணி வாங்கிக் கொண்டாள். கூலி கொடுப்பதற்கு ஐந்து நிமிஷம் தகராறு நடந்து பின் ஓய்ந்தது.

நான் அன்று சாயந்திரம் வீட்டுக்கு வந்தபோது கொட்டகை போட்டு முடிந்தாயிற்று. ஆனால் ஒரு பசுவை அதற்குள் பிரம்மப் பிரயத்தனம் செய்தால் கூட நிறுத்த முடியாது. அவ்வளவு சிறிய கொட்டகை. பானு எப்பொழுதுமே ரொம்பச் சிக்கனம். அதை இந்த விஷயத்திலும் காண்பித்து விட்டாள். நான் ஒன்றும் சொல்லவில்லை. அவளாக என்னிடம் வந்து "இதோ பாருங்கோன்னா கொட்டில் ரொம்ப மலிவாய்ப் போய் விட்டது. பத்து ரூபாயில் முடித்து விட்டேன்" என்றாள். "ஆமாம், இதற்குள் ஒரு மாடு நுழையுமா?" என்று கேட்டேன். "நன்றாய்ச் சொன்னீர்கள், நம் இருவருக்கு ஒரு குட்டைப் பசுதான் வாங்கப் போகிறது. அதற்கு இது போதாதா!" என்றாள். "சரி உனக்குத் தெரியாததா?" என்று கூறினேன்.

பின்பு இரண்டு நாட்களுக்கெல்லாம் நான் ஒரு கலியாணத்துக்குப் போய்த் திரும்பி வருகையில் வாசல் வராந்தாவில் ஒரு ஆள் பானுவுடன் நின்று பேசிக் கொண்டிருந்தான். அரைக்கால் நிஜாரும் கிராப்புத் தலையுமாய். என்னைப் பார்த்தவுடன் பல்லை இளித்தான். "நீ யார் அப்பா?" என்றேன். "அம்மா மாடு வாங்கவேண்டுமென்று சொல்லிச்சு. நம் வீட்டு வேலைக்காரியிடம் சொல்லி வரச் சொன்னாங்க. பார்த்துப் போகலாமென்று வந்தேன்" என்றான். "நீ மாடு விற்பவனா?" என்று கேட்டேன். "இல்லீங்க,

நான் பால் வியாபாரம் செய்யறேனுங்க. நமக்குப் பசுவைப் பற்றி ரொம்ப அனுபவமுங்க. ஏதோ அம்மா கூப்பிட்டனுப்பிச்சதினாலே என்ன விசயமுன்னு பார்க்க வந்தேன். என்னை ஒரு நல்ல மாடு பிடிச்சுக் கொடுக்கச் சொன்னுங்க'' என்ருன்.

'' ஆமாம், இப்பொழுது பசு விலைக்கு வருகிறதா?'' என்றேன்.

'' அதெல்லாம் திருவொற்றியூர், தாம்பரம், பல்லாவரம் எல்லா இடமும் போய்ச் சுத்திப் பார்த்துக்கிட்டு வரணும். உங்களுக்கு என்ன மாதிரி பசு வேண்டுமோ அப்படிப் பிடித்துக் கொடுக்கறேனுங்க'' என்று பதில் சொன்ஞன். '' இதோ பாரப்பா. எங்களுக்கு ஒரு குட்டைப் பசு வேணும். வேளைக்கு நாக்கால் படி பால் இருந்தா போதும். விலை சரசமாய் இருக்கணும்'' என்ருன் பானு.

'' உங்களுக்கு எப்படி வேணுமோ அப்படி வாங்கித் தரேன்!'' என்ருன் பால்காரன்.

'' அம்மா கேட்கிற மாடு என்ன விலையாகும்?'' என்று கேட்டேன்.

'' அது ரொம்ப கம்மிங்க. இன்னிக் கெல்லாம் இருந்தா 100-அல்லது 125-க்கு மேலே போகாது'' என்ருன்.

பானு, '' அவ்வளவு இருக்குமா?'' என்ருன்.

'' அதைவிடக் குறைச்சலா இருந்தா நான் வாங்கித் தரேன் அம்மா. நீங்க நான் மாடு வாங்கிக் கொடுத்த அப்புறம் சொல்லப் போறீங்க. என்னை என்னிக்கும் மறக்க மாட்டீங்க. 'பரமசிவம், ஒரு கப் காப்பி சாப்பிட்டுப் போ'ன்னு கூப்பிட்டுக் காப்பி கொடுப்பீங்க'' என்ருன்.

''சரி, அப்போ நாளைக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்து தகவல் சொல்கிருயா?'' என்று பானு கேட்டாள்.

'' ஓ, நான் இப்பொழுது நேரே சைக்கிளில் ஏறித் தாம்பரம் போகிறேன். அங்கிருந்து எனக்குத் தெரிந்த ஆளைப் பல்லாவரம் கூட்டிண்டு போய், திரும்ப நாளை திருவொற்றியூரும் போய்ப் பார்த்து வந்துடறேனுங்க. தாம்பரத்திலிருந்து பல்லாவரம், திருவொற்றியூர் எல்லாம் போய் வர ஒரு பத்து ரூபாய் கொடுங்க. பாக்கி மாடு தீர்மானம் பண்ணின அப்புறம் பார்த்துக் கொள்ளலாம்'' என்று கேட்டான். '' எதற்கு இப்பொழுது பணம்? மாடு வாங்கின பிறகு கொடுக்கிரேும்'' என்று சொன்ஞன் பானு.

இதற்குள் நான் அவனிடம் அவன் போய்ப் பார்த்து வர வண்டிச் சத்தம் கொடுத்தாக வேண்டுமென்று சொல்லிப் பத்து ரூபாயையும் பரமசிவத்திடம் கொடுத்தேன். அவன் அதை வாங்கிக் கொண்டு போய் இரண்டு நாட்களுக்கப்புறம் வந்து தாம்பரம், பல்லாவரம் இரண்டிடத்திலும் மாடு நம் தேவை போல் இல்லை என்றும், திருவொற்றியூரில் ஒரு நெல்லூர்ப் பசு இருப்பதாயும் விலை 250 ரூபா யென்றும் வேளைக்கு ஒன்றரைப் படி பால் கொடுக்கு மென்றும் சொன்ஞன்.

பானு பெரிய யோசனையில் ஆழ்ந்து கடைசியில் அந்த நெல்லூர்ப் பசுவை வாங்கச் சொல்லிச் சம்மதம் தெரிவித்தாள்.

'' ஆமாம், அவ்வளவு பால் நமக்கு எதற்கு?'' என்றேன். '' ஏன், அதிகப் பாலை விற்றுவிட்டால் போகிறது'' என்ருன் பானு.

'' பால் வியாபாரம் வேறு செய்யப் போகிருயா? யாருக்கோ?'' என்றேன். '' என் சிநேகிதி கமலம் அன்றே சொல்லி விட்டாள், நம் வீட்டில் எவ்வளவு பால் மீந்தாலும் எடுத்துக் கொள்வதாக. நீங்கள் ஏன் கவலைப் படுகிறீர்கள்?'' என்று சமாதானம் சொன்ஞள். 'சரி நடக்கட்டும்' என்று மனசுக்குள் சிரித்துக் கொண்டேன்.

'' ஆனல் நெல்லூர்ப் பசு வந்தால் உன் கொட்டகைக்குள் கொள்ளாது. வெளியில் தான் கட்டி வைக்கணும்'' என்றேன். ''அதற்கென்ன பெரிசாய்ப் போட்டு விடச் சொல்றேன்'' என்ருன். பின்னுல் இன்னும் இருபது ரூபாய் பிடிக்கு மென்ற தோட்டக்காரன் மதிப்போடு மொத்தம் முப்பத்து ஐந்து ரூபாய் செலவில் கொட்டகை முடிந்தது. வியாழன் அன்று மாலை பரமசிவன் வந்து, அந்த நெல்லூர்ப் பசு விலை போய் விட்டதென்றும், அதே போல் நல்ல சுற்றுப் பசு 300 ரூபாயில் இருக்கிறதென்றும் சொன்ஞன். வேறு வழியில்லாமல் அதை வாங்கி விடலா மென்று தீர்மானம் செய்து வெள்ளிக் கிழமை அன்று பசு வருவதற்கு ஏற்பாடு ஆயிற்று.

பசுவை மத்தியானம் பன்னிரண்டு மணிக்கு மேல் இரண்டு ஆட்களுடன் ஓட்டிக் கொண்டு வந்தான். அதற்குக் குஞ்சலமும், கறுப்புக் (திருஷ்டி) கயிறும், ஜவந்தி மாலையும் அமர்க்களமாய்ப் போட்டுக் கூட்டிக் கொண்டு வந்தான். மாட்டைப் பார்த்தவுடன் பானுவின் முகம் இறங்கி விட்டது. எனக்கும் பெரிய ஏமாற்றமாகி விட்டது. மாடு எலும்பும் தோலுமாய், பஞ்சத்தில் அடிபட்டது போல் இருந்தது. கன்று அன்னை ஓட்டிக் கண்ணில் உயிர் வைத்துக் கொண்டிருந்தது.





மதுரை சௌராஷ்டிர உயர்தரப் பாடசாலையில் நவம்பர் 11-ம் அன்று மேற்படி பள்ளி நிர்வாகக் கமிட்டித் தலைவர் திரு கெ. எம். வி. கிருஷ்ணமாச்சாரியாரின் தலைமையில் வ. உ. சி. தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவின் போது கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாரின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து சில நிகழ்ச்சிகளைத் தொகுத்து நாடகமாக நடத்தினார்கள். அந்த நாடக நிகழ்ச்சியில் பங்கெடுத்துக் கொண்ட மாணவர்கள், ஆசிரியர்களை மேலே படத்தில் காணலாம்.

---

"இது என்னப்பா, காலும் உடலும் நாரை மாதிரி எலும்பெல்லாம் எண்ணலாம் போல் இருக்கிறதே! இதுவா 300 ரூபாய்?" என்று ஆச்சரியமும் கோபமுமாய்ப் பானு கேட்டாள்.

"என்னம்மா, ஒரேயடியாக அப்படிச் சொல்றீங்க! மாடு உயரம், இந்த நெல்லூர் ஜாதியே அப்படித்தான். இப்பத்தான் கன்று போட்டு இருபது நாளாச்சு. அதனாலேதான் மாடு இளைப்பு. கன்று கூட நாளானாத்தான் சதை போடும். அதோடு திருவொற்றியூரிலேயிருந்து வந்திருக்கு" என்று அவன் ஒரு போடு போட்டான். பானு வாயைத் திறக்கவில்லை. இப்பொழுதுதான் அவளுக்குத் தன் தப்பிதம் கொஞ்சம் தெரிந்தது. நான் "என்ன செய்வது. வாங்கியாயிற்று. நல்ல பால் சாப்பிடப் போகிறோம். அப்படித்தான் கஷ்டமாயிருக்கும்" என்று குத்தலாகச் சொன்னேன். பானு இதற்குள் பால் கறக்கும் பாத்திரம், தீனி வைக்கும் தொட்டி எல்லாம் வாங்கி வைத்திருந்தாள். அளப்பதற்கு ஆழாக்கு வாங்க மறந்து விட்டாள். பரமசிவம் தான் வாங்கிக் கொடுப்பதாகச் சொல்லி ஐந்து ரூபாய் வாங்கிக் கொண்டான். அவனுக்கு, மாடு வாங்கிக் கொடுத்ததற்காக 15 ரூபாயும் வாங்கி விட்டான். ஆனால் ஆழாக்குக்குக் கொடுத்த பணத்துக்கு இதுவரை ஆழாக்கும் வரவில்லை, பணமும் வரவில்லை. பானு கிணற்றில் கல் போட்டாற்போல் இருக்கிறாள்.

வருபவர்களிடமெல்லாம் பானு பெருமையாகப் பசுவைக் காண்பித்தாள். சிலர் அவள் எதிரில் ஒன்றும் சொல்லவில்லை. சிலர் மாடு ரொம்ப இளைப்பு, அழகு இல்லை, நெல்லூர்ப் பசுவே அதிக நாள் கறக்காது, தலை ஈத்து மாடு எப்பொழுதும் வாங்கக் கூடாது, இது பாயும் மாடு என்று அவரவர் அபிப்பிராயத்தைச் சொன்னார்கள். பசு தோட்டக்காரனையும், வேலைக்காரியின் பெண்ணையும் இரண்டு நாள் இடித்து விட்டது. அது தீனியே கண்ணால் காணாத பசுவானதால் எதைக் கண்டாலும் சாப்பிடப் பறக்கும்.


மாடு பரமசிவம் சொன்னது போல் வேளைக்கு ஒன்றரைப்படி கறக்கவில்லை. முக்கால் படி அல்லது ஏழு ஆழாக்கு தான் கறந்தது. பரமசிவம் பானுவிடம், "அம்மா நீங்கள் மூன்று வேளை தீனி வைக்க வேண்டும். நாம் காலை டிபன் சாப்பிடுவது போல் 6 மணிக்கு ஒரு தரம், பகல் 12 மணிக்கு, பிறகு சாயங்காலம் ஆறு மணிக்கு ஒரு தடவை ஆக ஒருநாளைக்கு மூன்று தடவை வைத்தால்தான் அது ஒன்றரைப்படி பால் கறக்கும்" என்றான். அதைப் போல் நான்கு நாள் வைத்தவுடன் பசு திடீரென்று எழுந்திருக்கவேயில்லை. எதையும் சாப்பிட மறுத்து விட்டது.

"டாக்டரை அழைத்துக் கொண்டு வரட்டுமா?" என்று பானுவைக் கேட்டேன். அவள் திரு திரு வென்று விழித்தாள். அதற்குள் பழைய பால்காரிவந்து, "அம்மா, மாடு வச்சுக்கிட்டுப் பார்த்தால் தானே அதன் கஷ்டம் தெரியும்? எங்களுக்கு எப்படி பின்னே கட்டுப்படி ஆகாமல் இருக்கிறது? நீங்கள் ஒரு நாள் சும்மா அதைவிட்டால் அதுவே தன்னால் தீனி தின்னும். இனிமேல் இரண்டு வேளை தீனி வைத்தால் போதும்" என்றாள். பிறகு நல்ல வேளையாய் அது வைத்தியம் செய்யாமலே, சரியாகி விட்டது. அது சரியாய்க் கறக்காவிட்டால் ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு காரணம் பானு கண்டு பிடித்து விடுவாள். "உங்களுக்குத் தெரியாது. எப்பொழுதும் இரண்டாவது, மூன்றாவது ஈத்துக்குத்தான் நிறையப் பால் இருக்குமாம்" என்பாள்.


"இப்பொழுது என்ன அவசரம்? அடுத்த ஈத்துவரை காத்திருந்தால் போகிறது. பசு நல்ல பசு. விலையும் சரசம்தான்" என்றேன். "உங்களுக்கு எப்பொழுதுமே இப்படித்தான் இடக்காகப் பேசத் தெரியும். நம்ம பசுவுக்கு ராஜகுழி இருக்கிறதாம். அது வந்த வேளை நாம் எப்படி இருக்கப் போகிறோம் என்று பாருங்கள்" என்று பேசுவாள். ஆனால் எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்தப் பசுவுக்குப் புத்தி அதிகம். இன்னும் பானு பசு வாங்கின பெருமை ஓயவில்லை.


நாள் முழுதும்
கவர்ச்சிகரமாய்
இருக்க
பியர்லைன்
ப்ரெஞ்சு லாவண்டர்
பிரிலியன்டைன்
இயற்கையான ப்ரெஞ்சு லாவண்டர் புஷ்பங்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. தனிச்சிறப்பும், கண்யமும் பெற அதை தினசரி விடாது உபயோகிக்கவும்.
பியர்லைன்
ப்ரெஞ்சு லாவண்டர்
தற்காலத்திற்கேற்ற, ஒரு லட்சியமான புத்துணர்ச்சியளிக்கும் சாதனம் ஸ்நானத்திற்குப் பின்னர் அதை உபயோகித்து நாள் முழுவதும் குளிர்ச்சியுடனிருங்கள்.
பியர்லைன்
ஓ-டி-கொலோன்
PEARLINE-PARIS LTD. P. O. Box No. 493, BOMBAY

# விச்ராந்தியாக இருங்கள்...







# டன்லப்பில்லோ





டன்லப் ரப்பர் கம்பெனி (இந்தியா) லிமிடெட்




"என் தொண்டை ரணத்தினால்
என்னால் விழுங்கவே முடியவில்லை"

ஆனால்

# பெப்ஸ்

அதை சமனமாக்கி குணப் படுத்தியது.




பெப்ஸ் தொண்டை மற்றும் மார்பு வலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை கரைக்கும் போதே இந்த ரசங்கள் ஆவியாக மாறி உங்கள் ஸ்வாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப் பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே நேராகச் சென்று வேலை செய்கின்றன. இதனால் தான் பெப்ஸை கண்ட ஜலதோஷமாயும், உலக பிரசித்திப் பெற்றும் விளங்குகிறது பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து அடைப்பை நீக்குவதுடன், இன்ப்ளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.




## PEPS

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள்
எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள் : தாதா & கம்பெனி, பார்க் டவுன்



# வாழ்வு மலர்ந்தது

கே. ஆர். கௌசல்யா

நிலவு பால்போல் பொழிந்தது. அதில் நனைந்து கொண்டிருந்தது இரவு. ஜன்னல் வழியாக வந்த நிலவின் கதிர்கள் சந்திராவின் மீது வந்து படிந்தன. அதனுடைய சிலிர்க்கும் குளிர்மையில் மெய்ம் மறந்த அவள் எழுந்து விளக்கை அணைத்து விட்டு ஜன்னலருகில் வந்து நின்று கொண்டாள். அறையின் ஜன்னலருகில் நின்று கொண்டால், கண்ணில் தெரியும்படியாக, எதிராக இருந்த மாடித் தாழ்வாரத்தில், திறந்த வெளியில் அவள் சகோதரி சுசிலா நின்று கொண்டிருந்தாள். அவளருகில் கைப்பிடிச் சுவரின் மீது ஒய்யாரமாக ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தான் அவளுடைய கணவன் ராமகிருஷ்ணன்.

"சுசி! இந்த வெண்ணிலவு எதற்காகக் காய்கிறது தெரியுமா? இனிய மலர் மணத்துடன் கூடிய இந்த மந்தமாருதம் யார் பொருட்டு வீசுகின்றது தெரியுமா? இன்பமயமான வாழ்க்கைக் கடலில் இணையில்லா மகிழ்ச்சியுடன் நீந்த அடியெடுத்து வைக்கும் நம் போன்ற இளம் உள்ளங்களுக்காகத்தான். இந்த மோகனமான வேளையில், ஆனந்தமாக அளவளாவிப் பொழுதைப் போக்காமல் என்ன புத்தகமும் மண்ணும் கட்டியும் வேண்டியிருக்கு! பெரிய ஆராய்ச்சி செய்பவன் போல் மூழ்கிக் கிடந்தாயே அந்த நாவலில்......" என்று சுசிலாவின் அழகிய கன்னத்தை அன்புடன் வருடியவாறே கூறினான் அவள் கணவன் ராமகிருஷ்ணன்.


"இவ்வளவு அழகாக வர்ணனை செய்து பேசத் தெரியறதுக்கு நீங்கள் சினிமாவுக்கு வசனம் எழுதினால் நல்ல வரும்படி கிடைக்கும்!" என்று கூறிக் கலகல வென்று வாய் விட்டு நகைத்தாள் சுசிலா. அப்போது அவள் பார்வை ஒருமுறை சுற்றிச் சுழன்றது. தன்னையு மறியாமல் அவர்களின் பக்கம் பதித்த பார்வையைத் திருப்ப முடியாமல் ஊமைப் பெண்ணின் மன நிலையை யொத்த சங்கடத்துடன் அவர்கள் பக்கமே வெறித்து நோக்கியவாறு நின்ற சந்திராவின் முகத்தைச் சுசிலாவின் கண்கள் நன்றாகப் பார்த்து விட்டன போலும்!

"இங்கே பனி கொட்டுகிறது!... உடம்புக்கு ஆகாது! உள்ளே போவோமா!" என்று தன் கணவனிடம் அவள் சொல்லிய போதுதான் சந்திராவுக்குத் தன் தவறு புரிந்தது. சட்டென்று தலையை உள்ளே இழுத்துக்கொண்டு கட்டிலின்மேல் போய்த் 'தொப்' பென்று விழுந்தாள். அவள் உள்ளத்திலே கரை புரண்டோடிய உணர்ச்சிப் பெருக்கு தொண்டையை அடைத்தது. அவள் காதுகளில், சற்று முன்பு ராமகிருஷ்ணன் கூறிய வார்த்தைகள் எதிரொலித்தன. "......இந்த வெண்ணிலவு எதற்காகக் காய்கிறது தெரியுமா? இனிய மலர் மணத்துடன் கூடிய

இந்த மந்தமாருதம் யார் பொருட்டு வீசுகின் றது தெரியுமா?.......இன்ப மயமான வாழ்க் கைக் கடலில், இணையில்லா மகிழ்ச்சியுடன் நீந்த அடியெடுத்து வைக்கும் நம் போன்ற இளம் உள்ளங்களுக்காகத்தான்...'' சந்திரா வின் உதடுகள் அதற்கு மாறாக வேறொன்றை முணுமுணுத்தன. ''இல்லை...இல்லை...அதற் காக மட்டுமில்லை. உலகத்தின் இந்த வனப்பு களை, இயற்கை யரசியின் இணையற்ற எழிலை அனுபவியாமல், அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் ஏங்கும் என் போன்ற இளம் உள்ளங்களில் மட்டற்ற துயரத்தையும், ஏக் கத்தையும் அள்ளித் தெளிப்பதற்காகவும் தான்.. ...'' சந்திராவின் கண்களில் 'குபுகுபு' வென்று கண்ணீர்ப் பிரவாக மெடுத்தது.

★

விவாகமாகிச் சில வருடங்களுக்குள் ளாகவே சந்திராவின் வாழ்க்கையை வறண்ட பாலைவனமாக்கி விட்டுச் சென்று விட்டான் அவள் கணவன். எத்தனை எத்தனையோ எதிர் கால இன்பக் கனவுகள் கண்டு பூரித்துக் கொண்டிருந்த அந்த இளம் வயதிலே அவை யொன்றும் நிறைவேறுமலேயே அவள் இளமையின் இன்ப ஜோதி அணைந்து விட்டது; வாழ்வின் வஸந்தம் பறந்து மறைந்து விட்டது. 'தாம்பத்ய வாழ்க்கை யின்பம்' அவள்வரை வறண்ட பாலைவனமாகி விட்டது. எத்தனையோ பெண்கள் விவாகமே ஆகாமல் நிற்கும் அந்த இளம் வயதில் தன் பெண் சந்திராவின் இன்ப வாழ்வுக்கு அஸ்த மனம் ஏற்பட்டு விட்டதை எண்ணிக் குமுறிக் குமுறி யழுதாள் தாய் சாவித்திரி. பசுமையி லேயே பட்டுவிட்ட அந்த இளம் கொடியின் இருண்ட வாழ்வைப் பார்த்துக் கலங்கி மங்கும் தன் கண்களுக்குத் தெளிவை ஊட்டத் தன் இரண்டாவது பெண் சுசீலா வைத் தான் நம்பினாள் சாவித்திரி.




'' அவர்கள் எப்பொழுதுமே இப்படித்தான். வாயாலே சௌக்கியமா என்று கேட்டுக் கொள்வதே கிடையாது!''

கன்னிப் பருவமெய்தி நின்ற சுசீலாவின் கரம் பற்றி அவளுக்கு மங்கல வாழ்க்கையின் உதயத்தை உண்டாக்கினான் ராமகிருஷ்ணன். 'தன் இரண்டாவது பெண்ணையும், மாப் பிள்ளையையும் தன்னுடனேயே, தன் அகத்தி லேயே வைத்துக் கொள்ள வேண்டும்' என்ற சாவித்திரியின் விருப்பத்திற்கு எந்தவிதமான தடையும் சொல்லவில்லை ராமகிருஷ்ணன். சுசீலாவின் விவாகத்துக்குப் பிறகு சாவித்திரி யின் தாய் உள்ளப் போக்கில் ஒரு குறிப்பிடத் தக்க மாறுதலைக் கண்டாள் சந்திரா.

முன்போல் இப்போதெல்லாம் சாவித்திரி சந்திராவை அன்புடன் அணைத்துக் கொண்டு அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றிக் கண்ணீர் வடிப்பதில்லை. 'பச்'சென்றிருக்கும் தன் இரண்டாவது பெண்ணின் வாழ்க்கையின் சுவையைக் கண் குளிரப் பார்க்கும் மகிழ்ச்சி யிலேயே அவள் பூரித்து மிதக்க ஆரம்பித்து விட்டாள்.

''சுசீலா! அப்போதே மூதல் உன் அகத் துக்காரர் கூப்பிட்டுண்டே யிருக்கார்! நீ இங்கே என்னென்னவோ வேலை செய்ந் திண்டிருக்கயே! போ, சீக்கிரம்! இந்த வேலையையும், தொல்லையையும் நானும், சந்திராவும் பார்த்துக் கொள்ள மாட்டோமா என்ன? எங்களுக்கு அதைவிட வேறு என்ன வேலை?'' என்பாள் சாவித்திரி. 'ராம கிருஷ்ணன் 'என்' என்பதற்குள் எண்ணெயாக ஓடி அவன் மனத்தை ஒரு சிறிதும் கோணச் செய்யாமல் தன் இரண்டாவது பெண் ஆனந்த வாழ்க்கை நடத்த வேண்டும்! அதற்காகத் தானும் தன் மூதல் பெண்ணும் என்ன பாடு வேண்டுமானாலும் படலாம்!' என்ற அவள் உள்ளக் கருத்தை நன்றாகப் புரிந்து கொண்டு விட்டாள் சந்திரா. 'ஆமாம்! 'விதவை' என்ற சொல்லுடன், யாருக்கும் மதிப்புத் தோன்ற வகையில், வாழ்க்கை நடத்தும் நான் என் உடலை இனி இந்த வீட்டுக்காகவும், என்னைப் போலல்லாமல், சுபமாக, மங்கல வாழ்க்கை நடத்தும் என் சகோதரி சுசீலாவுக்காகவும், செருப்பாகத் தேய்த்து உழைக்கத்தான் வேண்டும்!' என்று எண்ணி ஏங்கிக் கண்ணீர் வடிப்பாள் சந்திரா.

அன்றொரு நாள். இருட்டி வெகு நேர மாகியபின், எங்கெங்கோ உல்லாசமாகச் சுற்றி யலைந்து விட்டு வீட்டுக்கு வந்தனர் சுசீலாவும், ராமகிருஷ்ணனும். ''சந்திரா! அவாளுக்குச் சாப்பாடு போடு! பாவம்! ரொம்பக் களைப்பாக இருக்கும்! எங் கெங்கோ அலைஞ்சுட்டு வந்திருக்கா! சீக்கிரம் கை கால் அலம்பிண்டு இங்கே வாடயம்மா சுசீ!'' என்று கூறி மாடிக்குச் சென்ற சாவித்திரி, சில நிமிடங்களுக் கெல்லாமே ஒரு கட்டிக் கற்பூரத்தை ஒரு தட்டில் வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். ''மாப் பிள்ளை, சுசீலா! கொஞ்சம் இப்படிச் சேர்ந்து நில்லுங்கோ! ஒரு நிமிஷம்! சுற்றிப்போட்டு விடுகிறேன்!'' என்று மிகவும் பெருமையுடன் கூறிக் கற்பூரம் சுற்றினாள், சாவித்திரி.



நவம்பர் 29ல் புரசவாக்கம் ஆர்ட்ஸ் அகாடமி சபையின் ஆண்டு விழா "கல்கி" ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. மதுவிலக்கு மந்திரி ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலம் மேற்படி சபையில் நடத்தும் சங்கீத கலாசாலையில் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்குப் பரிசு வழங்கினர். பிறகு குமாரி ரேணுகா தேவியும், குமாரி கிருஷ்ண குமாரியும் சிறப்பாகப் பரத நாட்டியக் கச்சேரி செய்தார்கள். குமாரிகளின் நடனத் திறமையையும் நடன ஆசிரியர் ஸ்ரீ பி. வி. செல்லப்பாவையும் சபையோர் பாராட்டினார்கள். அகாடமியின் தலைவர் இசையரசு ஸ்ரீ எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களையும் ஸ்ரீமதி ஜோதி வெங்கடாசலத்தையும் மேலேயுள்ள படத்தில் காணலாம்.

---

"என்ன மாமி! இதென்ன! நாங்கள் சின்னக் குழந்தைகளா? அதுவுமில்லாமல் இப்போ திருஷ்டி கழிக்கும்படி நாங்க என்ன செய்து விட்டோம்!" என்று கூறிவிட்டுக் கலகலவென நகைத்தான் ராமகிருஷ்ணன்.

"இல்லே சாயங்கிரம் நீங்க வெளியே கிளம்பறபோது பக்கத்து வீட்டு மாமி, யாரிடமோ 'தம்பதிகள்னா இப்படின்னா இருக்கணும்! சரியான, அழகான பொருத்தமான ஜோடி!' என்று உரத்த குரலில் யாரிடமோ சொல்லிண்டிருந்தாள்! எனக்கு உடனே 'சுருக்'கென்றது. நீங்க ரெண்டு பேரும் சௌக்கியமாக நல்லபடியா வீட்டுக்கு வரணுமேன்னு மனசு அடிச்சிண்டுது" என்று பெருமை பொங்கிய குரலில் கூறினாள்.

சமையற்கட்டு வாசற்படி யோரமாக நின்றிருந்த சந்திரா, வெறிச் சென்றிருக்கும் நெற்றியும், அள்ளி முடியப் பட்டிருந்த கூந்தலுமாக உள்ள தன் தோற்றத்தையும், பின்னித் தொங்க விடப்பட்டு, வாசம் கமழும் ஒரு சுமை புஷ்பம் சூட்டப்பட்டு நெற்றியில் அழகிய திலகத்துடன் நின்றிருக்கும் சகோதரி சுசீலாவையும் மனத்திலே ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டாள். "சந்திரா! நீ போய்ப் படுத்துக்கோ! நான் அவருக்கும் சாப்பாடு போட்டுட்டு, நானும் சாப்பிட்டுட்டு வந்துக்கறேன்...நீ எங்களுக்காக நிற்க வேண்டாம்!...ம்...வாங்கோ சாப்பிட" என்று தன் கணவனைச் சுசீலா மகிழ்ச்சியுடன் அழைத்தபோது சந்திராவின் துயரமும், ஏக்கமும் பன்மடங்காகப் பெருகியது.

'ஊராரை யெல்லாம் சொல்லுவானேன், கண் திருஷ்டி போட்டு விடுவார்கள் என்று! மங்கல வாழ்வை இழந்து ஏங்கி நிற்கும் என் கொள்ளிக் கண்கூடத்தான் அவர்களுக்குப் பட்டு விடும்!' மாடியேறித் தன்னறைக்குச் சென்ற சந்திரா தன் துயர் தீர ஒரு மூச்சு அழுது தீர்த்தாள். தான் அந்த வீட்டில் ஒரு பாரமாக இருக்கிறாள். சுசீலா – ராமகிருஷ்ணனின் ஆனந்த ஆதரிசத் தாம்பத்ய வாழ்க்கையைக் கண்டு ஏங்கி, வெம்பி, வாடித் துயரப் பட்டுக் கொண்டு தான் இருப்பதோடு, அவர்களுடைய தனிமைக்கும் இன்பத்துக்கும் இடைஞ்சலாய் இருப்பதாக அவர்களும் நினைக்கிறார்கள் என்பதை எண்ணியபோது அவள் உள்ளம் தாங்கொணாத துயரத்தில் குமைந்து குமுறியது.

நீண்ட நேரமாக அழுது கொண்டிருந்த தன் விளைவாக சந்திராவுக்குத் தலை கனத்தது. தலையணை முழுவதும் கண்ணீரினால் தெப்பலாக நனைந்திருந்தது.

அன்று மாலை. அன்றுதான் சந்திராவின் கணவன் இறந்து நான்கு ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. சந்திரா அந்தத் துயரம் தரும் நாளை எண்ணி மாடியில் தன்னறையில் உட்கார்ந்து ஏக்கத்துடன் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தாள்.

யாரோ வேகமாக மாடியேறி வரும் சத்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள் அவள். கோபத்துடன் ஏதோ முணு முணுத்தவாறே தட தடவென்று மாடியேறி வந்து தன்னறைக்குச் சென்றான் ராமகிருஷ்ணன். கீழே தாழ்ந்த குரலில் சகோதரி சுசீலாவும், தாய் சாவித்திரியும் ஏதோ பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதை யறியும்

ஆவலில் மெல்ல மாடிப்படி யருகில் வந்து மறைந்தவாறு நின்று கொண்டாள் சந்திரா.

“சுசீலா! உனக்கு இத்தனை பிடிவாதம் கூடாது. அவர் அவ்வளவு வருந்தி யழைக்கும் போது உனக்கென்ன பிகு வேண்டிக் கிடக்கிறது? பார்! இப்போ அவர் கோபித்துக் கொண்டு மாடிக்குப் போய் விட்டார்......”

“அதைப் பற்றி அக்கறையில்லை அம்மா! எனக்கு இன்று வெளியே போக விருப்பமில்லை. அவ்வளவுதானே? அவர் கூப்பிட்ட போது மற்ற தினங்களி லெல்லாம் நான் ஆக்ஷேபனை சொன்னேனா? இன்று நம்முடைய சந்திராவின் கணவர் இறந்த தினமில்லையா? அவளுக்குத்தான் தன் மங்கல வாழ்வை இழந்த—தன் வாழ்க்கையிலேயே ஒரு மறக்க முடியாத துயரம் தோய்ந்த ஒரு நாளாக இருக்கும் இன்றையதினம், என்னதான் நான் அவளைப்போல் வருத்தம் பாராட்டிக் கொண்டு உட்கார்ந்திரா விட்டாலும் மகிழ்ச்சியுடன் துள்ளித் திரியாமலாவது இருக்கலா மல்லவா? இன்னொன்று. நான் சொல்லுகிறேன் என்று கோபித்துக் கொள்ளாதே! உனக்கு நாங்கள் இருவரும் இரண்டு கண்கள் போன்றுதானே! எங்கள் இருவரது இன்ப துன்பங்களையும் நீ ஒன்றாகத்தானே கருத வேண்டும்? உன்னுடைய மூத்த பெண்ணினால் உனக்கேற்பட்ட துயரத்தை என் மகிழ்ச்சியைக் கண்டு நீ மறக்க முயலுகிறாய்! அது நியாயம்தான்! ஆனால் அதே சமயம், அந்தத் திருப்தியில் நீ சந்திராவின் உள்ளக் குமுறலைப் பற்றிச் சிறிது மறந்து விட்டாய். ஆனால் அவளுடைய உடன் பிறந்த சகோதரியாகிய எனக்கு அப்படியல்ல. என்னைப் பெற்றெடுத்த தாயாகிய உனக்கும் நான் மனநிறைவை ஊட்ட வேண்டும்; என் கைப்பிடித்த கணவருக்கும் மனம் கோணாமல் நடக்க வேண்டும். அதே சமயம் என் சகோதரியாகிய அவளுக்கு, இளம் பிஞ்சாக இருக்கையிலேயே வெம்பிவிட்ட காயை யொத்த உள்ளத்துடன் ஏகாங்கியாய் வாழ்க்கை நடத்தும் அவளுக்கு, என்னால் அவள் இழந்த வாழ்வை மீட்டுத் தர முடியா விட்டாலும், அவளுடைய அத் துயரத்தை அதிகப் படுத்தாமலாவது இருக்க வேண்டாமா? சாதாரண நாட்களிலேயே கூட அதற்காகவேதான் நான் அவள் பார்க்கும் சமயங்களிலே என் கணவருடன் சிரித்துப் பேசுவதும் கொம்மாள மடிப்பதுமாக இராமலிருக்க முயற்சி செய்கிறேன். அவை அவள் நொந்த உள்ளப் புண்ணைக் கீறி எத்தனை பிளவு உண்டாக்கும் என்ற எண்ணத்தில்!......”

“சுசீலா! என் கண்ணே! உனக்குள்ள விவேகம் கூட எனக்கிராமல் போய் விட்டதே!” என்று மட்டற்ற வாத்சல்யத்துடன் அவளை யணைத்துக் கொண்டு கண்ணீர் வடித்தாள் சாவித்திரி.

சந்திராவின் கண்களினின்றும் ‘பொல’ ‘பொல’ வென்று கண்ணீர்த் துளிகள் உதிர்ந்தன. தன் உள்ளத்து உணர்ச்சியை மிகவும் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, “சுசீலா!” என்று சர்வ சாதாரணமாக அழைத்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

“இதோவந்து விட்டேன், அக்கா!” என்று கூறிக் கொண்டே அவள் பின்னாலேயே ஓடி வந்தாள் சுசீலா.

தன் அறைக்குச் சென்றவுடன் அவள் சுசீலாவின் தலையை அன்புடன் வருடியவாறே, “சுசீ! உன் அகத்துக்காரர் இப்போ கோபத்துடன் மாடிக்கு வந்தாரே! ஏன்? நீ ஏதாவது அவரிடம் முகம் சுளித்துக் கொண்டாயா என்ன?” என்று குழைவும், பாசமும் இழைந்திருந்த குரலில், ஒன்றுமறியாதவள் போல் கேட்டாள், ‘பட’ ‘பட’ வென்று துடிக்கும் தன் நெஞ்சை ஆசுவாசப் படுத்தியவாறே.

“இல்லை அக்கா! வந்து...” என்று தயங்கிய சுசீலா மெள்ள நடந்த விஷயத்தைக் கூறி முடித்தாள். “அடி அசட்டுப் பெண்ணே! நீ சந்தோஷமாக இருந்தால் அதுதான் எனக்கும் மகிழ்ச்சி! நான்தான் கருகிய மொட்டாகி விட்டேன்! உன் வாழ்வாவது பூரணமலர்ச்சியடையட்டும். உன் மணம் மிக்க வாழ்க்கையைக் கண்டால் என் உள்ளம் ஒரு போதும் ஏக்கமடையாது. இனியாவது உன் அசட்டு எண்ணத்தை விடு. உன் கணவர் மனம் கோணாமல் நடக்க வேண்டும் தெரிந்ததா? அதுதான் எனக்கு மகிழ்ச்சியை ஊட்டும்” என்று கூறியபோது சந்திராவின் கண்களைக் கண்ணீர்ப்படலம் மறைத்து விட்டது. பக்கத்திலிருந்த சுவாமி படத்திற்கு அருகிலிருந்த குங்குமத்தை எடுத்துத் தன் சகோதரி சுசீலாவின் நெற்றியி லிட்டாள் சந்திரா.

சுசீலாவின் அழகிய நெற்றியில் அது ஜிகினாத்துகளுடன் பளபளத்தபோது, சந்திராவின் உள்ளத்தில் அதுகாறும் படர்ந்திருந்த பொறாமை என்னும் கறையான் ‘பொல பொல’ வென்று உதிர்ந்தது.


கோடம்பாக்கம்  வட பழனியில்

21-12-1953 திங்கள் கிழமை காலை

ஆருத்ரா தரிசனம்



குழந்தை
அவைகளை
விரும்புகிறது

ஜே. பி. மங்காராமின்

**NOURISHING**

நரிஷிங் பிஸ்கட்ஸ்



நரிஷிங் பிஸ்கட்டுகளை குழந்தைகள் ருசி பார்க்கட்டும். அவைகளில் அதிகமான மனங்கவர் மணமும் இனிய ருசியும் ஆரோக்கிய மளிக்கும் வைடமின்களும் அடங்கியிருப்பதால் அவைகளை அவள் மிகவும் விரும்புகிறாள்.

தரமேன்மை பெற்றது
வைடமின்கள் மிகுதியானது

ஜே. பி. மங்காராம் & கோ., குவாலியர்

மதராஸ் ஏஜண்டுகள்:

நேஷனல் ஏஜன்ஸீஸ், 1/94, ராமசாமி தெரு, மதராஸ்-1

NAS M. 1

# MARGO SOAP

*The Genuine*

**NEEM OIL SOAP**
with natural
CHLOROPHYLL





## மார்கோ ஸோப்

வாசனை நீக்கப் பெற்ற வேப்பெண்ணெயிலிருந்து ஒரு விசேஷ முறைப்படி தயாரிக்கப்படுவது. அதன் அபரிமிதமான கிருமி நாசன நுரை அழுக்கை அகற்றி, சருமத்திலுள் புகுந்து நன்கு சுத்தம் செய்யும். சருமத்திற்குப் புஷ்டியும் மென்மையும் தரும். அபூர்வ மணம். நுட்பமான சருமத்திற்கும் ஹானியற்றது.

**A CALCHEMICO PRODUCT**

மதராஸ் ஆபீஸ்:
5/149, பிராட்வே, மதராஸ்-1





# MYERS

AUTOMATIC
**ELECTRIC PUMPS**

எக்காலத்திலும் அபரிமிதமான தண்ணீர் சப்ளைக்கு லாகவமாக வேலை செய்யும் பிரக்யாதி வாய்ந்த மயர்ஸ் ஸெல்ப்-ஆயிலிங் ஆழக் கிணறு பம்புகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

•

வாட்டர் சப்ளை
ஸ்பெஷலிஸ்ட்ஸ் லிட்.
45, தம்பு செட்டி தெரு
மதராஸ்-1



ரமண்லால் வஸந்தலால் தேசாய் :: மொழி பெயர்ப்பு : ரா. வீ.

## 28. அநுதாபத்துக்கு உரியவர்கள்!

மனோரமாவின் மனத்தை மகிழ்விப்பதற்கென்று மாதவப்பிரஸாதும் லக்ஷ்மியும் எடுத்துக் கொண்ட உபாயங்களுக்கு ஓர் கணக்கு வழக்கில்லை. ஆனால் அவையனைத்தும் விழலுக்கு இறைத்த நீர் போல் வியர்த்தமாகினவே யொழிய எவ்விதப் பலனும் அளிக்கவில்லை. காதல் என்றால் அதற்கு ஊடலும் தேவைதான் என்பதை யாருமே ஒப்புக் கொள்வார்கள். பெண்ணின் பிணக்கு சிருங்கார ரஸத்துக்கு மணம் ஏற்றுகிறது; காதல் இன்பத்துக்கு மெருகு கொடுக்கிறது.

ஆனால் எதற்கும் ஒரு எல்லை வேண்டும் அல்லவா? அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம் என்று தெரியாமலா சொல்லியிருக்கிறார்கள்? பெண்ணின் பிணக்குக்கும் ஊடலுக்கும் கூட ஒரு எல்லை வேண்டும். அவை அதிக நேரம் அவளிடம் தரித்து நின்று விடக் கூடாது. கணவனின் காதலையும் பிரியத்தையும் வளர்த்துக் கொள்ளக் கூடிய உபகரணங்களாக மட்டுமே அவை அமைய வேண்டும். கணவன் தன் அகந்தையை மறந்து, கர்வத்தைக் கட்டோடு ஒழித்து, மனைவியின் காலடிகளில் வந்து விழுந்து விட்டால், அப்புறம் மனைவி அவற்றை யெல்லாம் பாராட்டக் கூடாது; எல்லாவற்றையும் ஒரு புறமாக மூட்டை கட்டி வைத்து விட்டு மணாளனின் மனத்துக்கு உகந்த முறையில் நடந்துகொள்ள முன் வரவேண்டும்.

ஊடல் உள்ளத்து அன்பை வளர்க்கும் ஒரு சாதனமாக இருக்க வேண்டுமே யொழிய, நாள் கணக்கில், மாதக் கணக்கில் வளர்ந்து கொண்டே போகுமானால், கணவன் ஒன்று அலுத்துச் சலித்து அலட்சியமே உருவானவனாகிவிடுவான், அல்லது கொடிய மிருகப் பிராயத்தினனாகி விடுவான்.

இதை அறிந்து தானோ, என்னவோ மனைவிமார்கள் தங்கள் மனத்தில் அத்தகைய ஊடல்களுக்கு இடமே அளிப்பதில்லை. ஒரு நாள் ஒரு பொழுதாகிலும் அவர்களால் முகத்தைத் தொங்க விட்டுக் கொண்டு, தங்கள் கணவன் மார்களுடன் முகம் கொடுத்துப் பேசாமல் இருக்க முடியாது. அதுவும் புது மணமான தம்பதிகளாயிருந்து விட்டால் கட்டாயம் இருக்க முடியவே முடியாது. கணவன் முற்றிலும் மனத்துக்குப் பிடிக்காதவனாயிருந்தால் தான் அப்படி இருக்க முடியும்.

ஆனால் பெண்ணின் இருதயத்தில் பன்னெடுங் காலமாக ஊறி விட்ட பண்பு அதற்குக் கூட இடம் கொடுப்பதில்லை. எத்தனைதான் கணவன் பிடிக்காதவனாயிருந்தாலும் பெறற்கரிய பேறு கிடைத்து விட்டதாகவே எண்ணி அவனைத் தன் மணாளனாக ஏற்றுக் கொள்ளத் தான் தூண்டுகிறது.

பொதுவாகப் பிறவியோடு ஊறிப் பிறந்த பண்புகளுக்குத்தான் வெற்றி கிட்டுகிறது. தொட்டிற் பழக்கத்தைப் பற்றிக் கேள்விப் பட்டதில்லையா? அச்சில் வார்க்கப் படும் பொருள்கள் அச்சுக்கு ஏற்ப உருவாவது போல், மனைவி தன்னைச் சூழ்நிலைக்குத் தக்கவாறு அமைத்துக் கொண்டு விடுகிறாள்.

ஆனால் நெஞ்சுரம் வாய்ந்த சிலர் பண்புகளுக்கும் பழக்க-வழக்கங்களுக்கும் பெருமை அளிப்பதில்லை; அடி பணிய முன் வருவதில்லை. உள்ளத்து உணர்ச்சிகளுக்கும் மனத்தின் தூண்டுதல்களுக்கும் தான் பெரு மதிப்பு அளிக்கிறார்கள்; அவற்றுக் கேற்றவாறு நடப்பதாகப் பெருமை அடித்துக் கொள்கிறார்கள். அப்படி அவர்கள் சொன்ன பொழுதிலும் அவர்கள் கூறும் அந்த உள்ளத்து உணர்ச்சிகளும் மனத்தின் தூண்டுதல்களும் பண்பையும் பழக்கத்தையும் முற்றிலும் துறந்தவை, அவற்றுடன் உள்ள தொடர்பை அறவே விட்டொழித்தவை என்று சொல்லிவிட முடியாது. சூழ்நிலைக் கேற்பத் தங்களை மாற்றி அமைத்துக் கொண்ட பொழுதிலும் எதிரிடையான சூழ்

நிலைகளில் அவர்களுடைய அருசியும் அருவருப்பும் மடிந்து மண்ணோடு மண்ணாகி விடுவதில்லை. அதற்கு நேர்மாறாக வளரத்தான் செய்கின்றன.

மனைவியை மகிழ்விக்கும் முயற்சியில் வெற்றி காணாத கணவன் மார்கள் தங்கள் மனைவிமார்கள் எப்பொழுதும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு 'உம்மணா மூஞ்சி' போலிருந்தால் அலுத்துச் சலித்துத் தானே போவார்கள்? அப்படி அலுத்துச் சலித்துப் போன பின் அவர்களுடைய இருதயத்தில் அந்த மனைவிமார்களைக் கண்டாலே அலட்சியமும் அருவருப்பும் உண்டாகி விட்டால் அதில் ஆச்சரியப் படுவதற்கு என்ன இருக்கிறது?

அழகர்கள், அறிவாளிகள், அசாத்தியமான மேதை பெற்றவர்கள் என்று உலகம் புகழும் சில தம்பதிகள் கூடச் சிற்சில சமயம் யாருக்கும் புரியாத புதிரான முறையில் ஒருவரை யொருவர் பிரிந்து விடுகிறார்கள். சம்பாஷணை கூடச் செய்வதை நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். இருவருடைய வாழ்க்கைப் பிரவாகங்களும் வெவ்வேறான திசையில் ஓடத் தொடங்கி விடுகின்றன. சில சமயம் வறண்டே கூடப் போய் விடுகின்றன.

கணவனை மனைவி அலட்சியம் செய்தால், அவன் முகத்தைக் கூடப் பார்க்க வெறுத்தால், நாளா வட்டத்தில் அன்பே உருவான கணவனுடைய மனம் கூட மாறி விடுகிறது. கடைசியில் உள்ளங் குன்றி அவளை ஒரேயடியாக வெறுக்கக் கூடத் தொடங்கி விடுகிறான். அத்தகைய அலட்சியமே உருவான மனைவி எத்தனைதான் எழிலே உருவானவளாக இருக்கட்டுமே! சந்திரனைப் பழிக்கும் மனமோகன வதனம் படைத்தவளாக இருக்கட்டுமே! தன் கயல் விழிகள் மூலம் காண்போரின் கருத்தைக் கவருபவளாக இருக்கட்டுமே! அவளுடைய கன்னங்கள் ரோஜா மலர்களையும் உதடுகள் ரோஜா மலர்களின் இதழ்களையும்விட மென்மையானதாகக் கூட இருக்கட்டுமே! புருஷனைப் பிறந்தவனுக்கு அவள் முகத்தை ஏறிட்டுப் பார்க்கத் தோன்றுமா? அல்லது அவள் மீது ஈடுபாடு கொள்ளத்தான் தோன்றுமா? தன்னை மதியாதவர்களை மதிக்க யாருக்குத்தான் தோன்றும்?

**மா**தவப்பிரஸாத் தாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளில் எல்லாம் தோல்வி யுற்றார். தோல்விக்கு மேல் தோல்வி யேற்பட்டால் யாருக்குமே அலுப்பும் சலிப்பும் ஏற்படுவது இயல்புதானே? அப்படி யிருக்கும்பொழுது அவருக்கும் அலுப்புச் சலிப்பு ஏற்பட்டதில் என்ன வியப்பு? மனோரமாவிடம் அவர் கொண்டிருந்த தீவிர ஆவலும் ஆசையும் அடங்கத் தொடங்கி விட்டன. அவர் தம் மனத்தை வேறுவேலைகளில் செலுத்தலானார்.

புது மணம் புரிந்து கொண்டவர்களுக்கு வீட்டோடு கிடக்க வேண்டும். வீட்டை விட்டு அந்தண்டை இந்தண்டை போகக் கூடாது என்று தோன்றும் அல்லவா? அதே போல் அவருக்கும் முன்பெல்லாம் வீட்டிலேயே இருக்க வேண்டும், மனோரமாவின் மனோரம்யமான முகத்தைப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றுதான் தோன்றியது. ஆனால் நாளா வட்டத்தில் தம் எண்ணம் ஈடேறாதுபோல் தோன்றவே, அந்த ஆசையும் அடங்கி விட்டது. சில புலன்களைக் கவனிப்பதற்காக அடிக்கடி தமது கிராமங்களுக்குப் போய் வரலானார். மனோரமாவிடம் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்வதையே அவர் பெரும்பாலும் நிறுத்திக் கொண்டார். பேச்சு வார்த்தை வைத்துக்கொள்வதை மட்டும் என்ன, அவளுடைய முகத்தை ஏறிட்டுப் பார்ப்பதையேகூட நிறுத்திக் கொண்டு விட்டார்.

கொலுப் பொம்மைபோலப் பார்ப்பதற்கு மட்டும் அழகா யிருக்கும் பெண்ணை மணந்து கொள்வதைக் காட்டிலும், அழகு என்பதே லவலேசங்கூட இல்லா விட்டாலும் உணர்ச்சிப் பெருக்கும் கணவனிடத்தில் கங்கு கரை யற்ற அன்பும் கொண்டுள்ள கோர ஸ்வரூபியான பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வது எத்தனையோ மடங்கு மேலானது என்ற எண்ணம் அவர் இருதயத்தில் அசைக்க முடியாத நிலையில் இடம் பெற்று விட்டது.

பணம் மட்டும் படைத்தவர்களா யிருந்து விட்டால், அவர்களுக்குத் தங்கள் மனத்தை மகிழ்வித்துக் கொள்ளக் கூடிய சாதனங்களை உண்டு பண்ணிக் கொள்வதற்குச் சொல்லிக் கொடுக்கவா வேண்டும்? இந்த உலக வாழ்க்கையை நன்றாக வாழ வேண்டும் என்றால் பணம்தான் பிரதானம் என்னும் விஷயம் யாருக்கும் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. பணத்துக்குள்ள பெருமையும் பவிஷும் அத்தகையது.

மாதவப் பிரஸாதினிடம்தான் அந்தப் பணத்துக்கு ஓர் குறைவில்லையே! அவர் அடிக்கடி நகர வாசம் செய்யப் போய் வரலானார். நான்கு நண்பர்களுடன் உட்

தபால்காரர். ? ? ? ?





கார்ந்து ஆனந்தமாகப் பேசிப் பொழுதைப் போக்கலானார். பம்பாய் நகரத்துக்கு அடிக்கடி போய் வரும் பழக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டார். அப்படியே வீட்டில் இருக்க நேரிட்டாலும் மனோரமாவைக் கண்டு பேசும் சந்தர்ப்பத்திற்கு இடமே அளிப்பதில்லை. அப்படிப் பேசித்தான் ஆக வேண்டும் என்ற சந்தர்ப்பம் ஏற்பட்டாலும் அதை எப்படியாவது தவிர்க்கத்தான் வழி தேடுவார். நாள் கணக்கு மாதக் கணக்காகி விட்டது. அப்பொழுதும் மாதவப் பிரஸாத் தமது பிடிவாதத்தில் உறுதியாக இருந்தார்.

மனோரமா அவரிடம் அந்த மாறுதலைக் கண்டாள். கண்டதோடு மட்டும் நிறுத்திக் கொள்ளாமல் கருத்து ஊன்றிக் கவனித்துப் புரிந்தும் கொண்டாள்.

ஆனால் புரிந்தும் புரியாத நிலையில்தான் அவள் இருக்க வேண்டியிருந்தது.

இருவரிலும் அதிக அனுதாபத்துக்குப் பாத்திரமானவர்கள் யார்? மாதவப் பிரஸாதா, மனோரமாவா? யோசிக்க யோசிக்க, இது பெரிய பிரச்னையாகத் தோன்றவில்லையா?

மனோரமாவின் மனமும் அலுத்துச் சலித்துக் கொள்ளத் தொடங்கி விட்டது. வெறிச்சோடி விட்ட வாழ்க்கை வாழ நேர்ந்தால் யாருடைய மனமும் அலுத்துச் சலித்துக் கொள்வது இயல்புதானே? ஆற்ற மாட்டாத துயரம் அவள் மனத்தைப் பெரும் சுமையாக அழுத்தியது.

அவள் தன் நிலையை நன்கு உணர்ந்திருந்தாள். மாதவப் பிரஸாதின் மனைவியாக இருந்து கொண்டே, இன்னொருவனுடைய கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். ஏன்? அதற்காகவேதான் உயிர் வாழ்ந்து கொண்டிருந்தாள் என்று சொன்னால் கூடத் தவறாகாது. கடிதம் வரும் என்ற நம்பிக்கை நசித்து விட்ட பின்னரும் அவளுக்கு ஏற்பட்டிருந்த நப்பாசையை என்னவென்று சொல்வது? அப்படி, அவள் எதிர் பார்த்தபடி கடிதம் வந்தே விட்டாலும் இனி அதனால் அவளுக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டா? அப்படியிருக்கும்பொழுது ஏன் இந்தப் பைத்தியக்காரத்தனம்?

'சுதாகர் தன்னை இன்னும் நினைவு வைத்திருக்க வேண்டிய அவசியம் என்ன?' என்று ஒரு சமயம் எண்ணுவாள். அடுத்த கணமே, 'அவன் நம்மை மறப்பதற்கு என்ன முகாந்தரம் இருக்கிறது?' என்று தன்னைத்தானே சமாதானமும் செய்து கொள்வாள்.

ஆனால் சிந்தனை அத்துடன் நின்று விடுகிறதா? அப்படியே அவன் நம்மை மறந்திருந்தாலும், அவனிடமிருந்து கட்டாயம் கடிதம் வரும் என்ற எண்ணத்தை மட்டும் அவளால் மறக்க முடியவே இல்லை. மறந்தவன் கடிதம் மட்டும் எழுத நினைவு வைத்துக் கொள்வானா என்ற எண்ணத்தையே அவள் அடியோடு மறந்து விட்டாள். எனவேதான், அவளுடைய உள்ளத்தின் ஒரு மூலையில் நம்பிக்கைக் கொடி துளிர் விட்டுத் தளிர்த்துக் கொண்டிருந்தது. மனித உள்ளத்தின் விசித்திர சுபாவங்களுக்கு ஓர் கங்கு கரை காண்பது என்பது ஏது?

ஒரு நாள் மனோரமா குளித்துவிட்டுத் தன் அறையில் உட்கார்ந்திருந்தாள். அவள் எதிரே நிலைக் கண்ணாடி மாட்டப் பட்டிருந்தது. ஆனால் அவள் பார்வை அந்தக் கண்

ணாடியின்மீது செல்லவில்லை. அவள் மனம் வேறு எங்கேயோ சென்றிருந்தது. மனம் ஓரிடத்தில் உழன்று கொண்டிருந்தால் கவனம் வேறு இடத்தில் செல்லுவது ஏது?

திடீரென்று அவள் மனம் கலைந்தது. கண்கள் கண்ணாடியை நோக்கின. கண்ணாடியில் தன் பிரதிபிம்பத்தைக் கண்ணுற்றவள் முகத்தில் பார்வையைச் செலுத்தினாள். அடுத்த கணம் அப்படியே பிரமித்துப் பேய் அறைந்தவள் போல் ஆகிவிட்டாள். அவள் முகத்தில் பழைய அழகு மெருகிடாததுதான் அதற்குக் காரணம். கண்களுக்குக் கீழே கறுமை வட்ட மிட்டிருந்தது. கன்னங்களில் காணச் சகியாத குரூபமான சுருக்கங்கள் உண்டாகி யிருந்தன.

பொதுவாகக் கண்ணாடி அழகைப் பிரதிபலித்துக் காட்டுவதற்குத்தான் உபயோகப் படுகிறது. ஆனால் சிற்சில சமயம் அதற்கு எதிரான காரியத்தையும் அது செய்து விடுகிறது. கண்ணாடியில் காணப்படும் முகத்தின் கோரம் ஒரு விதத்தில் பிரமைதான் என்றாலும், மனத்தை என்னவோ தானே செய்கிறது? நம் அழகு குறைந்து விட்டது என்ற வேதனைச் சுமை மனத்தைப் பாரமாகத்தானே அழுத்துகிறது? யாருக்குமே தன் அழகு குறைவதற்கான சின்னங்களைக் கண்டு விட்டால் பிடிப்பதில்லை. அதுவும் பெண்களாக இருந்து விட்டால் கேட்க வேண்டுமா? அழகு குறைகிறது என்று நினைத்தாலே அவர்களுக்குக் கட்டோடு பிடிக்கத்தானே செய்யாது? மனோரமா தன் அழகை எண்ணி மிகவும் மனம் புழுங்கினாள்.

அதே சமயம் தபால்காரன் மனோரமாவின் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டுக் கடிதத்தைப் போட்டு விட்டுப் போனான். தபால்காரன் தன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதுமே மனோரமா துணுக்குற்றுத் திகைத்தாள். அடுத்த கணமே அவள் கன்னங்களில் செழுமையும் செம்மையும் படர்ந்தன. ஆனால் தினம் போல் கடிதத்தைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பை அவள் அதிகமாகக் காட்டிக் கொள்ள வில்லை. அவள் காட்டிக் கொள்ளா விட்டாலும் அவளுடைய இருதயம் எப்பொழுதும் போலத் துடியாகத்தான் துடித்தது. கால்களை வேண்டுமானால் மேலே முன்னேற வொட்டாமல் தடுக்கலாம். ஆனால் இருதயத்தை அப்படி யெல்லாம் தடுத்துவிட முடியுமா? சரீரத்தின் மற்ற அவயவங்களைப் போல் இருதயத்தின் மீதும் ஆட்சி செலுத்த முடிந்து விட்டால்தான் எவ்வளவோ தேவலையே! ஆனால் இருதயம் அல்லவா எல்லாவற்றின்மீதும் தனது ஆட்சியைச் செலுத்துகிறது!

உணர்ச்சிப் பெருக்கை ஒருவாறு அடக்கிக் கொண்டு பட படக்கும் இருதயத்துடன் போய் மனோரமா கடிதத்தை எடுத்து வந்தாள். அவளுடைய இருதயம் தினத்தைக் காட்டிலும் அன்று அதிகமாகவே அடித்துக் கொண்டது.

கடிதம் வருவது என்பது அவளுக்குப் பழக்கமான விஷயம் தான். கடிதத்தில் உள்ள கையெழுத்தும் அவளுக்குப் பழக்கப் பட்டது தான். பழக்கமான கையெழுத்தைப் பார்த்து அவள் உள்ளம் அப்படித் துடிப்பானேன்? ஒருவேளை சுதாகரைப் போலவே சுதாகரின் கையெழுத்தும் அவள் உள்ளத்தில் பதிந்து விட்டதோ? அவள் உள்ளத்தில் ஏதோ ஒன்று, 'அது சுதாகரின் கடிதமாகத்தான் இருக்கவேண்டும்!' என்று கூறிக் கொண்டிருந்தது.


கடிதத்துடன் வந்த மனோரமா தன் அறைக் கதவை அறைந்து சாத்திக்கொண்டு கட்டிலில் போய்ப் படுத்தாள். இருதயம் 'பட பட' வென்று வேகமாக அடித்துக் கொண்டது. இருதயம் அடித்துக் கொள்ளும் சப்தம் அவள் காதுகளிலேயே கூடத் தெளிவாக விழுந்தது. இருதயத்தின் அந்தத் துடிப்பு தானாக ஓயும் வரை அவள் பேசாமல் படுத்திருந்தாள். உள்ளத் துடிப்பு சற்றுக் குறைந்ததும் பார்த்தால் கண்களில் நீர் முட்டியிருந்தது. முட்டியிருந்த கண்ணீர் முத்து முத்தாகக் கீழேயும்' உதிரலாயிற்று. அந்தக் கண்ணீர் முத்துக்களைச் சிதறவொட்டாமல் காப்பாற்ற வேண்டும் என்று அவள் பிரயாசை எடுத்துக் கொள்ள வில்லை. அவள் அழத் தொடங்கி விட்டாள். அவள் அப்படி அழுவானேன்? அவள், யாருக்காக அப்படி அழவேண்டும்? அவள் அந்த அழுகைக்குக் காரணத்தைக் கண்டுபிடிக்கவும் விரும்பவில்லை; அதற்கான முயற்சியும் எடுத்துக் கொள்ள வில்லை. ஏதோ அழுகை வந்தது, அழுதாள். அவ்வளவு தான். எத்தனையோ தடவை காரணம் இல்லாமலே அழுகை வருகிறது. காரணம் கேட்டால், "ஏதோ அழ வேண்டும் என்று



வாத்தியார் :— ஏண்டா, ரகு! டான்ஸில் என்பது எங்கிருக்கிறது, என்று சொல் பார்க்கலாம்?

ரகு :— டான்ஸில் இப்பொழுது டாக்டரிடமிருக்கிறது, ஸார். அவர் போன வருஷமே எனக்கு ஆபரேஷன் செய்து எடுத்து விட்டார்!

# உங்களுடைய நல்ல அழகான படங்களுக்கு




## கேவாபான்

பகல் வெளிச்சத்திலும், செயற்கை வெளிச்சத்திலும் இந்த மின்னல் வேக பான்க்ரோமாடிக் பிலிம் அதிக சேர்த்தியான தெளிவையும், கலர்களைத் தத்ரூபமாகக் கிரகிக்கும் தன்மையும் கொண்டது.

சைஸ் 620 & 120—ரூ. 2/4




## கேவாகுரோம்

பகல் வெளிச்சத்திற்கு உகந்த ஆர்தோகுரோமாடிக் பிலிம், நல்ல கிரகிக்கும் தன்மை, பிரகாசமான படிகள் பதிவு, விசாலமான தோற்றப் பிடிப்பு, மற்றும் நல்ல தெளிவு வாய்ந்தது.

சைஸ் 620 & 120—ரூ. 2/1



Gevaert

இலவச விளக்கங்களுக்கும் "கேவார்ட்" எக்ஸ்போஷர் கார்டு கேட்டதற்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

**Allied Photographics Limited**

அல்லீட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

(மெயிலிங் டிபார்ட்மெண்ட்) கஸ்தூரி பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜீ டாடா ரோடு, பம்பாய்-1

கிளை ஆபீஸ்கள் : பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புது டில்லி

தோன்றியது, அழுகையும் வந்தது. 'அழுதேன்!' என்று தானே சொல்லத் தோன்றுகிறது? அதுபோலத்தான் அவளும் அழுதாள். கேட்டால் அவளும் அதே காரணத்தைத் தான் சொல்லியிருப்பாள். ஆனால் ஒன்று, அழுதால் உள்ளத்தின் சுமை குறைகிறது அல்லவா? அவளும் உள்ளத்தின் சுமையைக் குறைத்துக்கொள்வதற்காகத்தான் அழுதாள். அழுதபின் அவள் எதிர் பார்த்தது போல் அது கொஞ்சம் குறையவும் செய்தது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மனோரமா கடிதத்தின் உறையைப் பிரித்தாள். அவள் கைகள் நடுங்கின. உறையின் மீது எழுதியிருந்த பெயரையும் விலாசத்தையும் ஒரு முறை படித்துக் கொண்டாள். கடிதம் அவள் பெயருக்குத்தான் வந்திருந்தது. ஆனால் விலாசத்தில் மட்டும் ராமலாலின் மேற் பார்வை என்று எழுதியிருந்தது.

அட! அவளுக்குக் கல்யாணம் நடைபெற்ற விஷயம் சுதாகருக்குத் தெரியாதோ? அந்த விலாசத்தைப் பார்த்தபின் தான் அவளுக்கு அந்த விஷயம் நினைவு வந்தது.

இனிமேல் சுதாகர் அவளுடையவனாக ஆக மாட்டான். ஆக நினைத்தாலும் அவனால் முடியாது. அப்படியிருக்கும்பொழுது அவன் எழுதிய கடிதத்தை அவள் படிக்கலாமா? படிக்கக் கூடாது என்றுதான் எண்ணினாள். அவள் எண்ணி விட்டால் மட்டும் போதுமா? அவளுடைய மனம் கேட்க வேண்டாமா? பிறர் பெயருக்குக் கடிதம் வந்தாலே, யாருக்கும் தெரியாமல் அதைப் படித்துப் பார்த்து விடவேண்டும் என்று தோன்றுகிறது. அப்படியிருக்கும் பொழுது தன் பெயருக்குக் கடிதம் வந்தால் யார்தான் படிக்காமல் இருப்பார்கள்? அதுவும் வந்திருந்த கடிதம் சாதாரணக் கடிதமா? சுதாகரிடமிருந் தல்லவா வந்திருந்தது? சுதாகரிடமிருந்து வந்த கடிதத்தைப் படிக்கவில்லையென்றால் அதைக் காட்டிலும் வேறு என்ன கல்நெஞ்சத்தனம் இருக்க முடியும்?

அத்தகைய கல்நெஞ்சத்தனமான காரியத்தை மனோரமாவினால் செய்ய முடியுமா? அப்படியே செய்ய முடிந்தாலும் செய்யத்தான் தோன்றுமா? அவள் உறையிலிருந்து கடிதத்தை எடுத்தாள். கை முன்போலவே நடுங்கிக் கொண்டுதான் இருந்தது.

கடிதத்தை எடுத்துக் கொண்டிருந்த பொழுதே மனோரமா, 'தான் கல்யாணம் ஆனவள். தன்னை ஒருவன் கரம் பிடித்து விட்டான்!' என்பதை அடியோடு மறந்து விட்டாள். அவள் கடிதத்தை வெளியில் எடுத்ததும் முதன் முதலாகக் கண்களில் ஒற்றிக் கொண்டாள். அடுத்தபடியாக இருதயத்தோடு அணைத்துக் கொண்டாள். மறுகணமே அவளுக்குச் சுதாகரைச் சந்திக்க நேர்ந்த நிகழ்ச்சி நினைவு வந்தது. அதைத் தொடர்ந்தாற் போலவே, அப்பொழுது அவளுக்கு ஏற்பட்ட உள்ளத் துடிப்பும் உடலின் புல்லரிப்பும் நினைவு வந்தன. அந்த இன்பானுபவத்தில் அவள் தன்னை மறந்தாள். அவள் உள்ளக்கிடக்கையிலிருந்து ஒரு நீண்ட பெருமூச்சு எழுந்தது. அந்தக் கடிதத்தை இன்னும் சிறிது நேரம் அவள் தன் மார்போடு அணைத்துப் பிடித்துக் கொண்டாள்.

என்ன ஆச்சரியம்? உயிரற்ற ஜடப் பொருளான காகிதத்துக்குக் கூட அல்லவா அபூர்வ சக்தி இருக்கிறது? மனிதனின் மனத்தைக் கிளர்ச்சி கொள்ளச் செய்து ஆடாத ஆட்டம் எல்லாம் ஆட்டி வைத்து விடுகிறது! சாதாரணக் கடிதத்துக்கே அத்தகைய சக்தி இருக்கிறது என்றால் காதலர்கள் பரிமாறிக் கொள்ளும் கடிதமாயிருந்து விட்டால் அதன் வலுவுள்ள சக்தியைப் பற்றிக் கேட்பானேன்?


கடிதங்களைக் கண்டு விட்ட மாத்திரத்தில், தொட்டு விட்ட மாத்திரத்தில் காதலர்கள் எப்படிக் காதல் பித்தம் தலைக்கேறி வெறி பிடித்து ஆடத் தொடங்கி விடுகிறார்கள் என்பதைப் பார்த்த மாத்திரத்திலேயே யாரும் சுலபமாகப் புரிந்து கொண்டு விடுவார்கள். மிகமிகச் சாதாரணமான காகிதம்! காதலர்களைக் கிளுகிளுக்கச் செய்து கிறங்க அடித்து விடுகிறதே, ஏன்? ஒரு ஜடப் பொருள் சேதனப் பொருள் மீது எப்படி இவ்வாறு ஆட்சி செலுத்தத் தொடங்கி விடுகிறது? யோசித்துப் பார்க்கப் போனால் பெரிய மனோதத்துவ சாஸ்திரத்துக்கும் அப்பாற் பட்ட விஷயமாக அல்லவா தோன்றுகிறது!

கடிதத்தை மார்போடு மார்பாகத் தனக்குத் திருப்தி ஏற்படும் வரையில் ஒற்றிக் கொண்டிருந்த மனோரமா மெதுவாகக் கடிதத்தைக் கண்களெதிரே கொண்டு போய்ப் படிக்கத் தொடங்கினாள். ஒரு தடவை, இரண்டு தடவை,—ஏன்? பல தடவைகள் படித்த பின்புங்கூட அவள் மனத்துக்குத் திருப்தி என்பதே உண்டாகவில்லை. அவள் தன் அக்கம் பக்கத்துச் சூழ் நிலையை அறவே மறந்து விட்டாள்; தான் இன்னொருவருடைய மனைவி என்பதையும் மறந்து விட்டாள். சமூகத்தின் சட்ட திட்டத்தின்படி பார்க்கப் போனால் சுதாகர் அன்னிய புருஷன் என்ற எண்ணமும் அவள் இருதயத்தில் சிறிதும் இடம் பெற்றதாகத் தோன்ற வில்லை.

கடிதத்தை இருதயத்தோடு இருதயமாக ஒட்டி வைத்துக் கொண்டிருந்த பொழுதிலும் மனோரமாவுக்கு ஏன் பூர்ண திருப்தி ஏற்படவில்லை? பன் முறைகள் திருப்பித் திருப்பிப் படித்த பின்னரும் கூட அவளுக்கு ஏன் மகிழ்ச்சி என்பதே லவலேசங் கூட உண்டாகவில்லை? மனோரமாவினால் என்ன என்னவோ முயற்சி செய்தும் தன் மனத்தை அடக்க முடியவில்லை. கடைசியில் உணர்ச்சி மேலிட்டு ஆவேசத்துடன் அந்தக் கடிதத்துக்கு அவள் ஒரு முத்தமே கூடக் கொடுத்து விட்டாள்.

(தொடரும்)

சிலவு
குறைக்க
டயர்...




# புதுப்பிக்கவும்

பத்து வருட நுண்ணிய அனுபவ முறையில். பஸ், கார் பழைய டயர்களை செப்பனிட்டு புதுப்பிக்கிறோம்.

முன்னணி இயந்திர முறையில், நாட்டின் ரஸ்தாக்களுக்கு உகந்த "ட்ரெட்" அமைத்து நீடித்த உழைப்பைக்காண பணியாற்றுகிறோம்.

## சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்.

புதுக்கோட்டை
(ஓர் டி. வி. எஸ். ஸ்தாபனம்)

TVS 2-45TM

# தமிழ்க் களஞ்சியம்

## டி.கே.சி

### 39. பாதையில் ஒரே குழப்பம்!

படை வீரர் ஒழுங்காக அணி வகுத்துத் தெருவில் நடந்து போவதைப் பார்ப்பதில் நமக்கு ஒரு திருப்தி இருக்கவே செய்கிறது.

சிறிது நேரம் பார்த்த பிறகு அலுப்பு வந்து விடும் நமக்கு. இருந்த இடத்தை விட்டு வேறே எங்கேயாவது போகச் சொல்லும்.

ஆனால் தெருவில் ஒழுங்கில்லாமல், தாறுமாறுமாய் ஒருவரோடு ஒருவர் மோதிக் கொண்டும் நெருக்கிக் கொண்டும் ஜனங்கள் போவதைப் பார்ப்பதில் தனி ரஸம் இருக்கத்தான் செய்கிறது.

இந்த ரஸம் காரணமாகவே நாடக மேடைகளிலும் திரைப் படங்களிலும் கும்பலும் குழப்பமுமாய் ஜனங்கள் போவதை அடிக்கடி காட்டுகிறார்கள்.



வட நாட்டுப் படங்களில் பார்க்கலாம்: கோட்டைக்குள் ஏதோ அவசரமான காரியம். வாசல்களில் வீரர்களுக்குள் ஒரே நெருக்கடி. தேர் என்ன, யானை என்ன, ஒட்டகை என்ன, குதிரை என்ன எல்லாம் சேர்ந்து ஒரே ஓட்டமாக ஓடும். ஒன்றோடொன்று மோதிக் கொள்ளும். ஆபத்துக் குள்ளாகும். திகைத்து நின்று விடுவதும் உண்டு. நமக்குக் கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும் — எல்லாம். குழப்பத்தில் உள்ள ரஸம் ஒழுங்கில் இல்லை.

* * *

நந்தி வர்மன் தொண்டை நாட்டுக்கு அரசன். பெரிய பெரிய வீரப்படைகள் வைத்திருந்தான். யுத்தத்தில் அவனை எதிரிகள் சமாளிக்க முடியாது.

ராணுவ பலம் அப்படி இருந்தாலும் அவனுடைய கவனத்துக்கு முக்கியமாக வருவது வேறொரு காரியம்.

உண்மையான தமிழ்ப் பாடல்களில் அவனுக்கு ஒரு மோகம். உண்மையான தமிழ்ப் புலவர்களை ரொம்ப ரொம்ப ஆதரித்து வந்தான். அரண்மனை எல்லாம் அந்தப் புலவர்களுக்கே என்று சொல்லத் தோன்றும். அப்படிப் புலவர்களோடு உறவாடி வந்தான் நந்திவர்மன்.

நந்திவர்மன் காலத்தில் பழையாறு என்கிற இடத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. பகையரசர்கள் பலர் சேர்ந்து எதிர்த்து நின்று போர் செய்தார்கள்.


ஆனாலும் நந்தி வர்மனுக்குத் தோற்றுப் போய்ப் புறங்காட்டி ஓடியே போய் விட்டார்கள். நந்திவர்மனுக்குப் பெரிய வெற்றி.

அந்த வெற்றியை நாடெங்கும் கொண்டாடுகிறார்கள். பல அரசர்களும் தளகர்த்தர்களும் தங்கள் சந்தோஷத்தையும் வாழ்த்தையும் சொல்ல அரண்மனைக்குள் ஓடி ஓடி வருகிறார்கள்.

ஆசார வாசல்க்காரன் கூட்டத்தை வாசலில்க் கொஞ்சம் நிறுத்தி உள்ளே

முற்றத்துக்குப போகக் கொஞ்சம் கொஞ்சமாக இடம் கொடுக்கிறுன். தகுதி பார்த்து இடம் கொடுக்கிறுன். ஆனுலும் பெரும் கூட்டம்தான்.

முதலில் வாழ்த்துப் பாடல்கள் பாடி வந்த புலவர்கள் கையில் ஏடுடன் நின்ருர்கள். அவர்களை எல்லாம் முதலில் உள்ளே போக விட்டு விட்டான். முற்றத்துப் பாதையில் மெள்ள நடந்து போகிருர்கள் புலவர்கள்.



அடுத்தாற்போல் தேர்களில் வந்த ராஜாக்களை உள்ளே விட்டான். தேர்களை வேகமாய் விட்டார்கள் ராஜாக்கள்.

அப்படியே அவர்களுக்குப் பிறகு குதிரை வீரர்கள் போனுர்கள், யானை ஏறி வந்த தளகர்த்தர்கள் போனுர்கள்.

வெண் கொற்றக் குடை பிடித்து வந்த சிற்றரசர்கள் அதற்குப் பின்னே போனுர்கள்.

எல்லாரும் ஓரே அவசரத்தில் இருந்ததனுல் குழப்பம் தான். முதலில் வைத்த ஒழுங்கெல்லாம் எங்கேயோ போய் விட்டது.

**பாடிய நாவலரோ**
**வேந்தரோ பல்புரவிப்**
**பீடியலார் மாகளிற்ருர்**
**பிச்சத்தார் —**

[பல்புரவிப் பீடியலார் : **குதிரை மேல் சவாரி வந்த வீரர்கள் ; மாகளிற்ருர் : யானைமேல் வந்தவர்கள் ; பிச்சத்தார்: வெண் கொற்றக் குடையின் கீழ் நடந்து வந்தவர்கள்.**]

இத்தனை பேரும் போகிற ஆத்திரத்தில் தாறு மாறுமாய் முறைதவறி ஒருவரோடு ஒருவர் மோதிப் போகிருர்கள். ஒரே குழப்பம். எதற்காகப் போகிருர்கள்?

பகைவர்களுடைய படைகள் ஆற்று வெள்ளம் போல் வந்து கொண்டிருந்தன. அவ்வளவும் மடிந்து தொலைந்தன. எங்கே? பழையாற்று யுத்தத்தில்த்தான். மகா யுத்தம். பெரிய வெற்றி.

நந்தி வர்மனிடம் போய்ச் சந்தோஷத்தைத் தெரிவித்து விட வேண்டாமா? ஆசார வாசலை ஒட்டியுள்ள பாதை (கடையாறு) என்ன பாடு படும்?

**பாடிய நாவலரோ**
**வேந்தரோ பல்புரவிப்**
**பீடியலார் மாகளிற்ருர்**
**பிச்சத்தார் — கூடார்**
**படையாறு சாய**
**பழையாறு வென்ருன்**
**கடையாறு போந்தார்**
**கலந்து.**

பெரிய பெரிய ராஜாக்கள், வீரர்கள், புலவர்கள், தளகர்த்தர்கள் தரம் தெரியாமல்க் கலந்து மோதி ஓடுகிருர்கள். அழகான குழப்பம்.

தமிழ்ப் பாஷையும் குழப்பத்தோடு குழப்பமாய்க் கலந்து ஒரு கும்மாளி போடுகிறது.

**— கூடார்**
**படையாறு சாய**
**பழையாறு வென்ருன்**
**கடையாறு போந்தார்**
**கலந்து.**

அருமையான பாவத்தோடு பாடல் வந்து நடனமாடிப் போகிறது. பாடலை நாம் மறந்தாலும் அது நம்மை மறக்காது!



டெலிபோன் லயனின் மறு
முனையில் யாரோ ஒருவருக்கு அரு
வருப்பான இருமல் இருக்கி
றது. நம்பிக்கைவாய்ந்த இருமல்
நிவாரணியை அவர் உட்
கொண்டு அதை நிறுத்து
வது நல்லது . . .

Alembic

# கிளைகோடின் டெர்ப் வசாகா

அலெம்பிக் கெமிகல் வொர்க்ஸ் கம்பெனி லிட்., பரோடா 3.

# பேசும் மரம்





ஒரே ஒரு ஊரில் கந்தன் என்றொரு ஏழை இருந்தான். அவன் தன் ஏழ்மையைப் போக்கிக் கொள்ள எங்கெல்லாமோ வேலை தேடி அலைந்தான். ஆனால் அவனுக்கு வேலை தருவார் யாருமில்லை. அதனால் அவன் வறுமை நாளுக்கு நாள் அதிகமாகியது. போதாத குறைக்கு அவன் மனைவி வள்ளி வேறு, "இப்படி வேலையுமில்லாமல் வெட்டியுமில்லாமல் வீட்டில் குந்திக் கொண்டிருந்தால் யார் சோறுக்கிப் போடுவார்களாம்?" என்று அவனை அடிக்கடி இடித்துக் கூறிக் கொண்டு வந்தாள். அவன் மன வேதனை தாங்க முடியாமற்போய் விட்டது. அழுகை அழுகையாக வந்தது ஏழைக் கந்தனுக்கு.

அந்தச் சமயம் அவன் வீட்டுப் பக்கமாக ஒரு பெரியவர் போனார். "ஏன் அப்பா அழுகிறாய்?" என்று கேட்டார்.

தன் வறுமை நிலையைப் பெரியவருக்கு இரக்கம் தோன்ற விளக்கினான்.

"இதற்காகவா அப்பா, இப்படி அழுகிறாய்? காட்டுக்குப் போய் ஒரு கட்டு விறகு வெட்டிக் கொண்டு வந்தால்கூடப் போதுமே. அன்று அன்றையச் செலவுக்குப் போதிய பணம் கிடைத்து விடுமே!" என்றார்.

இதைக் கேட்டதும் 'நல்ல யோசனையாக இருக்கிறதே! இத்தனை நாளும் எனக்கு இது ஏன் தோன்றவில்லை?' என்று எண்ணினான்.

நேரே வீட்டுக்குப் போய் ஒரு கோடாலியை எடுத்துத் தோள் மீது போட்டுக் கொண்டு காட்டை நோக்கிப் போனான்.

காட்டை அடைந்ததும் அங்கே ஒரு மரம் வெட்டுவதற்குத் தகுதியாக வளர்ந்திருந்தது. இந்த மரத்தை வெட்டினால் ஒரு நல்லச் சுமை விறகு ஆகும் என்று எண்ணினான். அடுத்த கணம் கோடாலியைத் தூக்கி வெட்டப் போனான். அந்தச் சமயம், ''நிறுத்து, நிறுத்து, வெட்டாதே!'' என்று ஒரு குரல் வந்தது.

கந்தன் திடுக்கிட்டுப் போனான். குரல் எங்கிருந்து வருகிறது என்று சுற்று முற்றும் பார்த்தான். ஒரு ஆளையும் காணோம். பின் யார் பேசியது?

''நான்தான், அப்பா! நீ வெட்டவந்த மரம் பேசுகிறேன். நீ என்னை வெட்ட மாட்டேன் என்று வாக்களித்தால் உன் வறுமையைப் போக்கி நல்ல நிலையில் வைக்கிறேன்'' என்று கூறியது.

கந்தன் ஆச்சரியப்பட்டுப் போனான்.

''நீ நல்ல நிலைமையில் என்னை வைப்பாய் என்றால் நான் ஏன் வெட்டுகிறேன்? —வெட்டவில்லை'' என்றான்.

மரம், ''அப்படியானால் நீ உன் கிராமத்துக்குத் திரும்பிப் போ! உன்னை எல்லோரும் அன்புடன் வரவேற்றுக் கிராம அதிகாரியாகச் செய்வார்கள்'' என்றது.

கந்தன் கிராமத்துக்குத் திரும்பினான். ஊர் எல்லையிலேயே ஊர் ஜனங்கள் எல்லோரும் கூடி, ''எங்கள் புதிய கிராம அதிகாரியே வருக, வருக!'' என்று கோஷமிட்டு வரவேற்றனர்.

அவனுக்குக் கிராமத்தில் ஒரு நல்ல வீட்டைக் காண்பித்து அதில் வசிக்கும்படி வேண்டிக் கொண்டனர். மற்ற எல்லா வசதிகளும் செய்து கொடுத்தனர். இதையெல்லாம் பார்த்து அவன் மனைவி வள்ளியால் ஒன்றும் நம்ப முடியவில்லை!

இப்படி இரண்டு ஆண்டுகள் வரையிலும் கந்தனும் வள்ளியும் சந்தோஷமாகக் காலங் கழித்தனர்.

இரண்டு ஆண்டுகள் முடிந்து மூன்றாவது ஆண்டின் தொடக்கத்தில் வேறொரு நபரைக் கொண்டு வந்து கிராம அதிகாரியாக்கி விட்டனர். கந்தனும் வள்ளியும், மறுபடியும் பழைய ஏழ்மை நிலைமைக்கு வரலாயினர்.

வறுமையின் எல்லையை எட்டிப் பிடித்துக் கொண்டிருந்த போது, வள்ளி மறுபடியும் அந்த மரத்தைப் போய்க் கேட்டு விட்டு வரும்படி வற்புறுத்தினாள். கந்தனும் வேறு வழியின்றி அந்த மரத்தினிடம் மனம் சோர்ந்து வந்தான்.

''மரமே! மரமே! நீ முன் தடவை கூறியபடி இரண்டு ஆண்டுகள் கிராம அதிகாரியாக இருந்தேன். பின்னர் அந்தப் பதவியிலிருந்து என்னைத் தள்ளி விட்டார்கள். எனக்கு மறுபடியும் பழைய வறுமை நிலை வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்போது ஏதாகிலும் வழி சொல்ல வேண்டும்! இல்லையேல் உன்னை வெட்டிவிட வேண்டியதுதான்'' என்றான்.

''நீ திரும்பி உன் ஊருக்குப் போ! உனக்குத் தேசத்தார் கூப்பிட்டு நீதிபதி பதவி அளிப்பார்கள்!'' என்றது.

இப்பொழுது மூன்று ஆண்டுகள் அவன் அந்தப் பதவியில் ரொம்பவும் குதூகலமாக வாழ்ந்து வந்தான். மூன்றுமாண்டு முடிந்ததும் வேறொருவனை அந்நாட்டு மக்கள் நீதிபதியாக்கி விட்டனர்.

மறுபடியும் கந்தனுக்கு வறுமை பிடிக்கத் தொடங்கியது. வள்ளி மரத்தைப் போய்க் கேட்டு விட்டு வருமாறு ரொம்பவும் வற்புறுத்தினாள்.

இந்தத் தடவையும் மரம், ''நீ ஊருக்குத் திரும்பிப் போ! ஊரார் கூடி உனக்குப் பெரிய பதவி கொடுப்பார்கள். இந்தத் தடவையாகிலும் உன் மனைவியினிடம் சொல்லி ஜாக்கிரதையாக இருக்கச் சொல். பின்னால் வரும் கஷ்டத்துக்கு ஏற்பாடு செய்து கொள்'' என்று எச்சரிக்கை செய்து அனுப்பியது.

கந்தன் தனக்கு என்ன பெரிய பதவி கிடைக்கக் கூடும் என்று பலவாறு சிந்தித்துக்கொண்டே சென்றான்.

அவன் தன் ஊர் எல்லையை நெருங்கும் போதே தாரை, தப்பட்டை, மேளம் முதலிய பல வாத்தியங்கள் முழங்கின. கந்தனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன் நெருங்கி நெருங்கி ஊர்ப் பக்கமாக வந்த போது, இவ்வளவு மேள தாள முழக்கங்களும் தனக்காகத் தான் என்பதை அறிந்து கொண்டான். மேலும் அவன் அவர்களை நெருங்கியபோது, ''இந்நாட்டு அரசர் வாழ்க! வாழ்க!'' என்று எல்லோரும் கூடி வாழ்த்துக் கூறினார்கள். அவன் தலையில் கிரீடம் வைத்துப் பூமாரி பொழிந்தார்கள். வள்ளிக்கும் பட்டுத் துணிகளும் தங்க நகைகளும் கொடுத்து, அலங்காரம் செய்வித்து ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். ஆம், அவன் இப்போது ராணியாகிவிட்டான் அல்லவா?

இப்படி ஐந்தாண்டுகள் கந்தனும் வள்ளியும் அரச பதவியிலிருந்து மகிழ்ந்தார்கள்! பிறகு அந்த தேசத்தார் வேறொருவனை அழைத்து வந்து அரசனாக்கினார்கள்.

மறுபடியும் கந்தன் பழைய நிலைக்கு வந்து விட்டான். ஏழ்மையும் வறுமையும் அவனை வாட்டி வதைத்தன. அவன் மனைவி வள்ளி, மறுபடியும் காட்டிலிருக்கும் மரத்தைப் போய்க் கேட்டு வருமாறு வற்புறுத்தினாள்.

மிகுந்த மனச் சோர்வுடன் கந்தன் மீண்டும் காட்டுக்குப் போனான்.

# லிப்டன்

## டீ கெர்ல்
## டஸ்ட் டீ

சிறந்த
ஸ்டிராங்
டீ
தருகிறது.




LT 57-54-TR

---

REY-15-TAM

# தசை நோய்கள், வலிகள்
# விரைவில் குணமாகும்



ஜாம்-பெக் மூலிகை களிம்பு உங்கள் தசையின் மீது தேய்த்துவிடுங்கள். அதிலுள்ள மருந்துக்கலப்புள்ள எண்ணெய்கள் உங்களது நோய்கள், வலிகள், பிடிப்பு ஆகியவற்றிற்கு இதம் அளிக்கும்போது உண்டாகும் குணத்தை நீங்கள் உணரலாம். ஜாம்-பெக்கிலுள்ள இவ்வற்புத தைலங்கள் ஊடுருவிப்பாய்ந்து உங்கள் தசைகளை மிருதுவாகவும் வலிமையுள்ளதாகவும் செய்யும். இன்றே ஒரு டப்பி ஜாம்-பெக் வாங்குங்கள். சருமம், மண்டை நோய்களுக்கும், வெட்டுக்காயம், நெருப்புப்புண், கஞ்சிக்கோப்பனம், விஷப்புண், ரணம், சேற்றுப்புண், பூச்சிக்கடி, மூல உபத்திரவம் ஆகியவற்றிற்கும் ஜாம்-பெக் உலகப்பிரசித்தி பெற்ற நிவாரணியாகும்.

## Zam-Buk

ஜாம்-பெக் உலகத்தின்
தலைசிறந்த சரும
ஆயின்ட்மெண்ட்

மிருகக் கொழுப்பற்றது என்பதற்கு
உத்திரவாதம்.

மதராஸிற்கு ஸோல் ஏஜெண்டுகள்: தாதா & கம்பெனி, பார்க் டவுன்.

"மரமே! மரமே! நான் மறுபடியும் பழைய வறுமை நிலைக்கு வந்து விட்டேன். இப்பொழுது நீ எனக்கு ஏதாகிலும் உதவி செய்கிறாயா, இல்லையா? இல்லையென்றால் உன்னை வெட்டி விடுவேன்!" என்றான்.

மரமோ, "கந்தா, உனக்கு என்னாலான உதவிகளையெல்லாம் செய்து விட்டேன். இனி எனக்கு உதவி செய்யத் தெரிய வில்லை. இவ்வளவு உயர்ந்த பதவிகள் உனக்கு அளித்தும் பிற்கால வாழ்க்கைக்கு வகை செய்து கொள்ள உனக்குத் தெரிய வில்லை. இப்படிப் பட்ட உனக்கு உதவி செய்ய முன் வந்த நான் இருப்பதைவிட இறப்பதே மேல்! எனவே என்னை வெட்டி விடு!" என்றது மரம்.

இதைக் கேட்ட கந்தன் மனம் இளகி விட்டது. அவனுக்கு அந்த மரத்தை வெட்ட மனம் வரவில்லை. வந்த வழியே தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு திரும்பிச் சென்றான்.

## ★ ★ ★ ★ ★ ★ கீ த மா லா ★ ★ ★ ★ ★ ★

தமிழிசை இயக்கம் தொடங்கிய புதிதில் "தமிழில் நல்ல சாகித்யங்கள் இல்லை" என்று அந்த இயக்கத்தை எதிர்ப்பவர்கள் கூறிக் கொண்டே இருந்தார்கள். சங்கீத வித்வான்கள் "நன்றாக நிரவல் பண்ணிப் பாடக் கூடிய இனிமையான வார்த்தைகளுடன் கீர்த்தனங்கள் தமிழில் அதிகமாக இல்லை" என்று குறைப்பட்டார்கள்.

அந்தக் குறையைத் தீர்ப்பதற்கு இந்தப் பத்து வருஷ காலத்தில் பலர் முன் வந்திருக்கிறார்கள். பல சாகித்திய கர்த்தாக்கள் தமிழிசைக்கு நிரம்பத் தொண்டு செய்திருக்கிறார்கள். புதிது புதிதான தமிழ்க் கீர்த்தனங்கள் கச்சேரிகளிலும் வானொலியிலும் பாடப்படுவதைக் கேட்கிறோம். அவை புத்தகமாகவும் வெளி வந்து கொண்டிருக்கின்றன.

ஸாகித்யங்கள் முக்கியமாக ராக பாவத்துடனும், பொருட் செறிவுடனும் இருக்க வேண்டியது அவசியம். ஸாஹித்திய வார்த்தைகள் காதில் விழும்போது இனிமையாகவும் இருக்க வேண்டும்.

இன்னொன்று, வெகு காலமாகத் தியாகய்யர், தீக்ஷிதர், ஸ்யாமா சாஸ்திரிகள் முதலியவர்களுடைய கீர்த்தனங்கள் மகா வித்வான்களால் பாடப்பட்டு, புதுப் புது அழகும் மெருகும் பெற்று ஜீவ சக்தியுடன் விளங்குகின்றன. புதிய ஸாஹித்யங்களைப் பாடப் பாடத்தான் அவற்றின் மெருகு ஏறி, ஜீவகளை உண்டாகும். சில வார்த்தைகளைப் பிரித்துப் பாடினால் காதுக்கு இனிமையாக இருக்கும். சில வார்த்தைகளைச் சேர்த்துப் பாடினால் அழகாக இருக்கும். இவையெல்லாம் பாடும் போதுதான் தெரியும்.

ஸ்ரீமதி அம்புஜம் கிருஷ்ணா அவர்கள் தமிழிசைக்குப் புதிதாகச் சில அழகிய சாகித்யங்களைச் செய்து கொடுத்திருக்கிறார். அவருடைய சாகித்தியங்கள் கீதமாலா என்ற பெயரில் ஸ்வர சாகித்தியக் குறிப்புகளுடன் வெளியாகி யிருக்கின்றன. மொத்தம் ஐம்பத்தொரு சாகித்யங்கள் இந் நூலில் உள்ளன. நான்கு தெலுங்கு சாகித்யங்கள்: ஒரு ஸம்ஸ்க்ருத சாகித்யம்; மற்றவையெல்லாம் தமிழ்.

தமிழ் சாகித்யங்கள் உயர்தரமாகவும் இனிமையாகவும் அமைந்திருக்கின்றன. முன்னோர்கள் காட்டிய வழியில் சங்கீத வித்வான்கள் விஸ்தாரமாகச் சங்கதிகள் போட்டுப் பாடுவதற்குரிய முறையில் அமைந்திருக்கின்றன.

"தண்தடம் ஒன்று கண்டேன்-அதனில்
தாமரை மலர்கள் கண்டேன்-ஸகி
வண்டு மதுவுண்ணக் கண்டேன்-சற்றே
வாசத்தென்றல் வீசக் கண்டேன்.
எண்டிசைக் கதிபரும் ஏற்றிப் பணிந்திடும்
கொண்டல் வண்ணன் குழலூதக் கண்டேன்."

என்னும் பாடலில் 'கண்டேன்' 'கண்டேன்' என்று திரும்பத் திரும்ப வருவதின் சுவையை நல்ல வித்வான்கள் பாடக் கேட்கும் போது பூரணமாக உணர்ந்து அனுபவிக்க இயலும்.

எதுகுல காம்போதி ராகத்தில் அமைந்த பதத்தைப் பாடக் கேட்டவர்களுக்கு, அது இன்றைக்கு நம் நாளில் புதிதாகப் பாடப்பட்டதா, நூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மகா சாகித்யகர்த்தாவினால் இயற்றப்பட்டதா என்ற சந்தேகம் ஏற்பட்டு விடும்.

"கருமுகில் வண்ணன் கடைக்கண் பார்வையில்
கருத்தழிந்தே நான் கலங்கித் தவிப்பதை
பவழ வாயிதழ் மிசை மின்னும் புன்னகை
பாவையேனை அவன்பால் பித்தாய்ச் செய்ததை
அறிவானோ? கண்ணன் அறியானோ-மனம்
தேர்ந்து நீ வாராய் ஸகி!"

ராஜாஜி அவர்கள் இந்நூலுக்கு ரத்தினச் சுருக்கமாய் ஒரு முன்னுரை எழுதி யிருக்கிறார்கள். ஒரு சாகித்ய வெளியீட்டுக்கு இதைவிட அழகான முன்னுரை எழுத முடியாதென்று தோன்றுகிறது.

"நமது முன்னோர்கள் தந்த அமிருதமாகிய நம் நாட்டு ராகங்களைப் பின்னோராகிய நாம் நல்ல சாகித்யமென்கிற சுத்த பாத்திரங்களில் நிறைத்து வைத்து எல்லாரையும் அருந்தச் செய்ய வேண்டும். ஸ்ரீமதி அம்புஜம் செய்திருக்கும் இந்த அமிருத பாத்திரங்களைக் கான நிபுணர்கள் பாடித் தர வேண்டும்" என்று எழுதி யிருக்கிறார்கள்.

ராஜாஜியின் விருப்பம் நிறைவேற வேண்டும் என்று நாமும் விரும்புகிறோம்.

கீர்த்தனங்களை இசைப்படுத்தி ஸ்வர சாகித்ய வடிவில் அச்சிட்டுப் பதிப்பிடுவதற்குச் சங்கீத வித்வான் ஸ்ரீ வி. வி. சடகோபன் உதவியதாக அறிந்து அவருக்கும் நம் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேராசிரியர் ஸ்ரீ. பி. சாம்பமூர்த்தி அவர்கள் தம் சிறப்புரையில் ஸ்ரீ சடகோபனின் சிட்டை ஸ்வரங்களை மிகவும் பாராட்டி யிருக்கிறார். அதிலும் குறிப்பாக, பேகட ராகத்திற்குப் பாடியிருக்கும் சிட்டை ஸ்வரம் ஸ்வராலங்காரத்தில் பதித்திருக்கும் ஸ்வரமணிகள் என்கிறார்.

"கீதமாலா" கீர்த்தனங்களை நம் காலத்தில் நாம் பாடக் கேட்டு மகிழ்வது மட்டுமன்றி, இந் நாட்டின் பிற்கால சந்ததியில் தோன்றும் சங்கீத ரஸிகர்கள் நூறு நூறு ஆண்டு காலம் கேட்டு மகிழ்வார்கள் என்பதை எண்ணி மகிழ்கிறோம்.

*பிரசுரம்: ஞானோதயா பிரஸ், மதுரை, விலை ரூ. 2—8—0.*

# வயிற்றுக்கோளாறு தினம் உங்கள் சந்தோஷத்தைக் கெடுக்க விடாதீர்கள்!



உங்களுக்கு அஜீர்ணமோ, நெஞ்செரிச்சலோ அல்லது பித்தமயக்கமோ ஏதாவது ஏற்பட்டால், ஒரு கிளாஸ் ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்' சாப்பிடுங்கள்— கட்டாயம் நிவர்த்தி பெறுவீர்கள். ஈனோஸ் புளிப்பை அகற்றும் குணமுள்ளதாகையால் அது வயிற்றிலுள்ள 'கன உணர்ச்சியை' சீக்கிரம் நீக்கி, நீங்கள் சந்துஷ்டியும் சுருசுருப்பும் பெற உதவுகிறது. ஈனோஸ் பித்தப்பை மந்தத்தைத் தடுத்து, மலக்கழிவை ஒழுங்குபடுத்துகிறது. ஈனோஸ் மூலம் சந்தோஷமாக வாழுங்கள்

## ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்'

உங்களை தெம்பாகவும் சுருசுருப்பாகவும் வைத்திருக்கிறது




புதுமை கெடாமலிருக்க புட்டிகளில் விற்கப்படுகிறது.

'ஈனோ' மற்றும் 'ப்ரூட் ஸால்ட்' என்ற பதங்கள் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட டிரேட் மார்க்குகள்

ENO. 8163


அருணோதயம் முதல்
நட்சத்திரம் உதிக்கும்
வரையில் - நாள்முழுவதும்
இனிய வாசனையோடிருப்பீராக
டால்கம் பவுடர்
பள பளவென்று
ஜொலிக்கும் புதுமைக்கு
காஷ்மீர் புக்கே டால்கம்
பவுடரை உங்கள் மேல் தாரா
ளமாகத் தூவுங்கள். அது அதிக
க்கசிவை உறிஞ்சுகிறது . . . எரிச்சலேயும் அறிப்பை
யும் அடங்கச் செய்கிறது . . . உங்களைக் குளிமை
யுடனும் இனிய வாசனையுடனும், நாள்முழுவதும்
புதுமையுடனும் இருக்கச் செய்கிறது.
காஷ்மீர் புக்கே
மாணிடர்கள் விரும்பும் பரிமளத்துடன்
1806லிருந்து கோல்கேட் உயர்ந்த தரத்திற்குப் பெயர்போனது.



எம். கே. ராஜகோபாலன்

**வா**ழ்க்கை இன்பச் சுரங்கமா அல்லது துன்பக்காடா! என்று நாம் நமது தேசத்தில் 'வாக்கு' எடுத்தோமானால் தற்போது நாடு இருக்கும் சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடி நிறைந்த தருணத்தில், பலர் வேலையின்றி வாடும் சமயத்தில் பெரும்பாலான மக்கள் பின்னால் கூறப்பட்டதையே விடையாக அளிப்பார்கள்.

நூற்றுக்கு 95 சத வீதத்துக்கு மேலான ஜனங்கள் வாழ்க்கையில் விருப்பின்றி மனம் சோர்ந்தே காணப்படுகிறார்கள். ஒரு சிலரே அதாவது பதினைந்து வீதத்தினரே வாழ்க்கை வசதிகள் ஒருங்கே அமையப் பெற்றுச் சுமாரான நிலையில் உள்ளார்கள். மற்றப் பெரும் பகுதியினரோ வறுமை, ஏழைமை, அறியாமை, நோய் முதலியவைகளால் பிடிக்கப்பட்டு நாளுக்கு நாள் நலிந்து கொண்டு வருகிறார்கள்.

இவ்வாறு பெரும்பாலான மக்களின் வாழ்க்கையைத் துன்பப் பாலைவனமாக்கும் சீர்கெட்ட 'சமுதாய அமைப்பைச் சரி செய்வது எங்ஙனம்! இது தனிப்பட்ட ஒருவருடைய முயற்சியால் செய்யக் கூடியதல்ல. அவ்வாறு செய்ய முடியுமானால் ஏன் பலர் தற்கொலை செய்து கொள்ள முற்படுகின்றனர்!

ஒருவனுக்கு வேலையில்லை, கையில் காசுமில்லையென்று வைத்துக் கொள்வோம். அவனுக்குச் சோறு போடும் பொறுப்பை யாரும் ஏற்றுக் கொள்ளாத நிலையில் அவன் பிச்சை யெடுக்க முற்படுகிறான். அதுவுமில்லையானால் திருடவோ கொள்ளையடிக்கவோ அவன் மனம் துணிகிறது. இவ்விரண்டும் பிடிக்காத சிலர் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்வதையே சிறந்த பரிகாரமாகக் கொண்டுள்ளனர்.

ஒவ்வொரு பிரஜைக்கும் வாழ்க்கைக்கு உத்தரவாத மளிப்பது ஒவ்வொரு நாகரிக சர்க்காரின் தவிர்க்க முடியாத கடமை என்பது எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. இதையொட்டியே தற்காலத்தில், 'ஒன்று அரசாங்கம் வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். அல்லது வாழ வகையற்றவன் தன் உயிரை மாய்த்துக் கொள்ளும் உரிமையையாவது வழங்க வேண்டும். வாழ வகை செய்ய முடியாத நாமும் சமுதாயமும் ஒருவன் சாவதை எங்ஙனம் தடுக்க முடியும்! தடுக்க முயல்வது அறிவீனமாகும்' என்பது போன்ற கருத்துக்கள் படங்களிலும் நாடகங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றன.

பிச்சை எடுத்தல் போன்ற தொல்லைகளையும் திருட்டு, கொள்ளை, கொலை, தற்கொலை, பொய்மை, வஞ்சகம், விபசாரம் போன்ற சமூகத் தீமைகளையும் ஒரு நாட்டிலிருந்து அறவே அகற்ற வேண்டுமானால் அதற்கு ஒரே ஒரு பரிகாரம்தான்.

அதுதான் சீர்கேடுற்ற, பல தீமைகள் மலிந்த, உளுத்துப்போன தற்போதைய சமுதாயப் பொருளாதார அமைப்பை மாற்றி யமைப்பதாகும். அதுவும் ஏதோ மேலெழுந்த வாரியாக மட்டும் மாற்றினால் போதாது. அங்குமிங்குமாகத் துண்டு துண்டாகச் சில சில்லறை மாறுதல்களைச் செய்வதன் மூலம் தற்போதுள்ள தீமைகள் யாவும் மறைந்து விடமாட்டா. ஆகவே சமுதாயப் புனரமைப்பு என்றால் அடிப்படையான, தற்போதைய அமைப்புக்கு முற்றிலும் மாறுபட்டதான புதிய சமுதாயத்தை உருவாக்கக்கூடிய, புரட்சிகரமான மாறுதல்களைச் செய்தாக வேண்டும். மனிதனுக்கு மனிதன் எந்த விதமான ஏற்றத் தாழ்வுகளும் இருக்க அனுமதிக்கலாகாது. எல்லோருக்கும் வாழ்க்கையில் சம சந்தர்ப்பங்களும் சம வசதிகளும் கிடைக்கச் செய்ய வேண்டும்.

பொருளாதார சமத்துவமும் சமூக நியாயமும் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாட்டின் செல்வமனைத்தும் ஒரு சிலரிடமே குவிய விடாமல் பரவலாக விநியோகிக்கப் படவேண்டும். நாட்டின் உற்பத்திச் சாதனங்கள் அனைத்தும் தேசியமயமாக்கப் படவேண்டும். நிலம் உழுபவனுக்குச் சொந்தமாக்கப் படவேண்டும். இரும்பு, எஃகு, சிமெண்டு, சர்க்கரை, துணி, சுரங்கம் போன்ற பெரிய கைத்தொழில்கள் நாட்டின் பொதுவுடைமை யாக்கப்பட வேண்டும். பாங்கிகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள் போன்ற ஸ்தாபனங்களை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும்.

எல்லோரும் சமுதாயத்துக்காக, தன்னாலியன்ற பணியைச் செய்து தனக்குண்டான பங்கைப் பெற வேண்டும். அத்தகைய புதிய சமுதாயத்தில், ஏழை—பணக்காரன் என்ற வேற்றுமை மறைய வேண்டும். முதலாளி—தொழிலாளி என்ற பேதம் தொலைய வேண்டும். ஆண்டான்—அடிமை என்ற அலங்கோலம் அகல வேண்டும். அந்தணன்—அரியன் என்ற ஏற்றத்தாழ்வு விலக வேண்டும். சுரண்டுபவன்—சுரண்டப் படுபவன் என்ற நிலை மாற வேண்டும். படித்தவன்—படியாதவன் என்ற இரு பிரிவு இருத்தலாகாது. உடலுழைப்பு—மூளை உழைப்பு என்று பார பட்சம் காட்டுதல் போக வேண்டும். எல்லோருக்கும் சம உணவு, எல்லோருக்கும் சம அந்தஸ்து, எல்லோருக்கும் சம சந்தர்ப்பம் ஆகிய இவை உத்தரவாத மளிக்கப் பட்டால் நாட்டின் பிரஜை ஒவ்வொருவனும் சமுதாய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்துக்கும் பணி செய்வதைப் பெருமையாகக் கொள்ளுவான்.

நாடு ஒரு குடும்பம். பிரஜைகள் அனைவரும் அக்குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்ற சகோதரத்துவ உணர்ச்சி ஏற்படவேண்டும்.

'சமூகத்திற்காக நாம்' 'நமக்காக சமூகம்' போன்ற பொது ஜன உணர்ச்சிமக்களிடையே ஏற்படவேண்டும். நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் சமூகத்தின் ஊழியன் என்ற கருத்தே மேலோங்கி யிருக்கும்.



அத்தகைய சீரிய சமுதாயத்தில் நாட்டின் பிரஜை செய்யும் ஒவ்வொரு பணியும் சமூக நலனை லட்சியமாகக் கொண்டே யல்லாமல் சுயநல உணர்ச்சி அங்கு இருக்க நியாயமில்லை.

இதுதான் சோஷலிஸ சமுதாய அமைப்பின் சித்திரம். இத்தகைய அமைப்பை உருவாக்குவதே சோஷலிஸ்டின் லட்சியம். இந்தக் கனவை நினைவாக்குவதே அவனது குறிக்கோள்.

ஆனால் இதைச் சாதிப்பது எங்ஙனம்? ரத்தப் புரட்சியாலா அல்லது பிற பலாத்கார முறைகளைக் கையாளுவதன் மூலமா? அல்ல, அல்ல என்பதே ஒவ்வொரு சோஷலிஸ்டின், குறிப்பாக இந்திய சோஷலிஸ்டின் விடையாகும். பின் எதனால்? சமுதாயத்தைப் புனர் நிர்மாணம் செய்வதிலும் சட்டங்கள் போடுவதன் மூலமும் திட்டங்கள் செய்வதன் மூலமுமே சாத்தியம் என்றே இந்திய சோஷலிஸ்ட் கட்சி நம்புகிறது.

இங்குதான் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சோஷலிஸ்ட் கட்சிக்கும் பெருத்த வேறுபாடு உள்ளது. ரத்தப் புரட்சி இன்றியமையாதது என்பது கம்யூனிஸ்டின் வாதமாகும். அமைதியான முறைகளிலேயே சமுதாயப் புனரமைப்பு சாத்தியம் என்பது சோஷலிஸ்டின் திடநம்பிக்கை. அவர்கள் கத்தி முனையில் நம்பிக்கை வைப்பவர்கள். இவர்கள் பேனா முனையில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

கம்யூனிஸ்டுகள் முழுக்க முழுக்க மார்க்ஸீயத்தைப் பின் பற்றுபவர்கள். வர்க்கப் போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லை என்கிறார்கள். ஆனால் சோஷலிஸ்டுகள் மார்க்ஸீயத்தோடு கூட காந்தீயத்தையும் பருகித் திளைத்தவர்கள் லட்சியத்திற்காக மட்டுமே மார்க்ஸீயத்தை ஏற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் அதை அடைவதற்கான வழிமுறைகளைப் பின்பற்றுவதில் காந்தீயம்தான் இவர்களுக்கு ஊன்றுகோல். பிரத்தியட்ச நிலையை யொட்டிப் பார்த்தாலும் கூட அன்பு முறைதான் இந்தியாவில் வெல்லுமே யொழிய ஹிம்சை வழி இந்தியாவில் கால் கொள்ள முடியாது. காரணம் இந்தியர்கள் பண்பாட்டாலும் கலாச்சாரத்தாலும் இயற்கைச் சூழ்நிலையாலும் அன்பு வழிப்பட்டவர்கள், அறநெறிப்பட்டவர்கள். இந்த ரகசியத்தை நன்கறிந்துதான் காந்தி மகாத்மாவும் சுதந்தரப் போராட்டத்துக்கும் அஹிம்ஸை வழியைக் கையாண்டார்.

கம்யூனிஸ்ட்களின் பலாத்கார முறைகளை மக்கள் ஒருநாளும் ஆதரிக்க மாட்டார்கள் என்பது திண்ணம். இதை அறிந்தேதான் அவர்களும் தங்கள் கொள்கைகளை ஓரளவு மாற்றிக் கொண்டு சென்ற தேர்தலில் சட்ட சபைகளுக்கும் மக்கள் சபைக்கும் போட்டியிட்டுச் சென்றார்கள். ஆனால் அது அவர்கள் நிரந்தரக் கொள்கையாகி விட முடியாது. சட்டசபை நடவடிக்கைகளில் தான் கலந்து கொள்வது அவர்கள் செய்யும் ஒரு பரிசோதனையே யாகும்.

பொருளாதார சமத்துவம், சமூக நியாயம் என்ற லட்சியத்திலே மட்டும் சோஷலிஸ்டுக்கும் கம்யூனிஸ்டுக்கும் கருத்தொற்றுமை இருக்கிறது. மற்ற எல்லா விஷயங்களிலும் இருவருக்கும் பெருத்த வேற்றுமையுள்ளது. எதேச்சாதிகாரத்தில் கம்யூனிஸம் நம்பிக்கை யுடையது, ஜனநாயகக் கொள்கை யுடையது சோஷலிஸம். கருத்து பேச்சுச் சுதந்திரத்துக்குக் கம்யூனிஸத்தில் இடமில்லை. இவைகளுக்குச் சோஷலிஸம் பரிபூரண உத்தரவாதமளிக்கிறது. மத விஷயங்களில் தலையிட விரும்புவது கம்யூனிஸம். மத சம்பந்தப்பட்ட விஷயங்களில் தலையிடாமல் நடுநிலைமை வகிப்பது சோஷலிஸம். நாட்டின் அதிகாரம் பரவலாக இருக்க வேண்டுமென்பது சோஷலிஸக் கொள்கை. தனிப்பட்டவன் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து அவன் தன் விருப்பப்படி முன்னேறச் சகல வசதிகளும் செய்து கொடுத்து, அவனது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்விப்பது சோஷலிஸமாகும். ஆனால் தனிப்பட்டவனது உணர்ச்சிகளை நசுக்கி அவனது அபிலாஷைகளை நிறைவேற்றச் சந்தர்ப்பம் அளிக்காமல் தடைபோட்டு நிறுத்துவது கம்யூனிஸமாகும். பெரும்பாலோர் விருப்பத்துக்கு மாறாக மக்கள் மீது அதிகாரம் செலுத்தி அவர்களை ஒரு சிறு கூட்டம் ஆட்டிப் படைப்பது கம்யூனிஸம். பார்லிமெண்டரி ஜனநாயக முறைகளின் மூலம் சகல மக்களின் விருப்பத்திற்ிணங்க சட்டங்கள் இயற்றுவதும் ஆட்சி நடத்துவதும் சோஷலிஸம் மக்களிடமிருந்தே அதிகாரத்தை எதிர்பார்க்கிறது. ஆனால் கம்யூனிஸம் பலாத்கார முறைகளால் அதிகாரத்தைக் கைப்பற்றி மக்கள் மீது மேற்படி அதிகாரத்தைத் திணிக்கிறது. ரஷ்ய வெளிநாட்டுக் கொள்கையை அப்படியே பின்பற்றி ஒழுகுவது தான் மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளின் கொள்கை. ஆனால் சோஷலிஸம் தன் நாட்டு மக்களின் விருப்பத்துக்கும் பண்பாட்டுக்கும் இணங்க சுதந்திர வெளி நாட்டுக் கொள்கையை உருவாக்கவே விரும்புகிறது.

சுருங்கக் கூறினால் கம்யூனிஸம் இந்திய கலாசாரத்துக்கு முற்றிலும் முரண்பட்ட ஒரு தத்துவம். அது உற்பத்தியான தாயகம் ரஷ்யா. ஆனால் சோஷலிஸம் இந்த நாட்டிலேயே தோன்றி வளர்ச்சியுற்ற இயக்கம். அதன் மற்றொரு விசேஷமென்ன வென்றால் அது அன்பு நெறி தவறாமல் மகாத்மா காந்திஜியின் மேற்பார்வையில் அவரது ஆசியைப் பெற்ற தலைவர்களால் கொண்டு நடத்தப்பட்ட ஓர் இயக்கம். சோஷலிஸம் இந்திய கலாசாரத்துக்கு முற்றிலும் இயைந்ததே. அந்நிய நாட்டுப் பொருள்களையோ அந்நியநாட்டுக் கருத்துக்களையோ இது நம்புவதில்லை. இந்நாட்டு மக்களிடமிருந்து இது ஜீவன் பெறுவது. தேசிய நிழலிலே ஜனநாயகப் பாலுண்டு வளர்ந்த மாபெரும் ஸ்தாபனமாகும் சோஷலிஸம்.

மக்களிடையே சமத்துவம் வேண்டும், எந்த விதமான ஏற்றத் தாழ்வுகளும் இருத்தலாகாது

என்பதைக் கொள்கையளவில் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். காங்கிரஸ் கட்சியும் இதற்கு விலக்கல்ல. சமதர்மம் விரைவில் நிலைநாட்டப் பட வேண்டும், நனவாக மாற வேண்டும் என்பதே ஒவ்வொருவரின் உள்ளக் கிடக்கை. இதற்கு ஆவன செய்ய வேண்டியது நம்மை ஆளும் அரசாங்கத்தை நடத்தும் கட்சியின் தவிர்க்க முடியாத, உடனடியான கடமையாகும்.

அரசாங்கம் எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும் இறுதியில் இந்த லட்சியம் கைகூடுமாறு செய்வதாக இருக்க வேண்டும். இந்நோக்கம் ஈடேறுவதில் எவ்விதமான தாமதமும் இருத்தலாகாது. தாமதமாகும் ஒவ்வொரு கணமும் நிலைமையை இன்னும் சீர்கேடடையச் செய்யவே துணை புரியும்; தொல்லைகளும், குழப்பங்களும், கொந்தளிப்பும் அதிகரிக்கவே செய்யும். ஆகவே எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு விரைவில் திட்டங்கள் அமலாக்கப்பட வேண்டும். ஆமை வேகம் பயன்படாது; மக்களின் ஆத்திரத்தைத்தான் அதிகமாகத் தூண்டும்.

ஏனெனில் இன்று நம் நாட்டில் மட்டுமல்ல, உலகமெங்கெனும் மக்களிடையே அகப் புரட்சி ஏற்பட்டு விட்டது. அதாவது எல்லோரும் சமம் என்கிற சமத்துவ உணர்ச்சி மனதில் வேரூன்றி விட்டது. அது செயல்பட வேண்டியதே நம்முன் உள்ள மாபெரும் பிரச்னை. புறப்புரட்சி இன்னும் நம் போன்ற நாடுகளில் ஏற்பட்டாகவில்லை. ரத்தப் புரட்சி நடந்த நாடுகளில் உடனடியாகவே ஒரே நேரத்திலேயே இந்த இரண்டு விதமான புரட்சிகளும் ஏற்பட்டு விட்டன.

நம் போன்ற நாடுகளில் அகத்திலே ஏற்பட்ட புரட்சி புறவாழ்க்கையிலே இன்னமும் நனவாக நிலைபெற வில்லை. அதற்கான இடைக்காலம் தேவையாக இருக்கிறது. அந்த இடைக்காலமே ஒரு நாட்டுக்கும் அதன் மக்களுக்கும் குறிப்பாக அதன் அரசாங்கத்துக்கும் சோதனைக் காலமாகும். இந்த இடைக்காலம் அதிக நாட்கள், அதிக வருஷங்கள் நீடிக்கவிடக் கூடாது. நீடிக்க நீடிக்க மக்களிடையே அதிருப்தி வளர ஆரம்பிக்கிறது.

இதற்கு உதாரணமாக எவ்வளவோ திருஷ்டாந்தங்களைக் கூறலாம். நம் வீட்டிலுள்ள குழந்தைகளுக்கு ஒரு பொருள் வாங்கித் தருவதாகவோ, அல்லது ஒரு சினிமாவுக்கு அழைத்துச் செல்வதாகவோ வாக்களித்திருப்பதாக வைத்துக் கொள்வோம். அதிலிருந்து அந்தக் குழந்தை நம்மைப் படுத்தும் பாடு சொல்லத்தரமன்று. அதன் அபிலாஷை நிறைவேறுகிற வரையில் அது வாளாவிருப்பதில்லை. அது பல தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டே இருக்கும்.

அதுபோல மக்களிடம் நாட்டின் தலைவர்கள், "நாம் அனைவரும் சமமே. நம்மிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் நாமே சிருஷ்டித்துக் கொண்டவை அவைகளைத் தகர்த்தெறிவதும் நம் கையிலேயே இருக்கிறது" என்று வானளாவப் பிரசங்க மாரிகளைப் பொழிந்து மக்களிடையே சமத்துவ உணர்ச்சியை வேரூன்றும்படி செய்து விட்டு அடுத்த நேரத்திலேயே, "பொறுத்திருங்கள். நம்மிடையே உள்ள குறைபாடுகளை ஒரே கொடியில் நாம் களைந்துவிட முடியாது. கொஞ்ச நாள் கடக்கத்தான் செய்யும்" என்று கூறுவார்களேயானால் அந்தக் கூற்றை ஏற்பதற்குரிய பொறுமை சாதாரண பாமர மக்களிடம் எதிர் பார்ப்பதற்கில்லை.

மக்களிடையே மலைக்கும் மடுவிற்கும் உள்ளது போன்ற ஏற்றத்தாழ்வுகள் இருக்கையில் சமத்துவ உணர்ச்சியை முன் கூட்டியே ஏற்படுத்தி விட்டதானது சமையல் செய்வதற்கு முந்தியே விருந்தாளியை இலையில் உட்காரச் செய்த மாதிரியே.


சமையல் ஆன பிறகு அல்லது சமையல் முடியும் தறுவாயில் இலையைப் போட வேண்டுமே யன்றி அடுப்பு மூட்டாததற்கு முன்னமேயே விருந்தாளியை இலை முன் உட்கார வைத்தலாகாது.

ஆனால் இத்தகைய ஒரு நிலைமை ஏற்பட்டது. தவிர்க்க முடியாததாகும். இதற்காக நாட்டின் தலைவர்கள்மீது குறைகூறுவதற்கில்லை. ஏனென்றால் சுதந்திரப் போராட்டத்துக்காக மக்களைத் தட்டி எழுப்புவதற்காக, உற்சாகத்தை உண்டு பண்ணுவதற்காக மக்களிடையே அவர்கள் அத்தகைய பிரசாரம் செய்ய வேண்டியிருந்தது.

மேலும் மற்ற நாடுகளில் ஏற்பட்டுள்ள சாதனைகளைக் கண்டு அத்தகைய துரிதமான மாற்றங்கள் நம் நாட்டிலும் நடைபெற வேண்டுமென்று ஆசைப்படுகின்றார்கள்.

ஆனால் இன்று உண்மையில் நடைபெறுவதென்ன! காங்கிரஸ் கட்சி பதவியேற்று ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகின்றன. மக்கள் நம்பிக்கையிழந்து வருகிறார்கள். மனச் சோர்வே எங்கும் காணப்படுகிறது. இயற்கைக் காரணங்களாலும் இதர கஷ்டங்களாலும் பல்வேறு பிரச்னைகளைக் காங்கிரஸ் சர்க்கார்களால் தீர்க்க முடியவில்லை. பொருளாதாரச் சீர்திருத்தத்தைக் கொண்டு வருவதில் காங்கிரஸ் தயக்கம் காட்டுகிறது. சுயநல வர்த்தகர்களின் நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன. காங்கிரஸின் நிதிக் கொள்கையும் வரி விதிப்புக் கொள்கையும் மக்களுக்கு நன்மை பயக்கவில்லை.

நிலப் பிரச்னை சுமுகமாகத் தீர்ந்தபாடில்லை. தொழிலாளர் நிலையும் பழையபடியே இருந்து வருகிறது. விலைவாசிகள் விஷம்போல் ஏறி வருகின்றன. வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகி வருகிறது. பணக்காரர்கள் மேலும் பணத்தைக் குவித்து வருகின்றனர். ஏழைகள் மேலும் மேலும் ஏழைகளாகி வருகின்றனர். மிகப் பெரும்பான்மையோர் மித மிஞ்சிய வறுமையிலும் ஒரு சிலர் மித மிஞ்சிய செல்வத்திலும் இருந்து வருகின்றனர். எங்கும் ஒரே தேக்க நிலை நீடித்து வருகிறது. நிர்



வாக இயந்திரமும் பழையபடியே முறையிலேயே ஓடிக் கொண்டிருக்கிறது. ஒருவிதமான சீர்திருத்தமும் ஏற்படக் காணோம். ஜமீன் ஒழிப்பும் நிலப் பிரச்னைக்குச் சாசுவதமான பரிகாரமாக மாட்டா. நாட்டின் பெரும் தொழில்கள் தனிப்பட்ட பெரு முதலாளிகளின் கையில் சிக்குண்டு கிடக்கின்றன. சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்துக்கும் மக்கள் பூரண ஒத்துழைப்பு கிடைத்தபாடில்லை. சுதந்திரத்துக்குப் பின் பெரிய சம்பளங்கள் அதிகரித்து விட்டன. கவர்னர்கள், ராஜப் பிரமுகர்களின் அந்தஸ்துக்காக ஏராள பணம் செலவிடப் படுகிறது. மத்திய சர்க்காரிலும் சரி, ராஜ்ய சர்க்கார்களிலும் சரி மந்திரிகள், டெபுடி மந்திரிகள், பார்லிமெண்டரி காரியதரிசிகள் பெருகியவாறே இருக்கிறார்கள். மேல்சபைகள், விரித்தும் செய்யப் படும் செலவினங்களும் ஏழை இந்தியாவால் தாங்க முடியாதவையே.

இத்தகைய மந்த நிலையைப் போக்கி உறங்கிக் கிடக்கும் மக்களைத் தட்டி யெழுப்பவல்லது சோஷலிஸ மந்திரமே யாகும். சோஷலிஸம் இன்றே இப்பொழுதே நிலைநாட்டப்படும் என்று உத்தரவாதம் தரப்படுமேயானால் மக்கள் வீறுகொண்டு எழுவார்கள். மக்கள் மனத்திலே புத்துணர்ச்சி கரை புரண்டோடும். அப்பொழுதே மாபெரும் சாதனைகளைச் செய்வது சுலபமாகும். மக்கள் மனப்பூரண ஒத்துழைப்பின்றி ஒன்றும் செய்ய இயலாது. அதைப் பெறுவது சோஷலிஸத்தை அமல் நடத்துவதன் மூலமே சாத்தியமாகும்.

முதலாளித்துவம், கம்யூனிஸம், ஜனநாயகம் காந்தீயம், ஸர்வோதய சமாஜ தத்துவம் ஆகிய இவைகளிலுள்ள நல்ல அம்சங்களை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்ற ஒரு தத்துவம் சோஷலிஸம். அதே சமயத்தில் இவைகளுள் சிலவற்றிலுள்ள தீய அம்சங்கள் இதில் எள்ளளவும் கிடையாது. இன்றுள்ள சூழ்நிலையில் சோஷலிஸத்தை ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழி யில்லை. இந்தியாவில் சோஷலிஸ இயக்கத்தை நடத்தும் தலைவர்களும் அறிவுத்திறனும் நேர்மை ஒழுக்கமும் ஒருங்கே அமையப் பெற்றவர்கள். மேலும் ஒரு விசேஷமென்னவென்றால் அவர்கள் அதிக வயோதிகர்களுமல்ல. நாட்டை நல் வழியில் அழைத்துச் செல்லக்கூடிய அருங்குணங்கள் அவர்களிடம் மிகுந்துள்ளன. அவர்கள் அனைவரும் காந்திஜியிடம் பயிற்சி பெற்று அவரது ஆசிக்கும் பாத்திரமானவர்கள். காந்தீயப் பாதையினின்று இம்மியும் வழுவ மாட்டார்கள் என்று மக்கள் பூரணமாக நம்பலாம். மக்களிடையே நல்ல செல்வாக்கும் உடையவர்கள். நாட்டை அமைதியான முறையில், பலாத்காரமற்ற முறையில், அதே சமயத்தில் அதிவேகமாகவும், துரிதமாறுதல்களைச் செய்து நடத்திச் செல்லவல்ல ஆற்றலும் அறிவும், திறமையும் உறுதியும் நாணயமும் நேர்மையும் மேற்படி தலைவர்களிடம் நிரம்ப உண்டு.

சோஷலிஸ்ட் கட்சி இந்தியாவின் ஆளும் கட்சியாக வரும் நாள் இந்தியா, ஆசியா இவைகளுக்கு மட்டுமேயன்றி உலகத்தின் சரித்திரத்திலேயே முக்கியமாகக் குறிப்பிடக்கூடிய ஒரு பொன்னாளாகும். காரணம் என்னவென்றால், அந்நாள் உலகத்தின் சரித்திரப் போக்கையே மாற்றப் போகிறது. இந்தியா இப்பொழுதுள்ள நிலைமையைக் காட்டிலும் இன்னும் மாபெரும் சக்தியாக அன்று திகழப் போகிறது. இன்று உலக அரங்கில் இரண்டு சக்திகளே மேலோங்கி இருக்கின்றன. அவைதான் முதலாளித்துவமும் கம்யூனிஸமுமாகும். ஆனால் அவைகளையும் விஞ்சக் கூடிய ஒரு பலம் வாய்ந்த சக்தி இன்னும் உருவாக வில்லை. அது இப்பொழுது இளமைப் பருவத்தில் இருக்கிறது. இந்தியாவில் சோஷலிஸ அரசு அமைந்தால் அச் சக்தி பலம் வாய்ந்ததாகி உலகத்தின் ஏனைய வல்லரசுகளுக்கு வழிகாட்டியாகவும் ஓர் எடுத்துக் காட்டாகவும் இருக்கப் போகிறது என்பதில் ஐயமில்லை. பிறகு ஏனைய நாடுகளும் இந்தியாவைப் பின்பற்றித் தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்ள வேண்டிய சூழ்நிலையும் நிர்ப்பந்தமும் ஏற்படும்.

இந்தியாவில் உருவாகும் சமதர்மம் யதேச்சாதிகாரக் கலப்பற்ற பொதுவுடைமையும் முதலாளித்துவக் கலப்பற்ற ஜனநாயகமும் அன்பு, அறநெறி வழிப்பட்ட காந்தீய சர்வோதயமும் கலந்த ஒரு தத்துவமாகவே உருக்கொள்ளும். அது உலகத்துக்கே ஓர் எடுத்துக் காட்டாக அமையப் போவது என்பது உறுதி.


இன்று உலகில் சில நாடுகளில் பொருளாதார சமூகத் துறையிலே மட்டும் ஜனநாயகமும் நிலவி வருகிறது. மற்றும் சில நாடுகளில் பொருளாதார சமத்துவம் இல்லை. சமூக நியாயப் பொரு



## காலனின் கொடுமை

பழனி ஆயக்குடியைச் சேர்ந்த ஸ்ரீ எஸ். பி. பாலகிருஷ்ணன் எம். பி. அவர்கள் செல்வக் குமாரி ராஜம் தெய்வானை நவம்பர் மாதம் 17-ந்தேதி யன்று 'லுக்மியா' என்ற கொடிய நோய்க்குத் திடீரென்று பலியாகி விட்டாள். இருபது வயதுகூட நிரம்பாத இந்தப் பெண்மணி தேச பக்தியும், பொதுநல சேவையும் கொண்டவள். தம்முடைய ஒரே புதல்வியை இழந்து நிற்கும் ஸ்ரீ பாலகிருஷ்ணனுக்கும் அவர் குடும்பத்தாருக்கும் யார்தான் ஆறுதல் கூற முடியும்? 'வாழ்க்கை நிலையாமை' என்று பெரியோர்கள் சொல்லிப் போனதை நினைவுகூர்ந்து மனதைத் தேற்றிக்கொள்ள வேண்டியதுதான்.



மஹாகவி காளிதாஸரின்

# ரகுவம்ச
# மஹா காவ்யம்

(ஸர்க்கங்கள் 1 - 19)

தேவநாகரியில் மூலம், தமிழில் எழுதிய விரிவான முன்னுரை, பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை, பதஸாரம் இவற்றுடன்

★

பேராசிரியர்

வே. ஸ்ரீ. வேங்கடராகவாச்சாரியார்

அவர்களால் பதிப்பிக்கப்பெற்றது.

★

டாக்டர்

ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர்

அவர்களின் முகவுரையுடன் கூடியது.

1,200 பக்கங்கள் :: அழகான பைண்டிங்

விலை : ரூ. 12-8-0

ரிஜிஸ்தர் தபால்மூலம் பெற விரும்புவோர் ரூ. 14-2-0 மணியார்டர் செய்க. வி. பி. பி. மூலம் அனுப்ப இயலாது.

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி,
சென்னை-17.

★

எம். தாமோதரம் கம்பெனி,
அப்பா பில்டிங்,
9/286, எஸ்பிளனேட், சென்னை-1.

# நீரிழிவு

## ஏழு நாட்களில் குணமாகும்

•

சிறு நீரில் அதிக சர்க்கரை இருப்பின் **நீரிழிவு (DIABETES)** என்று சொல்லப்படும் இப் பயங்கர வியாதியுள்ள நோயாளி நாளுக்கு நாள் தன் முடிவு நெருங்குவதைக் காண்கிறான். இதை நிவர்த்திக்க டாக்டர்கள் இன்ஸுலின் இன்ஜக்ஷன் ஒன்றைத்தான் கண்டு பிடித்தார்கள். இதைக் குத்திக் கொள்வதால் பூரண குணம் ஏற்படுவதில்லை; இன்ஜக்ஷன் மருந்து உள்ள வரை சர்க்கரை தற்காலிகமாக மறைந்து விடுகிறது.

அபரிமிதமான தாகம், பசி, அடிக்கடி சிறு நீர் சர்க்கரையுடன் போதல், எரிச்சல் ஆகியவைகள் இந்த வியாதியின் முக்கிய அறிகுறிகள். வியாதி முற்ற ராஜப் பிளவை கட்டிகள், சாலேஸ்வரம் இதர கொடிய வியாதிகள் ஏற்படும். வீனஸ் சார்ம் நவீன விஞ்ஞான அதிசயமாகும். இதை உபயோகித்ததால் பலர் மரணத்தினின்று தப்பியுள்ளனர்.

வீனஸ் சார்ம் உபயோகித்த 2-வது அல்லது 3-வது நாளில் சிறுநீரில் சர்க்கரை குறைந்து அடிக்கடி போகும் சிறு நீரும் குறைகிறது. 3-வது அல்லது 4-வது நாளில் வியாதி பாதிக்குமேல் குணமடையும். இந்த மருந்துக்குப் பத்தியம் கிடையாது; இன்ஜக்ஷன் கிடையாது. நன்கு விளக்கும் இலவச ஆங்கில புத்தகத்திற்கு எழுதிக் கேளுங்கள்.

•

***50 வில்லைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 6-12-0***

*(பாக்கிங், தபால் செலவும் இனாம்)*

•

**வீனஸ் ரிஸர்ச் லாபரட்டரி (K.M.)**

**தபால் பெட்டி நெ. 587, கல்கத்தா**




பிரசித்தி பெற்ற ஸ்விஸ் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்ட கைக் கெடிகாரங்கள்



கைக் கெடிகாரம் பாக்கெட் கெடிகாரம், டைம் பீஸ் ஒவ்வொன்றும் 5 வருஷ உத்தரவாதம்

| | முந்தின விலை | தற்போதைய விலை |
|---|---|---|
| பாக்கெட் வாட்ச (ஆஸ்ட்ரியா) | 24 | 10/- |
| அயல் நாட்டு அலாரம் டைம்பீஸ் | 30 | 14/- |
| உயர் ரகம் அலாரம் டைம்பீஸ் | 35 | 16/- |

No. 501  Size 7¾

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 75 | 36/- |
| 15 ஜுவல்ஸ் ,, 20 மைக்ரோன்ஸ் | 90 | 40/- |

No. 502  Size 10½

| | | |
|---|---|---|
| 15 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 80 | 38/- |
| 17 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 90 | 44/- |
| 21 ஜுவல்ஸ் வாட்டர்ப்ரூப் | 130 | 60/- |

No. 503  Size 6¾

| | | |
|---|---|---|
| 5 ஜுவல்ஸ் க்ரோம்கேஸ் பிராந் | 42 | 20/- |
| 5 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 52 | 25/- |
| 15 ஜுவல்ஸ் ரோல்ட் கோல்ட் | 70 | 32/- |

குறைந்தவிலையில் பவுண்டன் பேனாக்கள்



ஸ்வான் கோல்ட் நிப் பவுண்டன் பேனா ரூ. 14/-
கோல்ட் கேப் ரூ. 18/- ஷீபர்ஸ் பேர்டு ரூ. 18/-
ராஜா (ஜெர்மன்) ரூ. 10/- வெள்ளிப் மாடல் ரூ. 6/-
வில்லன் ரூ. 5/-, பார்க்கர் ஜுவலியர் மாடல் (ஜும்போ) ரூ. 7/-

**PIONEER WATCH CO.,**
Post Box No. 11428. CALCUTTA - 6

ளாதார சமத்துவம் இல்லை. சமூக நியாயம் வழங்கப்படவில்லை. இன, நிறவேறுபாடுகள் மலிந்திருக்கின்றன. ஆனால் அரசியலில் மட்டும் ஜனநாயகம் கடைப்பிடிக்கப் படுகிறது.

ஆனால் நம் இந்தியாவில் சோஷலிஸம் நிலைநிறுத்தப்போகும் ஜனநாயகம் அரசியல் துறையில் மட்டுமின்றிப் பொருளாதார, சமூக, கல்வி, கலாசாரத் துறைகளிலும் பரவி உலகத்தின் ஏனைய நாடுகளுக்கே ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகச் சீரிய படிப்பினையாக விளங்கப் போகிறது.

இன்று உலக மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருப்பது என்னவென்றால் ஜனநாயகம் என்ற தத்துவம் வெற்றிக் கொடி நாட்டப் போகிறதா அல்லது அது மக்கள் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய இயலாத வலிவற்ற கொள்கை என்று கைவிடப்படப் போகிறதா என்பதே யாகும். ஜனநாயகம் பல்வேறு நாடுகளிலும் சோதனைக் கட்டத்தில் இருக்கிறதே தவிர இன்னும் பரீட்சையில் பூரண வெற்றி பெற்றதாக ஒருவராலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை.

முக்கியமாக இந்தியாவில்தான் பரந்த அளவில் அது சோதனை செய்யப்பட்டு வருகின்றது. அதை வெற்றி கொள்ளச் செய்ய வல்ல ஆற்றல் சமதர்மத்துக்கே உண்டு.

தயக்கமும் தாமதமும் ஜனநாயகக் கொள்கையையே குலைத்துவிடும் பரம விரோதிகள். துரிதமான மாறுதல்களைச் செய்து பல்லோரும் ஜனநாயகத்தை நம்பும்படி அதில் வைத்த நம்பிக்கை இழக்காதபடி ஜனநாயகத்துக்கு அரண் செய்ய வல்லது சோஷலிஸமே யாகும்.

ஆகவே ரத்தப் புரட்சியைத் தவிர்க்கவும் குழப்பம், அமைதி யின்மை, கம்யூனிஸ பயம் இவைகளிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், மக்களின் மனச்சோர்வைப் போக்கிப் புதிய உற்சாகத்தையும் நம்பிக்கையையும் உண்டு பண்ணவும், உலக நாடுகளுக்கு • வழிகாட்டியாகவும், இணையற்ற ஓர் எடுத்துக்காட்டாக விளங்கவும் உலகில் ஜனநாயகத்தை வெற்றி பெறச் செய்யவும், கடைசியாக உலகின் சரித்திரப் போக்கையே நேரான பாதையில் திருத்தி யமைக்கவும் சோஷலிஸம் வேண்டும்.

# படித்துப் பாருங்கள் !

## மனீஷா பஞ்சகம்

பாரத தேசத்தில் ஞான ஒளியைப் பரப்பி, அஞ்ஞான இருளை அகற்றிய புண்ணிய புருஷர் ஆதி சங்கரர்.

அவர் உலக மக்களின் நன்மையைக் குறித்து எத்தனையோ ஞான நூல்களும், பக்தி நூல்களும் வடமொழியில் இயற்றி யிருக்கிறார். அவற்றுள் மனீஷா பஞ்சகமும் ஒன்று. ஐந்து சுலோகங்கள் கொண்ட இந்தச் சிறு நூலில், அத்வைதக் கொள்கையை அழகாக வலியுறுத்தி யுள்ளார். தேவநாகரியில் சுலோகமும், தமிழில் தாத்பர்யமும் கொடுக்கப்பட்டிருப்பது படிப்பவர்களுக்கு மிகவும் சுலபமா யிருக்கும்.

தமிழில் தாத்பர்யம் தந்தவர்: டி. கே. பத்மநாபன். பிரசுரம்: ஸ்ரீ பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை,—5; விலை அணா 0—12—0.

## விவசாய இலாக்காப் பிரசுரங்கள்

மிளகு உற்பத்தி ஒருகாலத்தில் தென்னிந்தியாவின் ஏகபோக உரிமையாக இருந்து வந்தது. இந்தியாவின் புராதன இலக்கியங்களில் கூட மிளகுக்கு முக்கிய ஸ்தானம் அளிக்கப் பட்டிருக்கிறது. பண்டைய காலத்தில் மிளகின் மூலம் தான் இந்தியாவுக்கும் ஐரோப்பா, அரபு நாடுகள் முதலியவற்றுக்கும் முதன் முதலாக நெருங்கிய வர்த்தகத் தொடர்பு உண்டாயிற்று. வருஷத்தில் எண்பது அங்குலத்துக்கு மேல் மழைபெய்யும் பிரதேசங்கள்தான் மிளகு உற்பத்திக்குச் சிறந்தவை.

மிளகாய் இந்தியாவில் பரம ஏழைகள் முதல் பெரும் செல்வந்தர்கள் வரையில் எல்லோராலும் உபயோகிக்கப் படுகிறது. ஆனால் அது பதினேழாம் நூற்றாண்டில்தான் தென் அமெரிக்காவிலிருந்து முதன் முதலாக இந்தியாவில் இறக்குமதியாகத் தொடங்ியது.

உருளைக் கிழங்கு ஐரோப்பியர்களின் முக்கிய உணவுப் பொருளாக இருக்கிறது. உலகத்தில் உற்பத்தியாகும் உணவுப் பொருள்களில் உருளைக் கிழங்குதான் முதல் ஸ்தானம் வகிக்கிறது.

புகையிலை என்றால் என்ன என்பதே பதினாறும் நூற்றாண்டு வரையில் இந்தியர்களுக்குத் தெரியாது. அமெரிக்காவி லிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான புகையிலையை, நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்தான் முதன் முதலாக இந்தியாவில் உற்பத்தி செய்ய ஆரம்பித்தார்கள். இவ்வளவு குறுகிய காலத்துக்குள் புகையிலை உற்பத்தியில் இந்தியா உலகிலேயே இரண்டாவது ஸ்தானம் வகிக்கிறது.

இவைபோன்ற விவரங்கள், சென்னை சர்க்கார் விவசாய இலாக்கா வெளியிட்டுள்ள பிரசுரங்களில் அடங்கி யிருக்கின்றன. மேற்படி பொருள்களை ஏராளமாக உற்பத்தி செய்வதற்கு உபயோகமான பல யோசனைகள் அந்தப் பிரசுரங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

இவற்றைத் தவிர நெல், கரும்பு, நிலை, மஞ்சள், பருத்தி, பழங்கள், கறிகாய்கள், புல், தழை என்ற தலைப்புகளிலும் விவசாய இலாக்கா, விவசாயிகளுக்கு லாபகரமான குறிப்புகள் அடங்கிய பல பிரசுரங்களை வெளியிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பிரசுரத்தின் விலை மூன்று அணா. தாலுகா விவசாயக் காரியாலயங்களில் கிடைக்கும்.

## செங்கோட்டை ஆவுடையம்மாள்

(பக்தி, ஞான, வேதாந்தப் பாடல் திரட்டு)

ஆஸ்திகப் பெருமக்களின் பக்தி உணர்ச்சியைத் தூண்டி, அவர்களுக்குப் பாரமார்த்திக ஞானத்தை அருளும் பக்திமயமான கீர்த்தனைகள் நிறைந்திருக்கின்றன இந்நூலில். ஆவுடையம்மாள் நீண்டகாலத்துக்குமுன் இருந்த பக்தமணி. அவரது கீர்த்தனங்கள் ஏட்டுப் பிரதிகளில் கிடைத்தவற்றைத் தொகுத்து அச்சிட்டிருக்கின்றனர். இது இலவச வெளியீடு.

கிடைக்குமிடம்: வி. பிச்சு அம்மாள், தளவாய் தெரு, வடிவீசுரம், நாகர் கோயில்.

# சிந்திய பால்

### கே. வி. முருகன்

ராஜாராமனிடத்தில் எனக்கு ஒரு அலாதி பிரியம் உண்டு. பொதுவாக மிகவும் நல்ல குணம் படைத்த வாலிபன். அடிக்கடி என்னிடம் வந்து ஆலோசனைகள் கேட்பான். கேட்பதோடு மட்டுமல்ல; அதன்படி நடக்கவும் செய்வான். என்னிடம் அவன் கூறாத விஷயமில்லை. நல்லதோ கெட்டதோ, எதையும் மறைக்காமல் கூறுவான். எனக்குத் தெரியாமல் அவன் உள்ளத்தில் எந்த விஷயமும் மறைந்து கிடக்காது. கள்ளங் கபடு இல்லாதவன். ஒளிவு மறைவென்பதே அவனிடம் கிடையாது. தனது காதல் விவகாரங்களைக் கூட என்னிடம் கூறுவான் என்றால், வேறு என்ன ரகசியத்தைத் தனக்குள் வைத்துக் கொள்வான்!

அன்று என்னிடம் அவன் வரும்போது ஆள் ரொம்பவும் மாறுபட்டிருந்தான். அவன் கண்கள் கலங்கி யிருந்தன. உதடுகள் துடி துடித்தன. வழக்கமாகப் பொங்கி வரும் புன்னகை எங்கோ மறைந்து விட்டன. எதையோ என்னிடம் கூறத் துடித்து வந்திருக்கிறான் என்று தெரிந்தது.

''வாப்பா, ராஜாராமா! உட்கார். சாவதானமாக வந்த விஷயத்தைக் கூறு. அவசரம் ஒன்றுமில்லை!'' என்றேன்.

பொருமினான். பெருமூச் செறிந்தான். ஆனால் வார்த்தைகள் மட்டும் வாயிலிருந்து வெளிவரவில்லை. அவனை ஆசுவாசப் படுத்தி, வேறு பல பேச்சுக்களைக் கொடுத்து, ''விஷயத்தைக் கூறு'' என்றேன். ஒருவாறு கூறினான்.

ராஜாராமனைச் சில நாட்களாகவே காதல் வியாதி பிடித்திருந்தது. ஒரு இளம் பெண் அவன் வீட்டுக்கு எதிர் வீட்டில் இருக்கிறாளாம். இருவரும் மாடியில் இருந்து ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்வார்களாம். சில நாட்களில் ஒருவரை ஒருவர் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். கடைசியில் பேசும் அளவுக்கு விஷயம் முற்றி விட்டதாம். மதுரையைப் போன்ற பெரிய நகரங்களில், இப்படிப்பட்ட சம்பவங்கள் யாருடைய கவனத்தையும் கவராதது ஒன்றும் ஆச்சரியமில்லை. அங்கு எவ்வளவோ ஜனக் கூட்டம். ஒவ்வொருவருக்கும் எவ்வளவோ வேலைகள். இவைகளுக்கிடையே இதையெல்லாம் யார் கவனித்துக் கொண்டிருக்கப் போகிறார்கள்! ஆக இவர்களின் நட்பு வெகு வேகமாக வளர்ந்து வந்தது. அவளைப் பற்றித் தினம் தினம் என்னிடம் வந்து கூறி வர்ணிப்பான். அவள் என்னென்ன பேசினாள். அவள் எப்படி யெப்படிப் பேசுவாள், எப்படி யெல்லாம் சிரிப்பாள், எப்படி நடப்பாள், என்னமாக அழுவாள் என்றெல்லாம் என்னிடம் கூறி ஆனந்தம் அடைவான்! தினம் இந்தக் கதையைக் கேட்டு, நான் சலிப்படைந்திருந்த போதிலும், ராஜாராமன் ஆனந்த மடைகிறான் என்பதற்காகப் பொறுமையுடன் கேட்டு வைப்பேன்.

இப்படி வளர்ந்து வந்த அவர்கள் காதலில், கடைசியாக முறிவு ஏற்பட்டு விட்டது; கதைகளில் வருவதுபோல! இதைக் கூறத்தான் அவ்வளவு பதட்டத்துடன் வந்திருக்கிறான்.

''அண்ணா! இந்த ஜாதி மதமெல்லாம் என்று தான் நமது நாட்டை விட்டு ஒழியப் போகிறதோ! அன்றுதான் இந்த நாட்டுக்கு விமோசனம். அன்று தான் என்போன்ற இளைஞர்கள் வாழ முடியும். அன்றுதான் உண்மைக் காதலின் உயர்வு இந்த நாட்டில் பிரகாசிக்கும்!......''

இவ்வாறு பிரசங்கமே செய்து கொண்டு போனான். அவனுக்கிருந்த கோபத்தில் இந்த ஜாதி மதம் மட்டும் அவன் கையில் கிடைத்திருந்தால், தூக்குத் தண்டனைக்குக் கூடப் பயப்படாமல் கொலையே செய்திருப்பான்!

''ராஜாராமா! பதட்டப் படாதே. விஷயத்தைச் சொல். நீ கொண்டது உண்மைக் காதல் தானா! நீங்கள் இருவரும் உளமாறக் காதலித்தீர்களா! அல்லது பசித்தவனுக்குச் சாப்பாட்டின் மேல் ஏற்படும் காதல் போன்றதுதானா! இந்தக் காலத்தில் ஏதப்பா உண்மைக் காதல்!''

''என்ன அண்ணா நீங்களே இப்படிக் கேட்கிறீர்கள்! என்னைப் பரிபூரணமாக அறிந்த, எங்களின் காதலைப் பற்றித் தெரிந்த நீங்களா இப்படிக் கேட்பது! எங்களுடைய காதல் படிப்படியாக வளர்ந்தது. மாசு மறுவில்லாதது. அழகை எதிர்பாராதது. அன்பு ஒன்றையே ஆதர்சமாகக் கொண்டது......!''

''அதெல்லாம் சரி. பிரதிப் பிரயோசனத்தை எதிர் பார்த்தது உங்கள் காதல். இல்லையா!''

''ஏன் அண்ணா அப்படிக் கூறுகிறீர்கள்! எங்கள் காதல் முறிந்ததற்குக் காரணம் ஜாதிப் பிரிவுதான். நான் வேறு ஜாதி, அவள் வேறு ஜாதி. இந்த ஜாதி தான் எங்கள் காதல் பாதையில் குறுக்கே நிற்கிறது. நாங்கள் வழி தெரியாது தவிக்கிறோம்.''

''அது சரி. நீங்கள் இருவரும் வெவ்வேறு ஜாதி தானே ஒழிய மதம் வேறுபாடு இல்லையே!''

''சரிதான், ஜாதி விட்டு ஜாதி என்பதே கஷ்டமாக இருக்கிறது. இனி மதம் விட்டு மதம் என்றால் அது நடக்கக்கூடிய காரியமா! அல்லது நினைக்கத்தான் முடியுமா!''

''சரி! இப்போது நாம் 1953-ம் வருடத்தில் இருக்கிறோம். 1954 கூடப் பிறக்கப் போகிறது. நாம் சுதந்திர நாட்டில் வாழ்கிறோம்.''

''இதென்ன பேச்சை எங்கேயோ கொண்டு போகிறீர்களே! சுதந்திரத்துக்கும் காதலுக்கும் என்ன சம்பந்தம்!''

''பதறாதே! இன்றைக்குச் சற்றேறக்குறைய இருபத்தேழு வருடங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவத்தைப் பற்றி உன்னிடம் கூறப்போகிறேன். அதில் சம்பந்தப்பட்டவர்கள் இப்போது எங்கெங்கு இருக்கிறார்களோ தெரியாது. ஒருவேளை சிலர் இப்போது இல்லாமலும் இருக்கலாம். எல்லாவற்றையும் கேட்டுவிட்டு அப்புறம் உன் அபிப்பிராயத்தைக் கூறு.''

''சரி, அண்ணா! கூறுங்கள் கேட்கிறேன்'' என்றான் ராஜாராமன் ஆவலுடன்.

* * *

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபத்தைந்தாம் வருட இறுதி என்று நினைக்கிறேன். அப்போது நான் உயர்தரப் பாடசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். என் சிநேகிதன் ஒருவன்— பெயர் சீனிவாசன்—கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். அவன் சொந்த ஊர் சாத்தூருக்குப் பக்கத்தில். நள்ளி என்ற கிராமம். சீனிவாசனுக்குத் தாய் தந்தையர் எல்லோரும் இருந்தனர். அந்தக் காலத்தில் கிராமத்திலிருந்து ஒரு பையன் நகரில் வந்து கல்லூரியில் படிப்பது என்றால்,

அவர்கள் குடும்பம் எவ்வளவு பெரிய குடும்பமாக இருக்கும் என்று நீயே சிந்தித்துப் பார்த்துக் கொள். சீனிவாசன் தந்தைக்கு ஏராளமான நில புலன்கள் உண்டு. விவசாயத்தில் நிறைய வருமானம். அந்தக் கிராமத்திலேயே பெரிய குடும்பம் அவர்களதுதான். இத்தகைய பெரிய குடும்பத்துப் பையன், மதுரையில் வாடகைக்கு ஒரு அறையை எடுத்துக் கொண்டு அதில் வசித்துக் கொண்டு கல்லூரியில் படித்து வந்தான். அவன் அறையின் பக்கத்தில் ஒரு வாசகசாலை. அங்கு அடிக்கடி நான் செல்வதுண்டு. எப்படியோ எனக்கும் சீனிவாசனுக்கும் நட்பு ஏற்பட்டுவிட்டது. நட்பு முற்றியது. ஒழிந்த நேரங்களில் சீனிவாசன் அறைக்குச் சென்று விடுவேன். அங்கேயே கிடப்பேன். எங்கள் இருவருக்கும் பிரிக்க முடியாத நட்பு. எதை எதையோ பேசிக் கொண்டிருப்போம். பேசப் பேச விஷயம் கிடைத்துக் கொண்டே இருக்கும். நாங்கள் எந்த விஷயந்தான் பேசுவது; எதைப் பேசக் கூடாது என்று பார்ப்பதில்லை. அந்த வருடம் சீனிவாசனுக்குப் பரீட்சை நெருங்கி விட்டது. பி. ஏ., என்ற எழுத்துக்களைப் பெறுவதற்கு இன்னும் சில மாதங்கள்தான் இருந்தன. பரீட்சைக்கு மும்முரமாகப் படிக்க வேண்டிய நேரத்தில் சீனிவாசன் அதைச் செய்யவில்லை!

தனிமையாயிருக்கும்போது அவன் முகத்தைப் பார்த்தால், பேயறைந்தது போலச் சோம்பிக் கிடக்கும். எதையோ எண்ணி எண்ணி மனம் புழுங்குவான். இடை இடையே பெருமூச்செறிவான். இதெல்லாம் எனக்கு ஒன்றும் விளங்காது. இன்றானால் சுலபமாகச் சொல்லி விடுவேன்—அது காதல் வியாதி என்று! ஆனால் அன்றோ காதல் என்பது கறுப்பா, சிவப்பா என்று நான் அறியாத காலம். அவனைத் தூண்டித் தூண்டிக் கேட்டேன். ஒருவாறு விஷயத்தைக் கூறினான்.

அவனுடன் கல்லூரியில் லில்லி என்ற ஒரு கிறிஸ்தவப் பெண் படித்துக் கொண்டிருந்தாள். அவள் பேரில் காதல் கொண்டு விட்டான். அவளும் இவன் பேரில் தீராக் காதல் கொண்டிருந்தாளாம். சீனிவாசன் அதிர்ஷ்டமோ, அல்லது துரதிர்ஷ்டமோ இவன் தங்கியிருந்த அறைக்கு அடுத்தாற்போல் மாதா கோவில் இருந்தது. ஞாயிற்றுக் கிழமைகளில் அவள் கோவிலுக்கு வருவாள். பரம பிதாவைத் தொழ வருபவள், முதன் முதலில் காதலனைப் பார்த்துத்தான் தொழுவாள். ஞாயிற்றுக் கிழமைகளில் மட்டும் வழக்கத்துக்கு விரோதமாக சீனிவாசன் சுறுசுறுப்புடன் விளங்குவான். அதிகாலையிலேயே எழுந்து விடுவான். தன்னை அலங்கரித்துக் கொள்வதில் அதிக நேரம் செலவழிப்பான். அவள் வருவதற்கு ஒரு மணி நேரத்துக்கு முன்னதாகவே இருந்து வாசலுக்கும் உள்ளுக்குமாக நடை பழகுவான்.

அன்ன நடை போட்டு வரும் லில்லியின், மானென மருண்டு விழிக்கும் கண்கள், அகன்று விரிந்து எங்கே சீனிவாசன் என்று தேடும். ஒரு கணம் இருவர் கண்களும் ஒன்றை யொன்று தழுவும். நிலைகுத்தி நிற்கும் லில்லியின் உதடுகள் மெல்லென முல்லையைப் போல புன்னகையைத் தவழ விடும். சீனிவாசனின் கை, வழ வழவென்றிருக்கும் கிராப்பைத் தடவும். அவள் இதழ்க் கடையில் தோன்றி மறையும் குறு நகை கண நேரந்தான் என்றாலும் சீனிவாசன் உலகையே மறந்து விடுவான். அந்த ஒரு கண நேரத்தில் இருவர்களுக்கும் சுற்றியுள்ள உலகமே கண்ணில் படாது. மின்னலென மறைந்து விடுவாள்.

ஒரு ஞாயிற்றுக் கிழமையன்றுதான் இதை நான் பார்க்க நேர்ந்தது. அன்று அவன் அறையில் மறைந்து நின்று கவனித்தேன். அன்றைய நிலையில், என்னுடைய வயதுக்கு, பெண்களின் அழகைப் பற்றி எவ்வித அபிப்பிராயமும் எழ முடியாது. கூறவும் முடியாது. இருந்தும் கூட, லில்லியின் அழகு என்னை உலுக்கிவிட்டது. கொடி போன்ற அவள் தளர் நடையும், குளிர் முகமும், நீண்ட அவள் விழிகளின் மயக்கும் பார்வையும், எனக்கு அவள் அழகுதான் என்பதை உணர்த்தின. சீனிவாசனைக் கண்டு மலர்ந்த அவள் அதரங்கள், உதிர்த்த முறுவல்கள் என்னை மயக்கம் போட்டு விழச் செய்துவிடும் போலிருந்தன.



சீனிவாசனுக்கு ஏன் இன்னும் பைத்தியம் பிடிக்கவில்லை என எண்ணினேன்! அன்று பூராவும் சீனிவாசன் அறையில் சுருண்டு கிடந்தான். சிந்திக்க முடியாமல், செயலற்றுக் கிடந்தான். என்னிடம் தன் கதையைக் கூறிக் கூறிப் புலம்பினான். எனக்கானால் வேடிக்கையாய் இருந்தது!

"அவளோ கிறிஸ்தவப் பெண். என் தந்தையோ கிராமத்தில் பெரிய மனிதர். பரம்பரையாகப் பெரிய குடும்பம். மதிப்புள்ள குடும்பம். இந்த நிலையில் என் எண்ணம் ஈடேறுமா! லில்லி எனக்குக் கிடைப்பாளா!" என்று ஏங்குவான்

"அவளை மறந்து விடுவதுதானே" என்றேன்.

"சீனிவாசன் என்னைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கி, இனிமேல் இப்படிப் பேசினாயானால், நான் என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது" என்று சீறினான்.

எனக்கு அப்போது விஷயம் அவ்வளவாகப் புரியாது. இந்து மதம், கிறிஸ்தவ மதம் இரண்டிற்கும் உள்ள முரண்பாட்டை நான் அன்று அறிந்திலேன். ஆக எனக்கென்னமோ வேடிக்கையும், விளையாட்டுமாகத்தான் இருந்தது.

பரீட்சை நெருங்கிவிட்டது. இன்னும் இரண்டே நாட்கள். சீனிவாசன் அன்று மகா குதூகலத்துடன் வந்தான். வழியில் கண்ட என்னை, "வா! வா! அறைக்கு" என்று இழுத்து வந்தான். என் கையைப் பிடித்து அவன் இழுத்து வந்த வேகம் அவன் உள்ளத்தின் ஓட்டத்தை உணர்த்தியது. அறையினுள் நுழைந்ததும் "என் லில்லியிடம் பேசி விட்டேன்" என்றான்.

"இதிலென்ன அதிசயம்! லில்லியோ நீயோ ஊமை இல்லையே!" என்றேன்.

"உனக்குப் புரியாது தம்பி புரியாது. இன்னும் கொஞ்ச நாட்கள் போனால் நீயும் புரிந்து கொள்வாய். அது சரி. நாளை சந்தித்து விரிவாகப் பேசத் திட்டம் போட்டுள்ளோம்" என்றான்.

"எங்கே! எப்போது!" என்று அடுக்கினேன்.

"நாளையேதான்! மாரியம்மன் தெப்பக்குளத்து நடுவில் ஒரு மண்டபம் இருக்கிறதே, நீராழி மண்டபம், அங்கேதான். அவள் தன்னுடைய தோழிகளுடன் வருவாள்......"

"அப்போ நானும் உன் கூட வருவேன்!"

"நீ இல்லாமலா! நாளைக்குத் தயாராக இரு. ஜாம் ஜாம் என்று போய் வரலாம்" என்றான்.

எனக்கு அதிலுள்ள முக்கியத்துவம் தெரியாது. 'காதலுக்கு இருவர்' என்ற பழமொழி எனக்கு அன்றென்ன தெரியும்! சீனிவாசனுக்காவது தெரிய வேண்டாமா! அவனுக்கும் தெரியவில்லை. என்னுடைய எண்ணமெல்லாம் ஒரு நாள் பொழுது அட்டகாசமாகவும், குஷாலாகவும் கழியும் என்பதில்தான்!

சீனிவாசன் அன்று இரவெல்லாம் என்ன என்ன எண்ணினானோ! எத்தனைய மனக் கோட்டைகள் கட்டினானோ யார் கண்டது! என் எண்ணத்தின் ஓட்டம் வேறு; அவன் எண்ணத்தின் கதி வேறு. ஆக இருவரும் மறு நாளை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்தோம்.

மறு நாள் தெப்பக் குளத்துக்குச் சென்றோம், கையில் சிற்றுண்டி மூட்டையுடன். படகு ஒன்று புறப்பட ஆயத்தமாய் இருந்தது. வேகமாகச் சென்றோம். தூரத்திலே எங்களைக் கண்ட பரிசல்காரன் சற்று நிறுத்தினான். படகில் ஐந்தாறு பெண்கள் வீற்றிருந்தது தூரத்திலேயே தெரிந்தது. சீனிவாசனின் நடை வேகமாகியது. என்ன அதிசயம்! அதில் லில்லியும் வீற்றிருந்தாள்.


## தண்ணீர்பேய் — எதிராய் — "ஸான்போரைஸ்ட்"




"ஸான்போரைஸ்ட்" குறியிடப்பட்ட துணி ஒருவித சரியான யந்திர உபாயத்தின் நீரில் நனைக்கவேண்டிய அவசியமில்லை.

எல்லாப் பெண்களும் கும்மாளி போட்டுக் கொண்டிருந்தனர். லில்லி மட்டும் கவலையோடு உட்கார்ந்திருந்தாள். சீனிவாசனைக் கண்டதும் அவள் முகம் மலர்ந்தது. தடாகத்தில் நிறைந்து மலர்ந்திருந்த தாமரை மலர்கள் வெட்கின!

படகு புறப்பட்டது. லில்லி பேசா மடந்தையாக உட்கார்ந்திருந்தாள். சீனிவாசன் தண்ணீரில் பார்வையைச் செலுத்திக் கொண்டு வந்தான். சீராழி மண்டபத்தில இறங்கினோம்.

அங்குதான் எத்தனை விதம் விதமான பூச்செடிகள். அடர்ந்த மரங்கள். அழகு அழகான செடிகள் கொடிகள். செயற்கையினால் இயற்கையன்னையின் அழகை மிகை படச் செய்திருந்த விந்தைத் தோட்டம்! அவற்றின் நடுவில் எழுடுக்குக் கொண்ட கூட கோபுரம். என் கால்கள் தரையில் பாவ வில்லை. குதித்துக் கூத்தாடினேன். பெண்கள் குதித்துக் குதித்து ஓடினர்; ஆடினர். கூட கோபுரத்தில் ஏறுவதற்குப் படிகள் அமைத்திருந்தார்கள். பெண்கள் கூட்டம் ஏற ஆரம்பித்தது. லில்லி மட்டும் ஏனோ ஏறவில்லை!

நானும் ஓடி ஏறினேன். சீனிவாசனைக் கூப்பிட்டேன். "நீ மட்டும் சென்று பார்த்து வா நான் முன்பே பார்த்திருக்கிறேன்" என்றான். லில்லிக்கும் சீனிவாசனுக்கும் அதில் ஏறுவதற்குப் பயம் போலும் என்று நான் நினைத்துக் கொண்டேன். மற்றப் பெண்கள் படிகளில் ஏறினார்கள். நானும் அவர்களுடன் ஏறி உயரச் சென்றேன்.

உச்சிவரை சென்றோம். உயரவிருந்து சுற்றிச் சுற்றி வந்து மதுரை நகரின் அழகை ரசித்தோம். பரந்து கிடந்த வைகை ஆறு நிறைய மணல் கிடப்பதையும், ஒரு ஓரத்தே தண்ணீர் ஓடுவதையும் கண்டோம். அங்கு கிடந்த கரித்துண்டுகளைப் பெண்கள் பொறுக்கினர். சுவர்களில் தங்கள் தங்கள் பெயர்களை எழுதினர். இப்படியாக நெடு நேரம் அங்கேயே கழிந்து விட்டது.

முதன் முதல் நான் தான் கீழிறங்கினேன். ஒரு பன்னீர் மரத்தடியில், புஷ்பங்கள் உதிர்ந்து கிடந்தன. அருகில் புதரென மண்டிக் கிடந்த பூச்செடி. அதன் அருகில் உட்கார்ந்திருந்த இரண்டு உருவங்களில் சீனிவாசன் மட்டும் திடீரென எழுந்து மறைந்தான். லில்லியோ பதுமையென அசைவற்று உட்கார்ந்திருந்தாள். எனக்கு இதெல்லாம் புரியவில்லை.

அன்று அறைக்கு வந்தவுடன் சீனிவாசன் கவி பாட ஆரம்பித்து விட்டான். ஏதேதோ பேசினான். ஒரே குதூகலம் அவன் செய்கைகள் அனைத்திலும் பரிமளித்தன. அன்று சீராழி மண்டபத்தில் அவனும் லில்லியும் பேசி இருக்கிறார்கள். ஒருவர் மனத்தை ஒருவர் திறந்து காட்டினார்களாம்! அன்பும் காதலும் அணை கடந்து பிரவகித்ததாம்! அவளின்றி அவனும், அவளின்றி அவனும் வாழ முடியாது எனக் கண்டார்களாம்! முந்தைப் பிறவிகளின் விட்ட குறை, தொட்ட குறைதான் இந்த ஜன்மத்தில் தங்களைச் சேர்த்து வைத்துள்ளதாக இருவரும் பரிமாறிக் கொண்டார்களாம். இந்த ரீதியில் அவர்கள் பேச்சு சென்று கொண்டிருந்ததாம். திடீரென்று பிரத்தியட்ச உலகுக்கு வந்தார்களாம்! தங்களுக்கு எதிரே எத்தகைய படு பாதாளம் இருக்கிறது என்பதை உணர்ந்திருக்கின்றனர். ஜாதி மட்டுமில்லை; மதமும் வேறு. அவன் ஹிந்து மதம். அவள் கிறிஸ்துவ மதம். லில்லி தந்தைக்கு ஒரே பெண். உயர்ந்த பதவி வகிக்கிறார் அவள் தந்தை; தாய் கிடையாது. ஆனால் மாற்றாந்தாய் உண்டு. தாயார் இருந்தாலும் அவள் மனத்திலுள்ளதை மனம் விட்டுக் கூறலாம். ஆலோசனை கோரலாம். இப்போது அவன் யாரி





நீங்கள் எப்பொழுது பருத்தித் துணி வாங்கினாலும் சரி கரைப்பக்கத்தில் "ஸான்போரைஸ்ட்" குறி இருக்கிறதா என்று கவனிக்கவும். சுருங்காத துணி என்று உறுதியளிக்கும் "ஸான்போரைஸ்ட்" குறியை உலகம் முழுவதும் அறியும்.




SANFORIZED
ஸான்போரைஸ்ட்
சுருங்கச்செய்யப்பட்ட துணி

மூலம் முன்னாலேயே சுருங்கப்பட்டுள்ளது. ஆகையால் தைக்குமுன் அதை

NAS 959

டம் கூறுவது! தந்தையிடமா! ஒரு பெண் தனது தந்தையிடம் வெட்கத்தை விட்டுக் கூற முடியுமா என்ன, தனது திருமண விஷயத்தை! சீனிவாசன் தன் தாய் தந்தையரின் அபிப்பிராயத்தைத் தூக்கி எறிந்து விடும் மனப் பக்குவம் பெற்று விட்டான்!

பெற்றோர்களின் யோசனைகளைத் தூக்கி எறிந்து விடலாம்! ஊரார் இல்லையா! உற்றோர் இல்லையா! உலகம் என்ன சொல்லும்! இதுமாதிரி விஷயங்களெல்லாம் பேசி இருக்கின்றனர்.

ஆயினும் ஒரு திட்டமான முடிவுக்கே வந்து விட்டனர். யார் என்ன சொன்ன போதிலும், இந்த உலகமே எதிர்த்த போதிலும், தாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்தனராம்.

இதையெல்லாம் கேட்ட எனக்கு ஆச்சரியம் மட்டுமில்லை, பயமும் தோன்ற ஆரம்பித்தது. இதுவரை புரியாதிருந்த அநேக விஷயங்கள் புரிய ஆரம்பித்து விட்டன.

இவ்வளவெல்லாம் பேசி முடிவுக்கு வந்த அவர்களுக்குத் தீராத பிரச்சினையான விவாகத்தை எப்படி நடத்துவது என்ற விஷயம் பெரிய கேள்விக் குறியாக முன்னால் நின்றது. இந்தச் சிக்கலான பிரச்சினையைத் தீர்க்க என்னுடைய உதவியை நாடினான் சீனிவாசன்.

இந்த விஷயத்தில் நான் என்ன யோசனை கூற முடியும்! நான் என்ன பெரிய மனிதனா! அல்லது அனுபவசாலியா! இரண்டுமில்லை. வயதில் சிறிய பையன், இருந்தும் சிந்தித்தேன். கடைசியில் ஒரு வழி தென்பட்டது!

எங்கள் தெருவில் ஒரு வயதான மனிதர் இருந்தார். வயதானவர் என்றால் சுமார் நாற்பது வயது உடையவர். 'விதி என்ன செய்யும்!' என்று அடித்துப் பேசுவார். நாட்டில் சீர்திருத்தம் வேண்டும் என்று கொக்கரிப்பார். வெறும் பேச்சளவில்தான்! வீட்டில் அவர் மனைவியிடம் பெட்டிப் பாம்பாக அடங்கி விடுவார் அவர் ஞாபகம் வந்தவுடன், அவர் யோசனையைக் கேட்கலாம் என ஓடினேன். எனக்கு இதெல்லாம் அப்போது விளையாட்டாக இருந்தது. பின்னால் வரப்போகும் விளைவுகளைப் பற்றியோ, நிலைமைகளைப் பற்றியோ, அப்போது சிறிதுகூடச் சிந்தனைக்கு வரவில்லை!

விவரங்களைக் கேட்ட சீர்திருத்தப் பெரியவர் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை. இத்தனை நாள் அவர் வெறும் பேச்சளவிலே காலத்தைக் கடத்தி வந்தவர். இன்று இதோ பொன்னான சந்தர்ப்பம் ஒன்று வந்து கதவைத் தட்டுகிறது! இதை நழுவ விடுவாரா! "அடுத்த வீட்டுப் பிள்ளையே, பாம்பைப் பிடி!" என்றதைப்போல அவருடைய சீர்திருத்தத்துக்கு, யாரோ தானே பலியாகப் போகிறார்கள்!

அவரைச் சீனிவாசன் அறைக்குக் கூட்டி வந்து அறிமுகப் படுத்தினேன் அவர்களிருவரும் ஏதோ பேசி ஓர் முடிவுக்கு வந்தனர். வருகிற வெள்ளிக் கிழமை கல்யாணம் நடத்தி விடுவது என முடிவு செய்தனர். கல்யாணத்தை எப்படி நடத்துவது! ஹிந்து முறையிலேயா, கிறிஸ்தவ வழியிலேயா! இந்தப் பிரச்னை குறுக்கே நின்றது. சீனிவாசனுக்கு எது எப்படியாகிலும் சரி, கல்யாணம் நடக்க வேண்டும், அவ்வளவுதான்!

பெரியவர் என்னையும் கூட்டிக் கொண்டு அவர் வீடு திரும்பினார். அங்கு அவருக்குப் பேரிடி காத்து நின்றது. அவர் மனைவி ரௌத்ராகாரமாக நின்றாள். நான் வந்து கூறியதும், அவர் கேட்டு ஓடிவந்ததையும் கவனித்திருக்கிறாள். இது ஒன்று போதாதா கோபத்துக்கு? விஷயத்தைப் பணிவுடன் கூறி அவளுடைய ஆலோசனையைக் கேட்டார். கடைசியில் அந்த அம்மாள் கட்சிதான் ஜெயித்தது. ஹிந்து மதத்துக்கு விரோதமாக ஏதாவது அவர் நடந்தால், அவ்வளவுதான்! அவர் திரும்பவும் வீட்டிற்குள் நுழைய முடியாது என கண்டிப்பாக உத்தரவு போட்டு விட்டாள்.

ஆக, அழகர் கோவிலில் சென்று திருமணத்தை நடத்தி விடுவதென்றும், அதற்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் அவரே கவனித்துக் கொள்வதாகவும், விஷயம் பரம ரகசியமாக இருக்கவேண்டும் என்று எச்சரித்து என்னை அனுப்பினார். யாரிடமும் எதையாவது உளறி விடாதே என்றார். எனக்கு அப்போதிருந்த உற்சாகத்தில் நான் ஏதோ பெரிய



## வெள்ளி விழா

○●○

தமிழ் ஆசிரியர்களுக்கு யோக காலம் பிறந்து விட்டது. தமிழ் ஆசிரியர்களுக்கு மதிப்பும் மரியாதையும் செலுத்தி அவர்களைப் பாராட்டி விழாக் கொண்டாட மக்கள் ஆரம்பித்து விட்டார்கள். இலங்கை பறப்பாங்கண்டல் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலையின் தலைமை ஆசிரியர் ஸ்ரீ எம். டானியேல் ரோச் அவர்கள் ஆசிரியத் தொழிலில் ஈடுபட்ட இருபத்தைந்து ஆண்டுகள் முடிந்து விட்டன. இந்த சேவையைப் பாராட்டுவதற்காக வட இலங்கை கத்தோலிக்கப் பாடசாலைகளின் பிரதம முகாமைச் சேர்ந்த ஆதி. வண. மதுரநாயகம் பி. ஏ. அவர்கள் தலைமையில் வெள்ளி விழா கொண்டாடினார்கள். விழாவில் மாணவர்களும் ஆசிரியர்களும் பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ★ ★ ★



**ஜீவகளையுடனிருப்பதில்**
**பெருமிதம்—**
**பயங்கரமான**
## முதுகு வலி
**இப்பொழுது அறவே**
**ஒழிந்து விட்டதால்**

தினசரி தவறாமல் "க்ருஷன்" உட்கொண்டு வந்ததால் வலிகளினின்று நான் பெற்றுள்ள நிவாரணம் மிகவும் போற்றத் தக்கது என்பதை அவசியம் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. பல வருஷங்களாக முதுகு வலியால் அவஸ்தைப் பட்டதில், என்னால் நினைத்துக் கூடப் பார்க்க மாட்டாத அளவுக்கு நோயின் பொருட்டு விடுமுறை பெற்று வந்தேன். பலவிதமான மின்சார சிகிச்சை, நிவாரண-தேகாப்பியாசங்கள் முதலியன செய்தும், "க்ருஷன்" மார்க்கத்தைப் பின்பற்றும்வரை அவ்வலிகள் இருந்து கொண்டே இருந்தன. இப்பொழுது நான் முற்றிலும் புதிய மனிதனாயிருப்பதாக உணர்கிறேன்."—W. R.

தீராத முதுகு வலிக்கு மூல காரணம் உட்புற அவயவ சம்பந்தமானது. மூத்திர கோசங்கள் கழிவுப் பொருள்களை உடலிலிருந்து சரிவர வெளியேற்றாவிடில் விஷ அமிலங்கள் ரத்தத்தில் ஊறிக்கலந்து முதுகு வலியை உண்டாக்குகின்றன. க்ருஷனிலுள்ள ஆறுவித முக்ய உப்புக்கள் மந்தித்த மூத்திர கோசங்களை மெதுவாக ஊக்கி நன்கு இயங்கச் செய்வித்து ரத்த ஓட்டத்திலுள்ள அசுத்தங்களை துரிதமாக சுத்திகரிக்கின்றன. தினசரி தவறாமல் கொஞ்சம் "க்ருஷன்" உட்கொண்டு வந்தால் முதுகு வலி ஒரு நாளும் திரும்பி வராமல், ஒழிந்து போகும்.

**"க்ருஷன்"** உங்கள் ஆரோக்கியத்திற்கும் ஆனந்தத்திற்கும் உதவுகிறது

KSA—2

தொரு காரியத்தைச் சாதித்து விட்டதைப் போன்று ஒரு திருப்தி ஏற்பட்டது.

திருமணம் நடத்தும் விஷயம் இருவரின் பெற்றோர்களுக்கும் அறிவிக்காமல் செய்து விடுவதாக முடிவு. ஆக சீனிவாசன், லில்லி, நான், அந்தப் பெரியவர், அவருடைய மனைவி இந்த ஐவரைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

அழகர் கோவிலுக்கு ஐவரும் சென்றோம். சீனிவாசனுக்கு மறுபடியும் ஏக்கம் பிடித்துக் கொண்டது. லில்லி குதூகலத்துடன், குழந்தை மாதிரி பேசிக்கொண்டே வந்தாள். அவளுக்குத்தான் எத்தனை நம்பிக்கை! தன்னைப் பெற்று, பரிவுடன் வளர்த்துக் காத்து வந்த தந்தையைக் காட்டிலும், நேற்றுப் பழகிய சீனிவாசனிடத்தில் எவ்வளவு பெரிய நம்பிக்கை அவள் வைத்திருக்க வேண்டும்!

கோவில் பட்டர் முன்னிலையில் ஹிந்து சம்பிரதாயப்படி விவாகம் நடந்தது. மாலையே வீடு திரும்பி விட்டோம்.

வீட்டுக்கு வந்ததும் என்னைப் பயம் பிடித்துக் கொண்டது. எவ்வளவு பெரிய பயங்கரக் குற்றத்தைப் புரிந்திருக்கிறோம்! இதன் விளைவுகள் எங்கு கொண்டு போய் நிறுத்தும்! இந்தச் சிந்தனை வந்தது. எங்கு கொண்டு போய் நிறுத்தும்! போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் நிறுத்தும்! ஆக ஒரு வாரம் வீட்டை விட்டு வெளியே வராமல் கிடந்தேன். எங்கள் வீட்டில் கூட ஆச்சரியப் பட்டார்கள். பையனுக்குப் படிப்பில் அக்கறை விழுந்து விட்டதைப் பார் என்று அதிசயித்தனர்.

லில்லியின் தந்தை என்னை அழைப்பதாக ஒரு நாள் தகவல் வந்தது. எனக்குப் பயம் ஆட்ட ஆரம்பித்தது. என்ன செய்வது! வருவதை அனுபவித்தே தீர வேண்டியதுதானே! இருந்தும் தைரியத்தைக் கை விடாமல் சென்றேன்.

அவர் நடந்த விவரங்களைக் கேட்டார். அவர் வார்த்தையில் சோகம் நிறைந்திருந்தது. அவர் முகம் பேயறைந்தது போல் வெளிறிட்டிருந்தது. எல்லா விவரங்களையும் நடந்தது நடந்தபடி ஆதியோடந்தமாகக் கூறினேன். நீண்ட நேரம் யோசித்தார். அடிக்கடி பெருமூச்சுக் கிளம்பியது. கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தவர் போல் தோன்றினார். "சிந்திய பால்" என்று அவர் வாய் முணுமுணுத்தது. ஒரே வார்த்தையில் எவ்வளவு சுலபமாக முடிவுக்குக் கொண்டு வந்து விட்டார்!

சீனிவாசனைக் கூட்டிவரச் சொன்னார். அழைத்து வந்தேன். ஏனோ சீனிவாசனைப் பார்த்ததும் தலையைக் கவிழ்த்துக் கொண்டார். அவனும் நிமிர்ந்து பார்க்கவில்லை. லில்லியோ அறையை விட்டு வெளி வரவேயில்லை. எத்தனை நேரம் இந்தப் பயங்கர அமைதி நீடித்திருந்ததோ!

திடீரென்று லில்லியின் தந்தை பேச ஆரம்பித்தார். மிகுந்த மரியாதையுடன் பேசினார். அவர் குரல் கம்மியது. "சீனிவாசன்! செய்யத் தகாத காரியத்தைச் செய்து விட்டீர்கள்! உங்களைப் போன்ற ஒரு படித்த வாலிபர் உலகத்தைப் பற்றிச் சிந்திக்காமல் அவசரப்பட்டுத் தப்பான காரியத்தில் இறங்கி விட்டது விதியின் செயலேதான்! அந்த மட்டில் ரகசியமாக வைத்திருந்தீர்களே, அது பாராட்டப்பட வேண்டியதுதான். இனி ஏன் அதைரியப்படுகிறீர்கள்? தயங்க வேண்டிய காலம் என்றோ போய்விட்டது. தைரியமாக மேல் நடக்க வேண்டியதைப் பற்றி யோசியுங்கள். என் வரையில் ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். இனி அவள் உமக்குச் சொந்தமானவளே! உமது பரீட்சையில் நீர் வெற்றி பெற்று விடுவீரா! வாழ்க்கைப் பரீட்சையில் நான் கேட்கவில்லை!"

"நிச்சயம் தேர்ந்து விடுவேன்" என்று உறுதியாகச் சொன்னான் சீனிவாசன்.

"கடைசியாக எனக்கு நீர் செய்ய வேண்டிய பெரிய உதவி ஒன்றுண்டு; அதைச் செய்ய வேணும்!" என்றார் லில்லியின் தந்தை.

"சொல்லுங்கள், செய்கிறேன்!" என்றான்.

"உமது பரீட்சை முடிவு வரையில் இந்த ரகசியம் காப்பாற்றப்பட வேண்டும், அதுவரை நீங்கள் இருவரும் சந்திக்கக் கூடாது. லில்லியிடமும் கூறியிருக்கிறேன்" என்றார்.

சீனிவாசன் குனிந்து அவர் காலைப் பற்றி, "செய்கிறேன், செய்கிறேன்!" என்றான். அப்பொழுது அவன் கண்களில் நீர் அருவியென வழிந்தோடியது. அவர் வேறு பக்கம் திருப்பிக் கொண்டார். நான் என் கண்களைத் துடைத்துக் கொண்டேன்.

அவர்தான் எத்தனை பெரிய மனிதர்! எவ்வளவு உயரிய பண்புள்ளவர்!

பரீட்சை முடிவு வெளியாயிற்று. சீனிவாசன் வெற்றிச் செய்தியை அறிவிக்க லில்லியின் தந்தையைத் தேடிச் சென்றான். அவர் அவனை எதிர் பார்த்தே இருந்தவர் போலத் தோன்றினார்.

உமது வெற்றியை அறிந்து மிக்க மகிழ்ச்சி கொண்டேன். 'இந்தாரும், இதை வைத்துக் கொள்ளும்' என இரு டிக்கட்டுகளைக் கொடுத்தார். பம்பாய்க்கு இரு முதல் வகுப்பு டிக்கட்டுகள். அன்றைய ரயிலுக்கு வாங்கியிருக்கிறார். லில்லி சர்வாலங்கிருத பூஷிதையாய் வந்து நின்றாள். அவள் உடம்பில் தங்கமும் வைரமுமாக சுமார் பத்தாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் மின்னிக் கொண்டிருந்தன.

"சீனிவாசா! லில்லியைப் பொறுத்த வரையில் என் கடமை இன்றுடன் தீர்ந்தது. இனி நீதான் அவளுக்குத் தாய், தந்தை எல்லாம். பத்தாயிரம் ரூபாய்க்கு அவளுக்கு நகை போட்டிருக்கிறேன். இன்னொரு பத்தாயிரம் ரூபாய் ரொக்கம் தருகிறேன். பம்பாயிலுள்ள என் நண்பருக்கு ஒரு சிபாரிசுக் கடிதமும் தருகிறேன். அவர் உங்களைக் கவனித்துக் கொள்வார். உமக்குத் தகுந்த உத்தியோகம் செய்து வைக்கச் சொல்லிக் கடிதத்தில் எழுதியிருக்கிறேன். கர்த்தர் உங்களை ரட்சிக்கட்டும்!" என்றார் லில்லியின் தந்தை.

இருவரும் அவர் காலில் விழுந்து வணங்கினர்.

* * *

சீனிவாசனின் தந்தைக்குப் பல நாள் கழித்தே விஷயம் தெரியுமாம். முட்டிக் கொண்டார், மோதிக் கொண்டார். மகனைக் கல்லூரிப் படிப்புப் படிக்க வைத்த பலன்தான் இது என்று அரற்றிக் கொண்டார். கடைசியில் தனது புதல்வனை இழந்து விட்டதாகவே கருதி விட்டார்.

பத்து வருடங்கள் கழித்த பிறகு அவருக்குப் பல விதங்களிலும் கஷ்டம் வந்து கஷ்டமடைந்து மகனைத் தேடிப் பம்பாய்க்குச் சென்றிருக்கிறார். அங்கு சீனிவாசன் உன்னத நிலையில் இருப்பதை அறிந்து மகிழ்ந்தார். பின் என்ன! எல்லோரும் ஒன்றாகி விட்டார்கள்! ஆனால் லில்லியின் தந்தையைப் பற்றி, அந்த உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமரைப் பற்றி இன்றளவும் எங்கிருக்கிறார், என்ன செய்கிறார் என்ற விவரம் தெரியவே இல்லை.

"ராஜாராமா! இதுதான் உண்மைக் காதல்! உனது காதல் இத்தன்மையதுதானா?"

"அண்ணா! லில்லிக்கிருந்த தைரியம் இவளுக்கு வரவில்லையே!" என்றான்.

"உனக்கு மட்டும் சீனிவாசனுக்கிருந்த தைரியம் வந்து விட்டதாக்கும்!" என்று கேட்டேன்.

ராஜாராமன் அங்கிருந்து மெள்ள நழுவினான்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Prees
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10


நாள் முழுவதும்
காலை வேளையில்
புத்துணர்ச்சி
பிற்பகலில்
அளிக்க . . .
இரவில்
Himalaya Bouquet
Himalaya Bouquet
குளுமையான, நறுமணம் கொண்ட
ஹிமாலயா புக்கே
பௌடர்களை
உபயோகியுங்கள்
இரண்டு நேர்த்தியான பௌடர்கள்
ஹிமாலயா புக்கே ஸ்னோ எல்லா சீதோஷ்ண நிலைகளிலும்
சருமத்தைப் பாதுகாக்கிறது.
HIMALAYA BOUQUET SNOW
லண்டனுக்காக இந்தியாவில் தயாரித்தவை
HBP. 8-X20 TM

REGD. No. M. 4392

*Registered as a newspaper in Ceylon*




L. 230-50 TM